Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு - 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 மாசி 18 ஞாயிற்றுக்கிழமை (02.03.2014) பக்கங்கள் 20 ஓசை - 152

08
அதிரடி




18
முதலிடம்



# அரசியல் அதிகாரப் பகிர்வின் மூலம் தேவையானதைப் பெற வேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



(பருத்தித்துறை)

சமகால அரசியல் அதிகாரப் பகிர்வை பயன்படுத்தி எமது மக்களுக்குத் தேவையானவற்றைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மாணவர் விடுதித் திறப்பு நிகழ்வில் நேற்றைய தினம் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்நாட்டின் புகழ் பூத்த பாடசாலையின் நிகழ்வில் கலந்து கொள்வதையிட்டு மகிழ்ச்சியடையும் அதேவேளை, இவ் விடுதி வசதியை ஏற்படுத்தித் தந்த கல்லூரியின் பழைய மாணவர் லயன் கிருபாகரன் அவர்களுக்கும், அவர்தம்

19 ஆம் பக்கம் பார்க்க...

# இலங்கையின் இறைமையை மதிக்க வேண்டும் சர்வதேசம்

## அமெரிக்க செனட் உறுப்பினர்கள் 11 பேர் தீர்மானம்

இலங்கையின் இறைமை, உறுதிப்பாடு ஆகியவற்றைக் கவனத்தில் கொண்டு உள்நாட்டுப் பொறிமுறைக்கு ஆதரவு வழங்குவது குறித்து அமெரிக்காவும், சர்வதேச சமூகமும் கவனம் செலுத்த வேண்டுமென வலியுறுத்தி அமெரிக்காவின் 11 செனட் சபை உறுப்பினர்கள் புதியதொரு தீர்மான வரைபை அமெரிக்க செனட்டில் கடந்த வியாழக்கிழமை சமர்பித்துள்ளனர்.

ஜேம்ஸ் இன்ஹோபி, ஜோன் கோர்னின், ஓரின் ஹட்ச், ஜோன பராசோ, ரோய் புளுன்ற், ஜோன மன்சின். ஜெப் செசென்ஸ், ஜோன் பூஸ்மன், மைக் கிராப்போ, சுசன் கொலின்ஸ், மைக் என்சி ஆகிய செனட் உறுப்பினர்களே இதில் கையெழுத்திட்டுள்ளனர்.

இவர்களில், 10 பேர் குடியரசுக் கட்சியையும், ஒருவர் அதிபர் ஒபாமாவின் ஜனநாயக கட்சியையும் சேர்ந்தவர்களாவர்.

இந்த இரண்டு தீர்மான வரைவுகளையும் சமர்ப்பித்துள்ள செனட் உறுப்பினர்கள், இலங்கை தொடர்பாக மனித உரிமைகள், ஜனநாயகம், சட்டத்தின் ஆட்சி, மற்றும் பொருளாதார மற்றும் பாதுகாப்பு நலன்களுக்கு மதிப்பளிக்கும் வகையிலான கொள்கையை ஒபாமா நிர்வாகம், கடைப்பிடிக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர்.

19 ஆம் பக்கம் பார்க்க...

## நவிப்பிள்ளையின் அறிக்கைக்கு அமெரிக்க அதிகாரிகள் ஆதரவு

இலங்கையில் இடம்பெற்ற மனிதஉரிமை மீறல்கள் தொடர்பாக, அனைத்துலக விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று ஐ.நா. மனிதஉரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை சமர்ப்பித்துள்ள அறிக்கைக்கு, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் மூத்த அதிகாரிகளான சமந்தா பவர், நிஷா தேசாய் பிஸ்வால் ஆகியோர் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

நவநீதம்பிள்ளையின் அறிக்கை தொடர்பாக, தனது டுவிட்டர் பக்கத்தில், கருத்து வெளியிட்டுள்ள, ஐ.நா.வுக்கான அமெரிக்காவின் நிரந்தரத் தூதுவர் சமந்தா பவர், இலங்கை ஜனநாயக ஆட்சி முறைக்கும், மனித உரிமைகளுக்கும் மதிப்பளிக்க வேண்டும் என்றும், மத வன்முறைகள் அதிகரித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மீறல்கள் தொடர்பாக விசாரணை நடத்த வேண்டும் என்று ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் விடுத்துள்ள அழைப்புக்கு தாம் ஆதரவளிப்பதாகவும் அதில் தெரிவித்துள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க...

## மாங்குளத்தில் சிறுவனைக் காணவில்லை

முல்லைத்தீவு மாங்குளம் ஏ9 குஞ்சுகுளம் பிரதேசத்தை சேர்ந்த ஞானசேகரம் டிலக்கசன் (வயது-12) எனும் சிறுவனைக் காணவில்லை என சிறுவனின் பெற்றோர்கள் கனகராயன்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது கடந்த

19 ஆம் பக்கம் பார்க்க...

## இலங்கையில் நிரந்தர சமாதானம்; பிரிட்டன் முழுமையான ஆதரவு

இலங்கையில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த பூரண ஆதரவளிக்கப்படும் என பிரித்தானியா தெரிவித்துள்ளது.

நிரந்தர சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த முழு அளவில் ஆதரவளிக்கப்படும் என அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சர் ஹியூகோ ஸ்வாயர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையினால் வெளியிடப்பட்ட அறிக்கையை வரவேற்பதாகவும் தெரிவித்துள்ளார்.

2013 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணை

19 ஆம் பக்கம் பார்க்க...

## இலங்கையில் ஊடக தணிக்கை; அறியவில்லை என்கிறது ஐ.நா.

இலங்கையில் சில ஊடக் நிறுவனங்கள் அல்லது இணையத்தளங்கள் தணிக்கை செய்யப்பட்டுள்ளமை மற்றும் தடை செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் தாம் அறியவில்லை என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

கொழும்பில் இணையத்தளமொன்று அண்மையில் தடை செய்யப்பட்டுள்ளமை தொடர்பாக வெளியாகியுள்ள அறிக்கை தொடர்பில் நியூயோர்க்கில் ஐ.நா. பேச்சாளரிடம் செய்தியாளர்கள் கேட்ட போது அந்தச் சம்பவம் பற்றி தமது அமைப்புக்கு அறிவிக்கப்படவில்லை எனத் தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள ஐ.நா குழுவினர் ஐ.நா. அமைப்பு தொடர்பான பிரச்சினைகளை

19 ஆம் பக்கம் பார்க்க...

## மூங்கிலாறு மனித எச்சங்கள்; இராணுவத்திற்கு தொடர்பில்லை

### பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவிப்பு

முல்லைத்தீவு - மூங்கிலாறு பகுதியில் மீட்கப்பட்ட மனித எச்சங்களுக்கும், தமக்கும் எவ்வித தொடர்புமில்லையென இராணுவம் தெரிவித்துள்ளது.

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிக சூரிய விடுத்துள்ள விசேட அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

உடையார்கட்டுப் பகுதியில் விவசாயத்துக்காக ஒரு பகுதி நிலம் தோண்டப்பட்ட போது, மனித எலும்புக்கூடு ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து பின்னர், அங்கு மேலும் 8 மனித எச்சங்கள் நேற்று

19 ஆம் பக்கம் பார்க்க...

## 'ஆவா' குழுத் தலைவரின் விளக்கமறியல் நீடிப்பு

யாழ். மாவட்டத்தில் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டமை தொடர்பில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட 'ஆவா' குழுவின் தலைவரை எதிர்வரும் 13ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிபதி பொ. சிவகுமார் நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

யாழ்.மாவட்டத்தில் கொலை, கொள்ளை உள்ளிட்ட பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபட்டு

19 ஆம் பக்கம் பார்க்க...

உள்ளே
தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாள்





பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் மாணவர் விடுதி சுமார் 6 கோடி ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு நேற்றைய தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. அதிபர் எஸ்.தெய்வேந்திரராஜா தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினரான பழைய மாணவர் கரன், ஜேர்மன் தூதுவர் நாடாவெட்டி விடுதியை திறந்து வைப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரையும் விடுதியின் தோற்றத்தையும் காணலாம்.

# இளம் ஜோடி ஒன்றினால் பதிவாளர் வீட்டில் களேபரம்

சட்டப்படி பதிவுத் திருமணம் செய்வதற்காகத் திருமணப் பதிவாளர் வீட்டுக்கு வந்த இளம் ஜோடி ஒன்றினால் பதிவாளர் வீடு பெரும் அல்லோலகல்லோலகத்துக்கு இலக்கானது.

கடந்த வியாழக்கிழமை பிற்பகல் தாவடியில் இச் சம்பவம் இடம்பெற்றது.

தாவடிப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் இணுவிலைச் சேர்ந்த யுவதியொருவருடன் காதல கொண்டார். பெண் வீட்டார் இதனை அனுமதிக்கவில்லை. இதனால் யுவதி காதலனுடன் வீட்டை விட்டு வெளிக் கிளம்பி சென்றுவிட்டார்.

சில நாட்கள் கழிந்த நிலையில் இருவரும் தமது கல்யாணப பதிவை மேற்கொள்வதற்காகத் தாவடியில் உள்ள திருமணப் பதிவாளர் வீட்டுக்கு வந்துள்ளனர். இது எப்படியோ யுவதியின் உறவினர்களுக்குத் தெரிய வந்தது. அவர்கள் பதிவாளரின் வீட்டை நோக்கிப் படையெடுத்து வந்து அமளிப்பட்டதனால் சில மணிநேரம் பதிவாளர் வீட்டுக்கு முன்பாகப் பெரும் கூட்டம் கூடியது.

தர்க்கப்பட்டதினால் சிலர் அயல காணிகளுக்குள் பாய்ந்து ஓடியதுடன் மற்றும் சிலர் வீட்டு மதில்களுக்கு மேலால் பாய்ந்து ஓடியதினால் அயல்பகுதிகளிலும் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இக் களேபரத்தில் மாப்பிள்ளையும் காயத்துக்குள்ளாகியதாகத் தெரிவிக் கப்பட்டது.

இது சம்பந்தமாக சுன்னாகம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (137)

# கைத்தொழில் பேட்டையின் முதலீட்டாளர்கள்

## தொழில் நடவடிக்கையை ஆரம்பிக்க ஏற்பாடு

(அச்சுவேலி)


அச்சுவேலி கைத்தொழிற் பேட்டையின் முதலீட்டாளர்கள் தமது தொழிற்துறை நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் பொருட்டு, ஆரம்பக் கட்டுமானப் பணிகளை உடனடியாகத் தொடங்குமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பணிப்புரை விடுத்துள்ளார்.

அச்சுவேலி, கைத்தொழிற் பேட்டை வளாகத்தில் நேற்று இடம்பெற்ற தொழிற்துறை முதலீட்டாளர்களுடனான கலந்துரையாடலின் போது அவர் இப் பணிப்புரையை விடுத்துள்ளார்.

இதன்போது, தொழிற்துறை முதலீட்டாளர்கள் தமது தொழில் நடவடிக்கைகளின் போது எதிர்நோக்கும் இடர்பாடுகள் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

குறிப்பாக, பிரதேச சபை, மத்திய சுற்றாடல் அதிகார சபை, தொழிற் திணைக்களம் மற்றும் பிரதேச செயலகம் ஆகியவற்றினது அனுமதிகளைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் விஷேட கவனம் செலுத்தப்பட்டது.

அத்துடன், முதலீட்டாளர்கள் தமது தொழில் நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் பொருட்டு, ஆரம்பக் கட்டுமானப் பணிகளை



ஆரம்பிக்குமாறு பணிப்புரை விடுத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இதன்போது எதிர்நோக்கப்படும் இடர்பாடுகள் தொடர்பிலும் துறைசார்ந்தோரிடம் கேட்டறிந்து கொண்டதுடன், அவை தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆராய்ந்தார்.

இதனிடையே, தொழிற்துறை முதலீட்டாளர்களுக்கான காணிப் பங்கீடுகள் மற்றும் வங்கிகள் ஊடான இலகு கடன் திட்டங்கள் உள்ளிட்ட ஏனைய விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப் பட்டது.

இந்நிலையில், 07 வெவ்வேறு தொழிற்துறை முதலீட்டாளர்களுக்கான காணிப்பங்கீடுகள் தொடர்பில் அமைச்சர் துறை சார்ந்தோர் ஊடாக நேரில் ஆராய்ந்து அறிந்து கொண்டார்.

இதன்போது, கோப்பாய் பிரதேச செயலர் பிரதீபன், கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பிரதிப் பணிப்பாளர் சிவகெங்காதரன், மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சிரேஷ்ட சுற்றாடல் உத்தியோகத்தர் ஜீவபாபு, ஈ.பி.டி.பி.யின் கோப்பாய் பிரதேச இணைப்பாளர் ஐங்கரன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# அதிகரித்தது தேங்காய் விலை

(வரணி)

தென்மராட்சி பொதுச் சந்தைகள் மற்றும் வர்த்தக நிலையங்களில் சற்று குறைவடைந்த தேங்காய் விலை தற்போது மீண்டும் அதிகரித்துள்ளது.

தற்போது 40,45 ரூபா என்ற விலைகளில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

தற்போது அறுவடைக் காலம் என்பதால் சந்தைகளுக்கு தேங்காய் வரவு குறைவடைந்துள்ளதாக சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (150)

நியத்த ஜய
உத்தியோகபூர்வ முடிவு
வெற்றி வாரம் 235 | திகதி 2014.02.28 | வர்ணம் நீலம்
வெற்றி இலக்கங்கள்
ஆங்கில எழுத்து
02 20 42 59 Q
பரிசுத் தொகை ரூபா. 13,800,060/- வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுக்கு | 1,000,000/- | 01 | 1,000,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 50,000/- | 06 | 300,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்களுக்கு | 1,000/- | 221 | 221,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 1,000/- | 403 | 403,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்களுக்கு | 60/- | 9697 | 581,820/- |
| ஏதேனும் 1 இலக்கம் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 40/- | 5136 | 205,440/- |
| ஏதேனும் 1 இலக்கத்திற்கு | 20/- | 127079 | 2,541,580/- |
| ஆங்கில எழுத்திற்கு | 20/- | 18283 | 365,660/- |
| நான்கு இலக்கங்கள மற்றும் ஆங்கில எழுத்து பொருந்துவதன் மூலம் | 13,800,060/- | - | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 5,618,500/- |

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்தொகை ரூபா. 14,048,900/-
2014.03.04ம் திகதி செவ்வாய்க்கிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது மஞ்சள் வர்ண டிக்கட்களாகும்
வெற்றி பெறும் டிக்கட்கள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும்.
நியத்த ஜய
வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் ப்லேஸ், கொழும்பு - 02.
தொ.பே: 011 2333546/47
(C/3339)
web : www.dlb.lk

# பொருட்களுக்கான நட்டத்தை வழங்க பிரதேச சபை நடவடிக்கை எடுக்கவேண்டும்

## மனித உரிமை ஆணைக்குழு அறிவுறுத்து

(திருநெல்வேலி)

திருநெல்வேலி சந்தையில் வியாபாரம் செய்து வந்த வியாபாரிகளிடமிருந்து உருளைக்கிழங்கு மற்றும் சிறிய பெரிய வெங்காயத்தை நல்லூர் பிரதேச சபையின் வருமான உத்தியோகத்தருடன் வந்த பத்துப் பேருக்கு மேலான பிரதேச சபை ஊழியர்கள் எந்தவித முன்னறிவித்தலுமின்றி பிரதேச சபை வாகனத்தில் ஏற்றிச் சென்றுவிட்டதாக இலங்கை மனி உரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகத்தில் முறையிடப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாகக் கடந்த 18 ஆம் திகதி விசாரணை ஒன்று யாழ்.அலுவலகத்தில் இடம்பெற்றது. 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் முதல் நல்லூர் பிரதேச சபையுடன் மேற்கொண்ட குத்தகை ஒப்பந்தத்தின் அடிப்படையில் பல்பொருள் வாணிபத்தில் தாம் ஈடுபட்டு வந்ததாக இவ் வியாபாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

பிரதேச சட்டத்தின் கீழ். சந்தைகளை ஒழுங்குபடுத்தும் அதிகாரங்களைப் பயன்படுத்தி தமது நிர்வாகத்தின் கீழ் இயங்கும் சந்தையில் வியாபாரிகளின் நலன்களைப் பேணும் முகமாக பிரதேச சபைத் தீர்மானத்தின் அடிப்படையில் முறையீட்டாளர்களுக்கு சில்லறை வியாபாரத்தில் ஈடுபடுவதற்குத் தடை விதித்து வந்ததாகவும் வருமான வரி உத்தியோகத்தர் தெரிவித்தார்.

சபைக்கே அதிகாரம் உள்ளதாகவும் தவிசாளர்களுக்கோ அல்லது செயலாளருக்கோ இதனைத் தடை செய்யும் அதிகாரம் இல்லை எனவும் ஆணைக்குழுவினால் தெரிவிக்கப்பட்டது.

பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 119 இற்கு அமைய சந்தைகளை ஒழுங்குபடுத்தும் தத்துவம் பிரதேச சபைக்கு உண்டு எனக் குறிப்பிடுகின்ற போதிலும் முறைப்பாட்டாளர்களுக்கும், பிரதேச சபைக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தத்தில் உருளைக்கிழங்கு மற்றும் வெங்காயம் என்பன விற்கமுடியாது என்பது பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை என ஆணைக்குழு தெரிவித்துள்ளதுடன் பொருட்களுக்கான நட்டத்தை வழங்க பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளது.

இது பற்றி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் குறிப்பிட்ட வருமானவரி உத்தியோகத்தர் மீது உரிய விசாரணை மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

முறைப்பாட்டாளரின் நலன்களைக் கவனிக்க சட்டத்தரணி ஜொனி மதுரநாயகம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளார். (137)

# கழிவுகளை காணிகளுக்குள் வீசுவதால் நோய் தொற்றுக்கு உள்ளாகும் சிறுவர்கள்

## விசனம் தெரிவிக்கும் மக்கள்

(யாழ்ப்பாணம்)

புங்கன்குளம் நகரப் பகுதியில் காணப்படும் வெற்றுக் காணிகளுக்குள் கழிவுப் பொருட்கள், குப்பை கூழங்களை போடுவதால் அப்பகுதிகளில் உள்ள மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாக கவலை தெரிவித்துள்ளனர்.

புங்கன்குளம் நகரப் பகுதிகளில் உள்ள வீடுகளில் வசிக்கும் மக்கள் தமது வீட்டில் இருக்கும் கழிவுப் பொருட்கள், குப்பை கூழங்கள், மிகுதியான உணவுகள் போன்றவற்றை வெறுமையான காணிகளுக்குள் வீசி விடுகின்றனர். இதனால் அந்த வீதிகளூடாகப் பயணிக்கும் மக்கள் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

மேலும் நகரை அசுத்தப்படுத்தும் பொருட்கள் பலவற்றையும் அங்கு வீசுவதால் தெரு நாய்கள் அவற்றை அசிங்கப்படுத்தி வீதிகளுக்கு இழுத்துச் செல்கின்றன.

இவ்வாறான செயற்பாடுகளால் வீதிகள் அசுத்தமாவதோடு அப்பகுதியில் வசிக்கும் சிறார்கள் நோய்த்தொற்றுக்கு உள்ளாகி வருகின்றனர் என பாதிக்கப்பட்ட மக்கள் குற்றச்சாட்டினை முன்வைத்துள்ளனர்.

எனவே இவ்வாறான செயற்பாடுகளை நிறுத்த காணி உரியையாளர்கள் பொறுப்புடன் செயற்பாட்டால் அப்பகுதிகளில் நோய்த்தொற்று, நுளம்புத் தொல்லைகளைக் குறைக்க முடியும் எனவும் வீதிகளை சுத்தமாக வைத்திருக்க முடியும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## புகையிலை பயிர் பாதிப்பு

மண்டைதீவுப் பகுதியில் உள்ள கிணறுகளில் நீர் நிலைகள் குறைவடைவதால் அப்பகுதியில் உள்ள புகையிலை தோட்டங்களுக்கு நீர்ப்பற்றாக்குறை ஏற்படுவதாக மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்த வருடம் மழை வீழ்ச்சி குறைவடைந்தமையினால் நீர் நிலைகள் குறைவடைந்துள்ளது. இதனால் விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கிவருவதாகத் தெரிவித்துள்ளனர்.

1000 கன்று புகையிலையை நாட்டியவர்கள் தமது தோட்டங்களுக்கு கிணறுகள் மூலம் நீரைப் பாய்ச்ச 3 நாட்கள் தேவைப்படுவதாகவும் இதனால் புகையிலை கன்றுகள் கருகும் நிலை ஏற்படுவதாகவும் தெரிவித்துள்ளனர். எனவே தோட்ட நிலங்களிலும் எதிர் வரும் காலங்களில் பயிர் செய்கைகளை மேற்கொள்ள முடியாமல் போய் விடுமோ என மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (23)

# வன்னி பிரதேச மக்கள் வங்கியில் அடகுவைத்த நகைகள் ஏலவிற்பனை

## வங்கி முகாமையாளர் தகவல்

வன்னி பிரதேச மக்கள் வங்கியில் கடந்த வருடம் டிசம்பர் மாதத்துக்கு முன்னர் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளதாக வன்னிப் பிராந்திய வங்கி முகாமையாளர் அறிவித்துள்ளார்.

கிளிநொச்சி, பரந்தன், பளை, மல்லாவி, கனகராயன் குளம், ஒட்டு சுட்டான், முல்லைத்தீவு, செட்டிக்குளம், நெடுங்கேணி, வவுனியா, மன்னார் கிளைகளில் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் ஏலவிற்பனை செய்யப்படவுள்ளன.

ஏல விற்பனை கிளிநொச்சி, முருங்கன், முல்லைத்தீவு, மாங்குளம், செட்டிக்குளம், வவுனியா, மன்னார் ஆகிய பிரதான நிலையங்களில் எதிர்வரும் 15ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (105)

# "பயிர் மேயும் வேலிகள்" நாவல் வெளியீட்டு விழா

(கிளிநொச்சி)

கலாபூஷணம் நாவற்குழியூர் செல்லையா குமாரசாமி எழுதிய பயிர் மேயும் வேலிகள் என்ற நாவலின் வெளியீட்டு விழா கடந்த வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நாவற்குழி சித்திவிநாயகர் ஆலய முன்றலில் இடம்பெற்றது. சித்தி விநாயகர் அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் அதன் செயலாளர் கோ.ஜீவபாலன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் பேராசிரியர் க.தேவராஜாவும் சிறப்பு விருந்தினராக இலங்கை திறந்த பல் கலைக்கழக விரிவுரையாளர் வி.யதுஷனும் கலந்து கொண்டனர்.

மூத்த எழுத்தாளர் கே.எஸ்.ஆனந்தன் வாழ்த்துரை வழங்கினார். நூலின் வெளியீட்டுரையை பருத்தித்துறை பிரதேச செயலர் கவிஞர் த.ஜெயசீலனும் ஆய்வுரையை கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசனும் வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (90)

# இளைஞர் சேவைமன்ற நிர்வாக சபை கூட்டம்

(மானிப்பாய்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ்.மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத்தின் 2013ஆம் ஆண்டிற்கான இறுதி நிர்வாக சபைக் கூட்டம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணிக்கு இடம் பெறவுள்ளது.

மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத் தலைவர் ச.லக்ஷன் தலைமையில் இடம்பெறும் இக்கூட்டம் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ்.மாவட்ட காரியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இக் கூட்டத்தில் அனைவரையும் தவறாது சமூகம் தருமாறு மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி வினோதினி ஸ்ரீமேனன் அறிவித்துள்ளார். (48)

# சென்.பெனடிற் வீதி புனரமைப்பு பணி ஆரம்பம்

குன்றும் குழியுமாக சேதமடைந்த நிலையில் காணப்பட்ட அரியாலை சென்.பெனடிற் வீதி மீள் புனரமைப்பதற்கான பணிகள் மேற் கொள்ளப்பட்டு வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

மிக நீண்டகாலமாக சேதமடைந்த நிலையில் இருந்த மாநகர சபை எல்லைக்குட் பட்ட இந்த வீதியை மீண்டும் புனரமைப்பு செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (23)

# சட்டவிரோத மின்சாரத்தை பாவித்த 5 பேர் கைது

நெல்லியடி மண்டான் பகுதியில் சட்ட விரோதமான முறையில் மின்சாரம் பெற்று வந்த 5 பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

கடந்த திங்கட்கிழமை இப்பகுதியில் இலங்கை மின்சாரசபை அதிகாரிகளும் நெல்லியடி பொலிஸாரும் இணைந்து மேற் கொண்ட திடீர் பரிசோதனை நடவடிக்கையிலே இவர்கள் ஐவரும் கைது செய்யப்பட்டுள்ளதுடன் இவர்கள் பருத்தித்துறை நீதி மன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டனர்.

இதன்போது நீதவான் நீதிமன்றில் இவர்களை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி ஆஜராகுமாறு நிதவான் உத்தரவிட்டார். (18)

# தமிழ்மக்களும் அவர்கள் தலையில் ஏறியுள்ள தலைவர்களும்




வடக்கு மாகாணசபை ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு இரண்டு பிரச்சினைகள் அதனுடைய கையில் வந்தன.

ஒன்று, காணாமற் போனோர் விவகாரமும் சார்க் மாநாட்டின் போது யாழ்ப்பாணத்திற்கு வந்த பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன் விஜயமும்.

மற்றது, இரணைமடுக்குள நீரை யாழ்ப்பாணத்திற்கு கொண்டு செல்வது.

இரண்டு பிரதான பிரச்சினைகளிலும் ஆக்க பூர்வமான எந்தத் தீர்மானத்தையும் எடுக்க முடியாமல் – இந்த விடயங்களை சரியாக கையாளத் தெரியாமல் சொதப்பி இருக்கிறது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு.

டேவிட் கமரூனை காணாமற் போனோரின் உறவினருடன் சந்திக்க வைப்பதையே ஒழுங்காகச் செய்யவில்லை கூட்டமைப்பு. இதனால் ஆத்திரமடைந்த மக்கள் சம்பந்தனை வழிமறித்து திட்டினார்கள்.

சனங்களின் வழிமறிப்பால் திணறிய தலைவர் சம்பந்தன் அவருடைய பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸாரின் உதவியினால் தப்பியோடினார்.

அப்படி அவர் தப்பியோடும் போது தனக்குப் பக்கத்தில் இருந்த சகாவி டம் சொன்னாராம் "பிரபாகரனைப் போல வெளியே வராமல் இருந்தால் ஒரு பிரச்சினையும் இருக்காதடாப்பா" என்று.

யாழ்ப்பாணம் வந்த கமரூனை வைத்து காணாமற்போனோர் பிரச்சினையை தீர்வுகாண வேண்டிய ஒன்றாக மாற்ற முடியவில்லை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கும் அதனுடைய தலைவர்களுக்கும் மாகாணசபைக்கும். (இந்தச் சீரில் கமரூனை வைத்து இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காணப்போகிறார்களாம்!)

இறுதியில் காட்சிப்பொருளாக அழைத்துவரப்பட்ட காணாமற் போனோரின் உறவுகள் கண்ணீர்ப் பொருளாகவே மாற்றப்பட்டனர்.

அதைப்போல இப்பொழுது இரணைமடு நீரை யாழ்ப்பாணத்திற்கு குடிநீராக கொண்டுசெல்லும் திட்டத்தை செய்வதா? விடுவதா? என்று தெரியாமல் தட்டுத்தடுமாறி குழம்பிக்கொண்டிருக்கிறது கூட்டமைப்பு.

இந்தத் திட்டத்தின் நன்மை, தீமைகளை சரியாக விளங்கினால் குழப்பமும் இல்லை. தடுமாற்றமும் இல்லை. ஆனால் இதை விளங்கிக்கொள்ளக்கூடிய ஆற்றலும், மனப்பக்குவமும், கரிசனையும் கூட்டமைப்பிடம் இல்லை.

இதனால் அது ஆள்மாறி ஆள் எனவும், குழுமாறி குழு எனவும் இந்தப்பிரச்சினையை தீர்வுகாண முடியாது வைத்து றப்பர் போல இழு இழு என இழுத்துக்கொண்டிருக்கிறது.

இந்த சின்ன விவகாரத்திற்கே தீர்வுகாண முடியாத இந்தச் சிங்கங்களும், புலிகளும் சொல்கின்றன "இனப்பிரச்சினைக்கு உடனடியாக தீர்வுகாணாமல் அரசாங்கம் இழுத்தடிக்கிறது" என்று. இவ்வளவுக்கும் இந்தத்திட்டம் புலிகளின் காலத்துத் திட்டம்.

உண்மையில் இந்தத்திட்டம் பற்றி மிக இலகுவாகவே முடிவெடுத்திருக்க முடியும். கூட்டமைப்பும், மாகாணசபையும் அப்படி எடுத்திருக்கவும் வேண்டும்.

அப்படி ஒரு முடிவை உறுதியாக எடுத்து, அதைச் சரியாக நடைமுறைப் படுத்தியிருந்தால் கூட்டமைப்பின் தீர்மானமெடுக்கும் சக்தியையும், ஆளுமையையும் அது வெளிப்படுத்தி இருக்கும். மாகாணசபை மீதான மதிப்பையும் அது உண்டாக்கியிருக்கும். அதனால் மாகாணசபை மீதும், கூட்டமைப்பு மீதும் ஒரு நம்பிக்கை ஏற்பட்டிருக்கும்.

இலங்கை அரசுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் கூட அது ஒரு கவனிக்க வேண்டிய சேதியாக குறிப்புணர்த்தியிருக்கும்.

ஆனால் அப்படியான அதிசயங்கள், அற்புதங்கள் எதுவும் நடக்க வேயில்லை.

பதிலாக, இந்தப் பிரச்சினையை வைத்து சொதப்பு சொதப்பு என்று சொதப்பிக்கொண்டே இருக்கிறார்கள்.

முதலில் விக்னேஸ்வரனை கிளிநொச்சிக்கு அழைத்து ஒரு கூட்டம் போட்டார்கள். அதன்போது சிறீதரனுக்கும் விக்னேஸ்வரனுக்கும் இடையில் மெல்லிய முறுகல் ஏற்பட்டது. பிறகு விக்னேஸ்வரனும் சிறீதரனும் சாவகச்சேரியில் இந்த விவகாரத்தால் பகிரங்கமாக மோதினார்கள்.

பிறகு சிறீதரன் பகிரங்கமாகவே விக்கினேஸ்வரனுக்கும் ஏனைய கூட்டமைப்பினருக்கும் சவால் விட்டார்.

சிறீதரனைக் கட்டுப்படுத்த முடியாமல் திணறிய கூட்டமைப்பின் தலைமைப்பீடம் ஒரு குழுவை நியமித்து, அதன் மூலம் காரியத்தை சாதிக்க முயற்சித்தது. ஆனால் அதுவும் சரிவரவில்லை.

மீண்டும் மீண்டும் கூட்டங்கள். மீண்டும் குழு நியமிப்பு.

காலம் நீண்டால் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் ஆசிய அபிவிருத்தி வங்கி காலை வாரிவிடும் என்ற அச்சம் – விடயம் விளங்கிய கூட்டமைப்பு தலைவர்களுக்கு.

'களிமண்' தலைகளுக்கு எதைப்பற்றியும் அக்கறை இல்லை. அவர்களைப் பொறுத்தவரை 'அடித்தால் மொட்டை கட்டினால் குடுமி'.

இப்பொழுது பெரும்பாலான கூட்டமைப்பு உறுப்பினர்களும் தலைவர்களும் ஒரு பக்கமாகவும் சிறீதரனும் அவருடைய சகாக்கள் சிலர் இன்னொரு புறமாகவும் நின்று கயிறு இழுவைப்போட்டி நடத்துகிறார்கள்.

இந்த ஆடுபுலி ஆட்டத்தில் வெட்டப்படும் காய்கள் – விவசாயிகளும், குடிநீருக்காக அல்லாடும் ஏழைச் சனங்களுமே.

வாழ்க தமிழ்மக்களும் தங்கள் தலையில் தூக்கிவைத்துக் கொண்டாடும் தலைமையும்.

சோம்பல் எல்லா செயல்களையும் கடினமாக்கும். சுறுசுறுப்பு எல்லாவற்றையும் எளிமையாக்கும். - பிராங்கிளின்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## நல்லிணக்கம் தேவைதானா?

இந்த நாட்டில் இனங்களுக்கிடையே மீளவும் நல்லிணக்கத்தை உருவாக்குவது எப்படி என்று பலரும் ஆராய்ந்தும் எழுதியும் பேசியும் வருகிறார்கள். சமீப காலங்களில் யாழ்ப்பாணத்திலும் அத்தகைய ஒன்றுகூடல்களும் கருத்துப் பகிர்வுகளும் பலவேறாக நடந்து வருகின்றன.

எழுபதுகளில் தமிழர்களிடம் பலமாக ஊன்றப்பட்ட தனிநாட்டுக் கனவுக்கான விதையும், அதையொட்டி எழுந்த முப்பது வருட ஆயுதப்போரும், இந்த நாட்டு மக்களினிடையே சந்தேகங்களையும் வெறுப்பையும் பகையுணர்ச்சியையும் தீவிரப்படுத்தி மனங்களைத் துருவப்படுத்தி விட்டிருக்கிறது.

முப்பது வருடங்களுக்கு மேலாக வெறுப்பையும் பகையையும் உண்டு வளர்ந்திருக்கும் மனங்களை ஒருசில வருடங்களுக்குள் சாந்தப்படுத்திவிட முடியும் என யாரும் எதிர்பார்க்க முடியாது. ஆனால் அதை விரைவுபடுத்துவதற்கான முயற்சிகளிலேயே சமூகத்தின் பாலும் மக்களின் பாலும் அக்கறை கொண்டவர்கள் கவனமாக இருப் பார்கள்.

மக்களிடமிருக்கும் வெறுப்பை, விரக்தியை, பரஸ்பரம் நம்பிக்கை இழந்த தன்மைகளை மாற்றி அவர்களை ஆற்றுப்படுத்துவதற்கான பேச்சுக்களும் செயல்களுமே இங்கு மேலோங்க வேண்டும் என்பதில் அவர்கள் விழிப்புடனிருப்பார்கள்.

மாறாக, சவால்களும் தத்தம் சமூகம் சார்ந்த வீரக்கதைகளும், பிரிவினை தவிர வேறு நம்பிக்கைகள் ஏதும் இங்கில்லை என்ற விரக்திப் பேச்சுக்களும் பழைய அழிவு நிலைமைகளுக்கே மக்களைத் திரும்ப அழைத்துச் செல்லும் என்பதை அவர்கள் உணர்ந்திருப்பார்கள்.

வெறுப்பும் பகையும் அற்ற வாழ்வுக்கான நம்பிக்கையை சிறார்களிடத்திலேயே தொடங்க வேண்டியிருக்கிறது. பள்ளிக்கூடங்கள் கல்வி நிலையங்களில் இருந்தே இந்த மனமாற்றத்திற்கான தேவையை, பல்வேறுபாடு கொண்ட மனிதர்கள் சேர்ந்து வாழ்வதற்கான பண்புகளை, கூட்டுவாழ்க்கைப் பொறுப்புகளைச் சொல்லித்தர வேண்டியிருக்கிறது.

அப்படிச் சொல்லித்தர வேண்டியவர்களுக்கு இதன் முக்கியத்தை யார் சொல்லித் தருவது என்ற கேள்வி எழுகிறது. இங்கேதான் ஊடகங்களும், இந்த ஊடகங்களில் எழுதுபவர்களுக்கான கருத்துப்பகிர்வுக் கலந்துரையாடல்களும் முக்கியம் பெறுகின்றன.

தமிழ்நாட்டில் சாதி, மதம், மொழி, கலாசாரம், பெண்ணுரிமை போன்ற விடயங்களில் பல புரட்சிகரமான கருத்துக்களை முன்வைத்துச் செயற்பட்டவர் ஈவெரா பெரியார். அவர், அடிப்படை சிந்தனை மனோபாவங்களில் மாற்றத்தைக் கொண்டுவர 'பகுத்தறிவுப் பள்ளிகள்' உருவாக்கப்பட வேண்டும் என்று சொன்னார்.

'பகுத்தறிவுப் பள்ளிகள்' எப்படி இருக்கும்? என்று அவர் அளிக்கும் விளக்கம் இது: "இந்த நாட்டில் இன்று கல்வி என்னும் பெயரால் பலகோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவு செய்து பல்கலைக் கழகம், கல்லூரி, உயர்தரப் பள்ளி என்பதாகக் 'கல்வி' கற்பிப்பதை விட, 'பகுத்தறிவுப் பள்ளிகளை' மாத்திரம் வைத்து நிர்வாணமான சிந்தனா சக்தி தரும் படிப்பைக் கொடுத்து மக்களை எதைப்பற்றியும் எந்தப் பற்றுமற்ற வகையில் செல்லும் வரை சிந்தித்து முடிவுக்கு வரக் கற்பிப்போமேயானால்..." என்பதாகப் பெரியாரின் 'பகுத்தறிவுப் பள்ளி'யின் வரையறை செல்கிறது.

அதாவது, கல்வியின் நோக்கம் ஏதொன்றையும் திணிப்பது என்பதைக் காட்டிலும், ஏற்கனவே இந்தச் சமூகத்தால் திணிக்கப்பட்டவற்றிலிருந்து ஒருவரை மீட்டு நிர்வாணமாக்குவதே. எத்தகைய முன்முடிவுகளும் பற்றுகளுமின்றி ஒன்றை அணுகும்போதே சரியான முடிவுக்கு வர இயலும். எனவே முன்முடிவுகளைத் துறந்து நிர்வாணமாக்கிக் கொள்வது கற்றலின் முதற்படி.

எந்தப் பற்றுமின்றி எதிர் நிற்பவற்றை நாம் எதிர்கொள்ள வேண்டும். ஏதொன்றின் அடிப்படையையும் நாம் இறுக்கமாகப் பற்றிக் கொண்டு, அந்த அடிப்படையில் புதியவற்றை எதிர்கொண்டோமானால், அந்த அடிப்படையைத்தான் நாம் மறு உறுதி செய்துகொள்கிறோமே ஒழிய, புதியனவற்றால் எந்தப் பயனையும் அடைவதில்லை.

பெரியாரின் இந்தக் கூற்றுகள் பள்ளிப்படிப்புக்கு மட்டுமல்ல, எல்லாப் படிப்புகளுக்குமே பொருந்தக்கூடியவை. எதையும் கற்றுக் கொள்வதற்கான நிபந்தனைகள் இவை. - ஆசிரியர்

# கிராம அலுவலர்களுக்கு இடமாற்றம்; யாழ். செயலகம் மீண்டும் நடவடிக்கை

யாழ். மாவட்டத்தில் ஒரு கிராம அலுவலர் பிரிவில் 10 முதல் 15 வருடங்களுக்கு மேல் தொடர்ச்சியாக பணியாற்றிய கிராம அலுவலர்கள் 72 பேர் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

யாழ். மாவட்ட பிரதேச செயலாளர்களின் கோரிக்கையை அடுத்தே யாழ். அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் இந்த அவசர நடவடிக்கையை எடுத்துள்ளதாக யாழ். செயலக செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் குறித்த சில பிரதேச செயலகங்களில் உள்ளக இடமாற்றம் முடிவடைந்து சிறப்பாக நிர்வாகம் இடம்பெறுகின்றது.

சில பிரதேச செயலகங்களில் கிராம அலுவலர்கள் 10 முதல் 15 வருடங்களுக்கு மேல் ஒரே சேவை நிலையத்தில் பணியாற்றி வருகின்றனர்.

இதனால் அப்பிரதேச மக்களில் 90 வீதமானவர்களுக்கு முழுமையான சேவை நடை பெறாது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனையடுத்தே யாழ் மாவட்ட பிரதேச செயலாளர்களின் கோரிககையை அடுத்து யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தொடர்ச்சியாக பல ஆண்டுகள் ஒரே கிராம அலுவலர் பிரிவில் கடமையாற்றும் 72 கிராம அலுவலர்களை உடன் இடமாற்றம் செய்து எதிர்வரும் 6 ஆம் திகதி முதல் பதவிப் பொறுப் பேறகும் கிராம அலுவலர்களைப் புதிய இடங்களில் நியமனம் செய்வதற்கும், துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

கடந்த காலங்களில் 72 கிராம அலுவலர்களின் இடமாற்றம் தொடாபாக இரண்டு தடவைகள் அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுத்தபோதும் தேர்தல் மற்றும் புள்ளிவிபரக் கணக்கெடுப்பால் பிற்போடப்பட்டு வந்தன.

தற்போது புதிய கிராம அலுவலர் நியமனத்தின்போது ஏற்கெனவே அரசாங்க அதிபர் அறிவித்தது போன்று புதிய கிராம அலுவலர் நியமனம் செய்யப்படும் போது 10 வருடங்களுக்கு மேல் ஒரு கிராம அலுவலர் பிரிவில் கடமையாற்றியவர்களை இடமாற்றம் செய்த பின்னரே புதிய கிராம அலுவலர்கள் பதவியேற்பர் என தெரிவிக்கப்படுகிறது.

# சங்கானை மீன்சந்தை கட்டுமானம்; மிக விரைவில் ஆரம்பிக்க ஏற்பாடு

வலி. மேற்குப் பிரதேச சபை சங்கானை மீன் சந்தை உட்கட்டுமானம் மூன்று கோடியே 20 இலட்சம் ரூபா செலவில் விரைவில் முன்னெடுக்கப்படவுள்ளதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் தேசிய திட்ட இணைப்பாளர் எம்.ரணதுங்க தெரிவித்துள்ளார்.

சங்கானை மீன் உட்கட்டுமானம் தொடர்பிலான திண்மக் கழிவு முகாமைத்துவம் கழிவு நீர் மற்றும் மலசலகூடம், வீதிப் போக்குவரத்து தொடர்பில் அதற்கான வரைபடங்களை சீர்செய்து உட்கட்டுமானம் ஆரம்பிக்கலாம்.

இந் நடவடிக்கையினை "புற நெகும" திட்டப்பணிப்பாளர் விரைந்து மேற்கொள்வார் என பொருளாதார அபிவிருத்தி அமைசசின் தேசிய திட்ட இணைப் பாளர் தெரிவித்தார்.

சங்கானை மீன்சந்தை அபிவிருத்தி நீண்டகாலமாக தொடர் இழுபறி நிலையில் இருந்தது.

தற்போது நாடாளுமன்ற உறுபபினரும், நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளருமான முருகேசு சந்திரகுமார் எடுத்த துரத நடவடிக்கையைத் தொடர்ந்து சங்கானை மீன்சந்தை அபிவிருத்தி தொடர்பில் ஒன்றிணைக்கப்பட வேண்டிய சகல திணைக்களங்களின் அனுமதிகளை பெற்றுத் தந்துள்ளார்.

இதனையடுத்து சங்கானைப் பட்டின அபிவிருத்தி சபையால் வழங்கப்பட்ட 7 1/2 பரப்பு கிந்தியடிக் காணியில் நவீன வடிவிலான மீன் சந்தை புனரமைக்கப்படவுள்ளது.

மேற்படி சந்தைப் புனரமைப்பிற்கு ஆளும்கட்சி, எதிர்க்கட்சி உட்படஅனைத்து உறுப்பினர்களும் முழுமையான பங்களிப்பினைத் தந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மேற்படி சந்தை உட்கட்டுமானம் இவ்வாண்டு டிசம்பருக்குள் (2014-DRR) முடிவுறுத்தக்கூடிய வகையில் அனைத்து தரப்பினரையும் பூரணமாக ஒத்துழைக்க கோருகின்றார் நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளர் மு.சந்திரகுமார்.

# வாக்காளர் அட்டை விநியோகம் நாளை

தபால் மூல வாக்காளர் அட்டை பகிர்ந்தளிப்பு நாளை திங்கட்கிழமை முதல் இடம் பெறும் என தபால் மா அதிபர் ரோஹண அபேரத்ன தெரிவித்தார்.

தபால் மூல வாக்காளர் அட்டைகள் தேர்தல்கள் திணைக்களத்தினால் தபால் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை, ஏனைய வாக்காளர் அட்டைகளைப் பகிர்தளிப்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளதாக ரோஹண அபேரத்ன மேலும் தெரிவித்தார்.

# அடேல் பாலசிங்கம் போர்க்குற்றவாளியா?

## சிங்கள ஊடகம் பரபரப்புத் தகவல்

விடுதலைப் புலிகளின் முன்னாள் தத்துவாசிரியரும், ஆலோச்கருமான அன்ரன் பாலசிங்கத்தின் பாரியார் அடல் பாலசிங்கத்திற்கு யுத்தக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அடெல் பாலசிங்கம் போர்க் குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுளளது.

போர்க் குற்றச் செயல்களில் ஈடுபட்ட அடலைக் கைது செய்யுமாறு கோரி இவ்வாறு கையொப்பங்கள் திரட்டப்படுவதாக சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது, இணையத்தின் ஊடாக இந்த மகஜருக்கான கையொப்பங்கள் திரட்டப்படுகின்றன.

இந்த மஜகரில் வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் இலங்கையர்கள் ஆயிரக்கணக்கில் கையொப்பமிட்டுள்ளனர். இந்த மகஜர் பிரிட்டன் பிரதமர் கமரூனிற்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. வன்னியில் பாடசாலை மாணவியரின் கழுத்தில் சயனைட் குப்பிகளை அடல் பாலசிங்கமே மாட்டி விட்டார் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

# முகப்புத்தக விவகாரம் தேசிய விவாதத்துக்கு விருப்பம்

## அமைச்சர் டி.பி.ஏக்கநாயக்க தெரிவிப்பு

பேஸ்புக் சமூக இணையத்தளம் தொடர்பில் தேசிய ரீதியிலான விவாதமொன்றை ஆரம்பிக்க வேண்டியுள்ளதாக கலாசார மற்றும் கலை விவகாரங்கள் அமைச்சு குறிப்பிடுகின்றது.

இதற்குப் பொருத்தமான காலம் தற்போது உருவாகியிருப்பதாக அமைச்சர் டீ.பி. ஏக்கநாயக்க தெரிவித்தார்.

பேஸ்புக் தொடர்பில் புதிய விதி முறைகளை ஏற்படுத்துவதோ அல்லது தடை விதிப்பதோ தனது நோக்கமல்ல என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஏக்கநாயக்க மேலும் தெரிவிக்கையில், இதுகுறித்து மக்களின் கருத்தறிந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே எனது அபிப் பிராயமாக இருக்கின்றது. இது பறறியதேசிய விவாதத்தின்போது பல்வேறு கருத்துகள் முன்வைக கப்படும் போது அதற்கான தீர் விற்கு செல்ல முடியும். இதில் அரசாங்கம் தலையிட முடியாது. எனவே தேசிய ரீதியாக மக்களிடமும், பல்லின அமைப்புகளிடமும் இது குறித்து விவாதமொன்றை ஏற்ப டுத்தும் போது, அதன் இறுதி முடிவாக இலங்கைக்கு பொருந்தக் கூடிய வழி முறையை அமுல் படுத்துவதற்கான காரணிகளை முன் வைப்பதற்குரிய வாய்ப்பைக் கட்டியெழுப்ப முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.



# மக்களுக்குத் தோல்விகளும் தலைவர்களுக்கு வெற்றிகளும்

சங்கர சிவன்

**மக்கள் தோல்விக்கு மேல் தோல்விகளை அடைந்தபோதிலும் தலைவர்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. அவர்களுக்கு வெற்றிகளே கிட்டியிருக்கின்றன. மக்களின் பிரச்சினைகளும், நெருக்கடிகளும் தலைவர்களின் அரசியல் பதவிகளைத் தக்கவைப்பதற்கு உதவுகின்றன. மேடைக்கு மேடை இந்தப் பிரச்சினைகளைப் பட்டியல் போட்டுக் காட்டியே அவர்கள் வாக்குகளை அள்ளுகின்றார்கள். தலைவர்கள் தங்கள் குடும்பங்களை வசதியான வெளிநாடுகளில் குடியமர்த்துவதற்கு மக்கள் வழங்கிய நாடாளுமன்ற உறுப்பினர் பதவி கைகொடுக்கின்றது. இதே பதவி இலங்கையில் இவர்களுக்குச் சொகுசு வாகனங்களையும், சுகபோக வாழ்க்கையையும் அரசாங்க செலவில் தனிப்பட்ட பாதுகாப்பையும் பெற்றுக் கொடுக்கின்றது. எந்தக் கடின உழைப்பும் இல்லாமல் மக்களின் பிரச்சினைகளை மாத்திரம் பட்டியல் போடுவதன் மூலம் பதவி கிடைக்கும் வாய்ப்பு இருக்கும்போது அரசியல் தீர்வுக்கான கடின உழைப்பில் ஏன் ஈடுபடப்போகின்றார்கள்? பிரச்சினைகளைக் கூறியே எவ்வித சிரமும் இல்லாமல் பதவிகளைப் பெறக்கூடியதாக இருக்கும்போது பிரச்சினைகள் தீர்வதை ஏன் விரும்பப் போகின்றார்கள்? அதனால் தான் பிரச்சினைகள் தீராமலிருப்பதை உறுதிப்படுத்தும் வகையில் செயற்படுகின்றார்கள்.**

மூன்றாவது தடவையாகவும், ஜெனிவாவில் இலங்கைக்குத் தோல்வி கிடைக்கப்போகின்றது என்று மாவை சேனாதிராசா முழங்கியதாக ஒரு பத்திரிகை தலைப்புச் செய்தி போட்டியிருந்தது. ஜெனிவாவில் இலங்கைக்குத் தோல்வி கிடைப்பது தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினையில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தப்போவதில்லை என்பது மாவைக்குத் தெரியாமலில்லை. இப்படியான போலி முழக்கங்களால் தமிழ் மக்களை ஏமாற்றும் அறுபது வருட காலப் பாரம்பரியத்தையே அவரும் தொடர்கின்றார். மக்களை நிதானமாகச் சிந்திக்க விடாமல் உணர்ச்சி நிலையில் வைத்திருந்து காரியம் சாதிப்பதற்கு இப்படியான முழக்கங்கள் தமிழ்த் தலைவர்களுக்கு அடிக்கடி தேவைப்படுகின்றன.

தமிழ் மக்கள் தங்கள் போராட்டத்தில் பல வெற்றிகளை அடைந்திருக்கின்றார்கள் என்றும் மாவை அந்த முழக்கத்தில் கூறியிருக்கின்றார். தமிழ்த் தலைவர்கள் ஒருவர் பின் ஒருவராக வழி நடத்திய அறுபத்தைந்து வருட காலப் போராட்டத்தில் தமிழ் மக்களின் எந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைத்தது என்றும் என்னென்ன வெற்றிகளை அவர்கள் அடைந்தார்கள் என்றும் மாவையினால் கூற முடியுமா? தங்கள் கையாலாகாத் தனத்தை மூடி மறைப்பதற்காகவே தமிழ் மக்களுக்கு வெற்றிகள் கிடைத்ததாகக் கூறுகின்றார்கள். மக்களுக்கு வெற்றி கிடைத்தது எனக் கூறினால் அது தலைவர்களின் சாதனை என்று அர்த்தமாகின்றதல்லவா. உருப்படியாக எதையும் சாதிக்காதபோதிலும் தாங்கள் ஏதோ சாதித்துவிட்டதாகத் தம்பட்டம் அடிப்பதற்காகவே தமிழ் மக்கள் பல வெற்றிகளை அடைந்திருக்கின்றார்கள் என்று சொல்கின்றார் மாவை.

மக்களுக்குத் தோல்விகளும் தலைவர்களுக்கு வெற்றிகளும் என்பதே தமிழ் அரசியலின் உண்மையான நிலை. பிரச்சினைகள் தீர்க்கப்படுவது அல்லது தீர்வுக்குச் சாதகமான சூழ்நிலை உருவாகுவது தான் வெற்றி. தமிழ் மக்களின் பிரதான பிரச்சினையான இனப்பிரச்சினையும் தீரவில்லை. இனப்பிரச்சினை காரணமாகத் தோன்றிய அன்றாடப் பிரச்சினைகளும் தீரவில்லை. தீர்வுக்குச் சாதகமான சூழ்நிலை உருவாகவுமில்லை. தமிழ் மக்கள் பல வெற்றிகளை அடைந்திருக்கின்றார்கள் என்று எப்படி கூறுவது?

இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சி படிப்படியான நடை முறைகளுக்கூடாக நகர்ந்து செல்ல முடியாமற்போனதற்குத் தமிழ்த் தலைவர்களே காரணம். வடக்கும் கிழக்கும் இணைந்த மாகாண சபையை எதிர்த்தார்கள். சந்திரிகா முன்வைத்த சமஷ்டி அடிப்படையிலான தீர்வுத் திட்டத்தை எதிர்த்தார்கள். இப்போது வடமாகாண சபையின் அதிகாரத்தைக் கைப்பற்றி வைத்துக் கொண்டு அச்சபையின் செயற்பாடுகளுக்கு முட்டுக்கட்டை போடுகின்றார்கள். தங்கள் பேச்சுக்கள் மூலமும் செயற்பாடுகள் மூலமும் சிங்கள மக்களுக்கு ஆத்திரமூட்டித் தீர்வுக்குத் தடையான சூழ்நிலையை உருவாக்குகின்றார்கள். இனப்பிரச்சினையின் தீர்வுக்குத் தடையாக இத்தலைவர்கள் காலத்துக்குக் காலம் செயற்பட்டதன் ஒட்டுமொத்த விளைவை அறிய வேண்டுமானால் தமிழ் மக்கள் தங்கள் சொந்த பிரதேசங்களில் முப்பது வருடங்களுக்கு முன் வாழ்ந்த வாழ்க்கையுடன் இன்றைய வாழ்க்கையை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். தமிழ் மக்கள் தோல்விக்கு மேல் தோல்விகளையே அடைந்திருக்கின்றார்கள் என்பதை இதிலிருந்து விளங்கிக் கொள்ளலாம்.

மக்கள் தோல்விக்கு மேல் தோல்விகளை அடைந்தபோதிலும் தலைவர்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. அவர்களுக்கு வெற்றிகளே கிட்டியிருக்கின்றன. மக்களின் பிரச்சினைகளும், நெருக்கடிகளும் தலைவர்களின் அரசியல் பதவிகளைத் தக்கவைப்பதற்கு உதவுகின்றன. மேடைக்கு மேடை இந்தப் பிரச்சினைகளைப் பட்டியல் போட்டுக் காட்டியே அவர்கள் வாக்குகளை அள்ளுகின்றார்கள். தலைவர்கள் தங்கள் குடும்பங்களை வசதியான வெளிநாடுகளில் குடியமர்த்துவதற்கு மக்கள் வழங்கிய நாடாளுமன்ற உறுப்பினர் பதவி கைகொடுக்கின்றது. இதே பதவி இலங்கையில் இவர்களுக்குச் சொகுசு வாகனங்களையும், சுகபோக வாழ்க்கையையும் அரசாங்க செலவில் தனிப்பட்ட பாதுகாப்பையும் பெற்றுக் கொடுக்கின்றது. எந்தக் கடின உழைப்பும் இல்லாமல் மக்களின் பிரச்சினைகளை மாத்திரம் பட்டியல் போடுவதன் மூலம் பதவி கிடைக்கும் வாய்ப்பு இருக்கும்போது அரசியல் தீர்வுக்கான கடின உழைப்பில் ஏன் ஈடுபடப்போகின்றார்கள்? பிரச்சினைகளைக் கூறியே எவ்வித சிரமும் இல்லாமல் பதவிகளைப் பெறக்கூடியதாக இருக்கும்போது பிரச்சினைகள் தீர்வதை ஏன் விரும்பப் போகின்றார்கள்? அதனால் தான் பிரச்சினைகள், தீராமலிருப்பதை உறுதிப்படுத்தும் வகையில் செயற்படுகின்றார்கள்.

இனப்பிரச்சினையே தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினை. இப்பிரச்சினை தீராமலிருப்பதன் விளைவாகவே அன்றாட வாழ்வில் முகங்கொடுக்கும் பல பிரச்சினைகள் தோன்றுகின்றன. தமிழ் மக்களின் நலனில் அக்கறை உடைய தலைமை இனப்பிரச்சினையின் தீர்விலும் அக்கறை செலுத்த வேண்டும். தீர்வுக்கான கொள்கைத் திட்டமொன்றை முன்வைத்து அதைப் பிரதான இலக்காக ஏற்றுச் செயற்பட வேண்டிய கடப்பாடு அத்தலைமைக்கு உண்டு. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிடம் இனப்பிரச்சினையின் தீர்வுக்கான கொள்கைத் திட்டம் இல்லை. கொள்கைத் திட்டமொன்றைத் தயாரிக்க வேண்டும் என்ற சிந்தனையும் இல்லை. இனப்பிரச்சினைக்கான தீர்வில் அக்கறை இல்லாமல் கொள்கைத் திட்டம் பற்றிய சிந்தனை எப்படித் தோன்றும்?

இந்தியாவின் மாநிலங்களையொத்த தீர்வையே தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றார்கள் என்று இந்தியாவில் சம்பந்தன் கூறியதைக் கூட்டமைப்பின் கொள்கைத் திட்டமாகக் கருத முடியாது. சம்பந்தனின் இக்கூற்றுக்கு ஆதரவாகக் கூட்டமைப்புக்குள்ளிருந்து வேறு எந்தக் குரலும் எழவில்லை. மாவை சேனாதிராசா சமஷ்டி தான் தீர்வு என்று மறுத்தான் அடித்திருக்கின்றார். தனிநாடு தான் தீர்வு என்ற நிலைப்பாட்டையே சிவஞானம் ஸ்ரீதரன் வெளிப்படுத்துகின்றார். இனப்பிரச்சினையின் தீர்வு பற்றி ஒவ்வொரு தலைவரும் ஒவ்வொரு திசையில் இழுத்துக் கொண்டிருப்பது கூட்டமைப்பின் ஒட்டுமொத்த தலைமைக்கு வாய்ப்பாக அமைகின்றது. உடன்பாடு இல்லையே என்ற நொண்டிச்சாட்டைக் கூறி இனப் பிரச்சினையின் தீர்வில் அக்கறை செலுத்தாமல் இருக்கலாமல்லவா. இனப் பிரச்சினையை அறவே கைவிடுவது மக்களிடமிருந்து முழுமையாக அந்நியப்படுவதாகிவிடும் என்பதால் சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்று கூறி மக்களை ஏமாற்றுகின்றார்கள். சர்வதேச சமூகம் பெற்றுத் தரும் தீர்வு எது என்ற கேள்விக்கு இவர்களிடம் பதில் இல்லை. இவர்களுக்கே எது தீர்வு என்பது தெரியாமலிருக்கும் போது சர்வதேச சமூகம் என்ன தீர்வைப் பெற்றுத் தரும் என்று எப்படிச் சொல்வது?

தனிநாட்டு மாயையிலிருந்து இன்னும் விடுபடாமலிருக்கும் புலம்பெயர் அமைப்புகளாலேயே கூட்டமைப்பு வழிநடத்தப்படுகின்றது. ஐக்கிய இலங்கையில் அரசியல் தீர்வை இந்த புலம் பெயர் அமைப்புகள் விரும்பவில்லை. கூட்டமைப்பின் நிதிவளத்தில் பெரும்பகுதி புலம்பெயர் அமைப்புகளிடமிருந்தே வருகின்றதென்பதால் புலம்பெயர் அமைப்புகளுக்குக் கட்டுப்பட்ட நிலையிலேயே கூட்டமைப்பு செயற்படுகின்றது. புலம்பெயர் அமைப்புகளின் விருப்பத்துக்கமைய கூட்டமைப்பும் அரசியல் தீர்வை உள்ளூர நிராகரிக்கின்றது. இந்த நிலைப்பாட்டை இலங்கையில் பகிரங்கமாக வெளிப்படுத்துவது சாத்தியமில்லை என்பதால் அரசியல் தீர்வில் அக்கறை இருப்பது போலப் பாசாங்கு செய்கின்றார்கள். இந்திய மாநிலங்களையொத்த தீர்வு என்று சம்பந்தன் அண்மையில் கூறியதும் இந்தப் பாசாங்கின் ஒரு வெளிப்பாடு தான். கூட்டமைப்புக்குள் இக்கருத்துக்கு உடன்பாடு இருக்காது என்பதும் புலம்பெயர் அமைப்புகள் இவ்வாறான தீர்வுக்கு ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை என்பதும் சம்பந்தனுக்குத் தெரியாமலில்லை. தங்கள் கையாலாகத் தனத்தை மக்களிடம் மூடிமறைப்பதற்காக இடைக்கிடை இப்படியான அறிவிப்புக்களைச் செய்கின்றார்கள். இதுவும் ஒரு தந்திரோபாயம்.

கூட்டமைப்புத் தலைவர்கள் ஒருபோதும் இனப்பிரச்சினையின் தீர்வுக்காகச் செயற்படப்போவதில்லை. புலி சார்புப் புலம்பெயர் அமைப்புகள் அதற்கு அவர்களை அனுமதிக்கப்போவதில்லை. எனவே, சர்வதேச சமூகம் பிரச்சினையைத்தீர்த்து வைக்கும் என்ற போலி நம்பிக்கையை மக்களிடம் வளர்ப்பதைத் தவிர இவர்களுக்கு வேறு வழி இல்லை. மாவையின் அண்மைய முழக்கம்கூட இந்த நம்பிக்கையை வளர்ப்பதையே நோக்கமாகக் கொண்டது.

கூட்டமைப்புத் தலைமை போலி நம்பிக்கைகளை வளர்த்துக்கொண்டிருக்குமேயொழிய ஒருபோதும் இனப் பிரச்சினையையோ அதையொட்டித் தலைதூக்கும் மற்றைய பிரச்சினைகளையோ தீர்த்துவைக்கப்போவதில்லை என்பதை விளங்கிக்கொள்வதிலேயே தமிழ் மக்களின் விமோசனம் தங்கியுள்ளது. இனப்பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுத்தர இயலாத கூட்டமைப்பின் தலைமையைத் தமிழ் மக்கள் இனியும் நம்பிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. தமிழ் மக்கள் இப்போது புதிதாகச் சிந்திக்க வேண்டும். சர்வதேச சமூகம் பற்றிய போலி நம்பிக்கையில் மக்களை மிதக்க விடாமல் நடைமுறைச் சாத்தியமான வழியில் படிப்படியாக அரசியல் தீர்வைப் பெற்றுத் தரக்கூடிய தலைமை பற்றித் தமிழ் மக்கள் சிந்திக்க வேண்டிய காலம் வந்துவிட்டது.

# இனங்களுக்கிடையில் நல்லிணக்கம் உள்ளகப் பொறிமுறை படுதோல்வி

## நவிப்பிள்ளையின் பிந்திய குற்றச்சாட்டு



(ஜெனிவா)

யுத்தத்துக்குப் பிந்திய இலங்கையில் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் உளளகப் பொறிமுறை தோற்றுப் போய் விட்டதாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவிப்பிள்ளை தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இலங்கை யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கப் படையினருக்கும இடையில் நடைபெற்ற இறுதிக் கட்ட யுத்தத்தின் போது இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்படும் யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை, இலங்கையில் இடம்பெற்றதாகக் குறிப்பிடப்படும் யுத்தக் குற்றச் செயலகள் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டுமென கோரியுள்ளார்.

இந்தக் கோரிக்கைக்கு பூரண ஆதரவளிக்கப்படும் என மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

யுத்தத்தின் போது இடம்பெற்ற பாரியளவிலான மனித உரிமை மீறல்கள் மற்றும் யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் சர்வதேச சுயாதீன விசாரணைகள் நடாத்தப்பட வேண்டியது அவசியமானது என சுட்டிக்காட்டியுள்ளது.

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது உயிரிழந்தவர்கள் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை எடுக்க இலங்கை அரசாங்கம் தவறியுள்ளதாக மனித உரிமைக் கண்காணிப்பகத்தின் ஆசிய பிராந்திய வலயப் பணிப்பாளர் பிரட் அடம்ஸ் தெரிவித்துள்ளார்.

உண்மையைக் கண்டறிந்து நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முனைப்புக்களில் இலங்கை அரசாங்கத்தின் உள்ளகப் பொறிமுறைமைகள் தோல்வியைத் தழுவியுள்ளதாக நவநீதம்பிள்ளை குற்றஞ்சுமத்தியுள்ளார்.

படையினர் மீதான குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை நடாத்த அரசாங்கம் உரிய முனைப்பு காட்டத் தவறியுள்ளதாக பிரட் அடம்ஸ் குற்றஞ்சுமத்தியுள்ளார்.

# இலங்கைப் பணியாளர் சவுதியில் மரணம்

(கொழும்பு)


சவுதி அரேபியாவில் பணிபுரிந்த இலங்கைப் பிரஜையொருவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கிண்ணியா பிரதேசத்தில் உள்ள சம்மாவச்சத்தீவு கிராமத்தைச் சேர்ந்த வீ.மௌசூக் என்பரே கடந்த வியாழன் உயிரிழந்துள்ளார்.

இவர் சவுதி அரேபியாவில் பணி புரிந்து கொண்டிருந்த போது சுகவீனமுற்று வைத்திய சாலையில் அனுமதிப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இவரது சடலம் நேற்று முன்தினம் சவுதி அரேபியாவில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளதாக உறவினர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

# விமானப்படைக்கு புதிய தளபதி பதவியேற்பு



விமானப்படையின் புதிய தளபதியாக எயார் மாஷல் கோலித அரவிந்த குணதிலக நேற்று பதவியேற்றார்.

விமானப் படையின் 14 ஆவது தளபதியாக அவர் நியமனம் பெற்றுள்ளார்.

பண்டாரவளை புனித தோமஸ் மற்றும் கொழும்பு ரோயல் கல்லூரியில் கல்விகற்ற கோலித குணதிலக, கெடட் அதிகாரியாக 1980 ஆம் ஆண்டு விமானப்படையில் இணைந்தார்.

1982 ஆம் ஆண்டில் அவர் விமானியாக பதவியுயர்வு பெற்றார்.

புலிகளுககு எதிரான நடவடிக்கைகளின் போது, செயற்திறனுடன் சேவையாற்றிய கோலித குணதிலக்க, ரணவிக்ரம மற்றும் ரணசூர பதக்கங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

சரக்கு விமானங்கள் மற்றும் தாக்குதல் விமானங்களின் விமானியான அவர், சுமார் நான்காயிரம் மணித்தியாலங்கள் வானில் சஞ்சரித்துள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.

# ஒருங்கிணைப்புக்குழுவை தாமதமின்றிக் கூட்டுங்கள்

## சம்பந்தனிடம் “ரெலோ” கோரிக்கை



(கொழும்பு)

தமிழ் மக்கள் எதிர்நோக்கி நிற்கும் மிக முக்கியமான பிரச்சினைகள் தொடர்பாக தமிழ் தேசிய கூட்டமைப்பு விவாதித்து, தீர்க்கமான முடிவுகளை எடுத்து செயற்பட வேண்டிய தேவையை உணர்ந்து தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் அதி உயர் பீடமான ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தை மிக விரைவாக கூடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தமிழீழ விடுதலை இயக்கம் (டெலோ), தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனைக் கேட்டுள்ளது.

தமிழீழ விடுதலை இயக்கத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அடைக்கலநாதன், தமிழீழ விடுதலை இயக்கச் செயலாளர் நாயகம் கென்றி மகேந்திரன் ஆகியோர் ஒப்பமிட்டு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே மேற்கணட விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழ்த் தேசிய கூட்டமைபபின் தலைவர் என்ற முறையிலும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுவின் தல்லவர் என்ற முறையிலும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பு குழுவின் தலைவர் என்ற முறையிலும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் அதி உயர்பீடமான ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தை மிக விரைவாக கூடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

கடந்த வட மாகாண சபைத் தேர்தலுக்குப் பின்னர் ஒரே ஒருமுறை இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் பின்னர் இதுவரையில் கடந்த நான்கு மாதங்களாக கூட்டப்படாத சூழ்நிலையில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் அரசியல் நடவடிக்கைகள் தொடர்பாக எமது மக்கள் மத்தியில் பல்வேறு தரப்பட்ட அபிப்பிராயங்கள் மேல் எழத் தொடங்கியுள்ளன என்பதையும் இந்த சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட கடமைப்பட்டுள்ளோம்.

# ஆளும் கட்சியுடன் இணைவு



(கொழும்பு)

மீரிகம பிரதேச சபை ஐ.தே.க. உறுப்பினர்கள்ான திலக் அசோக மற்றும் சனத் ரணசிங்க ஆகிய இருவரும் ஜனாதிபதி மகிந்த ராஜபகஷவை அலரி மாளிகையில் சந்தித்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இணைந்துகொண்டனர்.

அத்துடன் எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வெற்றியை உறுதிப்படுத்த அயராது பாடுபடப்போவதாகவும் அவர்கள் ஜனாதிபதியிடம் உறுதியளித்தனர்.

இந்த நிகழ்வில் அமைச்சர்களான பசில் ராஜபக்ஷ பீலிக்ஸ் பெரேரா, மேர்வின் சில்வா மற்றும் கம்பகா மாவட்ட அரசியல் பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.

# கூட்டமைப்பு ஏற்காவிட்டாலும் ஆணைக்குழுவின் பணி தொடரும்

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு தமது பொறிமுறையை ஏற்றுக் கொள்ளவில்லை என்பதால், ஆணைக்குழுவின் செயற்பாடுகளில் பாதிப்பு ஏற்படப் போவதில்லை என்று, காணாமற போனோர் தொடர்பான ஜனாதிபதியின் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

காணாமறபோனோர் தொடர்பான ஜனாதிபதியின் ஆணைக் குழுவின் விசாரணைகளில் நம்பிக்கை இல்லை என்றும், கிளிநொச்சி மாவட்டத்தில் ஆணைக்குழு விசாரணையில் ஈடுபட்டிருந்த சமகாலத்தில் மற்றுமொரு குழு மரணச் சான்றிதழ்களை வழங்கி இருந்தமை போன்ற விடயங்களை முன் வைத்து, குறித்த ஆணைக் குழுவை நிராகரிப்பதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தெரிவித்திருந்தது.

இது தொடர்பில் காணாமற போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மெக்ஸ்வெல் பராக்கிரம பரணகம உள்நாட்டு ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிடுகையில், கிளிநொச்சியில் மரணச் சான்றிதழ் வழங்கப்பட்ட சம்பவம் தொடர்பில் தமக்கு எதுவும் தெரியாது எனத் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் காணாமற போனவர்கள் தொடர்பில் விசாரணை செய்யவே இந்த ஆணைக்குழுவை ஜனாதிபதி நியமித்திருக்கிறார்.

இந்த நிலையில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு இதனை ஏற்றுக் கொள்ளவில்லை என்பதால், அது கலைக்கப்படப்போவது மில்லை, அதன் பணிகள் இடை நிறுத்தப்படப்போவதுமில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

# க.பொ.த. பெறுபேறு ஏப்ரல் முதல் வாரத்தில்

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி வெளியிடப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

கடந்த 2013 ஆம் ஆண்டு டிசம்பர் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களின் பெறுபேறுகள் எதிர்வரும் ஏப்ரலில் வெளிவரவுள்ளது.

2013 ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் ஆறு இலட்சம் மாணவ மாணவியர் தோற்றினர்.

2013 ஆம் ஆண்டுக்கான செயன்முறைப் பரீட்சைகள் எதிர் வரும் 4 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரையில் நடைபெறவுள்ளது.


1163 பரீட்சை நிலையங்களில் 157551 மாணவ மாணவியர் செயன்முறைப் பரீட்சைக்கு தோற்றவுள்ளனர்.

# பண வீக்கம் குறைவடைகிறது

(கொழும்பு)

நுகர்வோர் விலைச் சுட்டெண் கடந்த பெப்ரவரி மாதம் வீழ்ச்சி அடைந்துள்ளது. கடந்த ஜனவரி மாதம் நுகர்வோர் விலைச் சுட்டெண் 4 தசம் 4 சதவீதமாக காணப்பட்டது.

பெப்ரவரி மாதத்தில் 4 தசம் 2 ஆக குறைவடைந்திருக் கிறது. அதேநேரம் பணவீக்க நிலைமையும் 0.5 சதவீதத்தால் குறைவடைந்திருக்கிறது. கடந்த ஜனவரி மாதம் 6.5 சதவீதமாக காணப்பட்ட பணவீக்க நிலைமை, கடந்த பெப்ரவரி மாதம் 6 சதவீதமாக குறைவடைந் துள்ளது.



சாவகச்சேரியில் நவீன புதிய மெடிக்கெயார் வைத்தியசாலையின் திறப்பு விழா அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் சிரேஷ்ட சத்திரசிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி சு.ரவிராஜ் நாடாவெட்டி திறந்துவைப்பதையும், இலங்கை வங்கி சாவகச்சேரி கிளை முகாமையாளர் கே.சேதுகாவலர் மங்கள விளக்கேற்றுவதையும், சாவகச்சேரி ஆதாரவைத்தியசாலை அத்தியட்சகர் கலாநிதி த.குகதாசன் உரையாற்றுவதையும் காணலாம். (11)

# நட்புணர்வு சமுதாயத்தை உருவாக்க இரு இன மாணவருக்கும் செயற்றிட்டம்

## அன்னையர் விருப்பம் செயற்றிட்ட இணைப்பாளர்

(யாழ்ப்பாணம்)

எதிர்காலத்தின் தலைவர்களாக விளங்கக் கூடிய இளம் மாணவ சமுதாயத்தினரிடையே நட்புணர்வையும் புரிந்துணர்வையும் ஒற்றுமை உணர்வினையும் ஏற்படுத்துவதன் ஊடாக மாணவர்களுக்கிடையே கருத்துக்கள் பகிரப்படுகின்ற பொழுது புரிந்துணர்வுடன் கூடிய இன நட்புணர்வு மிக்க சமுதாயம் ஒன்று உருவாக்கப்படும் என அன்னையர் விருப்பம் செயற்றிட்ட இணைப்பாளர் சமந்த வன்னியராச்சி தெரிவித்துள்ளார்.

அன்னையர் விருப்பம் என்ற செயற்றிட்டத்தின் ஊடாக இனங்களுக்கிடையிலே நட்புணர்வினை ஏற்படுத்தும் நோக்கில் தமிழ் சிங்கள பாடசாலை மாணவர்களுக்கிடையிலான செயற்றிட்ட நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக கொழும்பு ஆனந்தாக்கல்லூரி மாணவர்களுக்கும் யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி மாணவர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் நிகழ்வு கல்லூரி அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன் தலைமையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

அமெரிக்கத்தூதரகத்தின் நிதி அனுசரணையில் இச்செயற்றிட்டம் மேற்கொள்ளப்படுகின்றது. இனங்களுக்கிடையில் நட்புணர்வினை ஏற்படுத்துவதன் ஊடாக தேவையற்ற முரண்பாடுகளைத் தவிர்த்து எதிர்காலத்தில் நட்புணர்வுடன் கூடிய சமுதாயம் ஒன்றினை உருவாக்குவதே இச் செயற்றிட்டத்தின் நோக்கமாகும்.

இச்செயற்பாட்டின் ஊடாக சிங்கள மாணவர்கள் மத்தியில் தமிழ்மொழியினையும் தமிழ் மாணவர்கள் மத்தியில் சிங்கள மொழியினையும் கற்கும் ஆர்வத்தினை ஏற்படுத்தும் செயற்பாடு மேற்கொள்ளப்படுகின்றது. இதன் பிரதான பாடசாலை செயற்றிட்டமாக யாழ்ப்பாணம் மத்தியகல்லூரிக்கும் கொழும்பு ஆனந்தாக்கல்லூரிக்கும் இடையிலான செயற்றிட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

மேலும் இச் செயற்றிட்டத்தில் யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, கொழும்பு கோட்டை ஆனந்த பாலிக்கா பெண்கள் பாடசாலை, வவுனியா மத்திய மகாவித்தியாலயம், கொழும்பு சிறிமாவோ பண்டாரநாயக்க வித்தியாலயம் மன்னார் சென்.சேவியர் கல்லூரி, நுகேகொட சமுத்திரா தேவி வித்தியாலயம் மட்டக்களப்பு வின்சன் பெண்கள் உயர்தரப் பாடசாலை, பத்தரமுல்லை சகுதி தேசியபாடசாலை ஆகிய பாடசாலைகளுக்கிடையிலான செயற்றிட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது. இச்செயற்றிட்டத்தில் 10 சிங்கள தமிழ் பாடசாலைகள் பங்குபற்றவுள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கொழும்பு ஆனந்தா கல்லூரியின் ஊடக இணைப்பாளர் சாமந்தா சமரக்கோன், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் ஊடக இணைப்பாளர் எஸ்.ரி.குமரன் ஆகியோர் கலந்து கொண்டார்கள். இக்கலந்துரையாடலின் ஊடாக இரு கல்லூரி மாணவர்களின் ஆக்கங்கள் தமிழ் சிங்கள மொழிச் சஞ்சிகையாக வெளியீடு செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (63)

# மாயவனூரில் குடிநீருக்கு பஞ்சம் 2 கிலோமீற்றர் பயணிக்கும் மக்கள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாயவனூர் கிராமத்தில் தற்போது நிலவும் கடும் வறட்சி காரணமாக இப்பகுதி மக்கள் குடிநீரைப் பெற்றுக் கொள்வதற்கு 2 கிலோ மீற்றர் தூரத்திற்குச் சென்று வரவேண்டிய நிலை காணப்படுகின்றது. இதனால் இவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சிமாவட்டத்தில் மாயவனூர் கிராமத்தில் 550 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். தற்போது நிலவி வரும் வறட்சி காரணமாக குடிநீர் கிணறுகளில் நீர் வற்றிக் காணப்படுகின்றது. இதனால் இந்தப் பகுதி மக்கள் தமக்கான குடிநீரைப் பெற்றுக் கொளவதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

தற்போது 2 கிலோ மீற்றருக்கு அப்பால் சென்று குடிநீர் பெற்றுக்கொள்ளவேண்டியுள்ளது. இக்கிராமத்தில் குடிநீர்த் தேவைகளுக்கென அமைக்கப்பட்ட 35 அடி ஆழமான குடிநீர் கிணறுகள் கூட நீர் இன்றி வறண்டு காணப்படுவதால் இப்பகுதி மக்கள் குடிநீரை பெறுவதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளனர். (கே)

# அன்னைசாரததேவி வித்தியாலயத்துக்கு மகப்பேற்று நிபுணரும் பாரியாரும் உதவி

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் மகப்பேற்று நிபுணர் வைத்திய கலாநிதி சுரேஸ் மற்றும் அவரின் பாரியாரும் கிளிநொச்சி மலையாளபுரம் அன்னை சாரதாதேவி வித்தியாலயத்தின் தேவைகளைக் கேட்டறிந்து உதவி செய்துள்ளனர்.

கிளிநொச்சி மலையாளபுரம் அன்னை சாரதாதேவி வித்தியாலயத்தில் கடந்த பன்னிரண்டாம் திகதி புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி எய்திய மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது. பாடசாலை அதிபர் கணேஸ்வரநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் கலந்து கொண்டார். இதில் விருந்தினர்களாக வைத்தியகலாநிதி சுரேஸ்குமார் தம்பதிகளும் மகள் மயூரகியும் கலந்துகொண்டனர்.

சிறப்பு அழைப்பின்பேரில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் மற்றும் வணபிதா துரைரட்ணம், அயல் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் பாடசாலை சமூகத்தினர் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனின் செயலாளரும் கரைச்சி பிரதேச அமைப்பாளருமான பொன்.காந்தன், த.தே.கூட்டமைப்பின் கிளிநொச்சி இளைஞர் அணியின் செயலாளர் சர்வானந்தா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் செல்வி.மயூரகியினால் நீர் வழங்கல் மற்றும் மின்சார இணைப்பு என்பன ஆரம்பித்து வைக்கப்பட்டது.அத்துடன் அவர் பிறந்த நாள் கேக் வெட்டி அனைவருடனும் மகிழ்ச்சி பகிர்ந்துகொள்ள பாடசாலை சமூகமும் விருந்தினர்களும் செல்வி மயூரகியை வாழ்த்தினர்.

# வீதியை புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை

நாவற்குழி கைதடி பாலத்துக்கு அருகில் முடியும் பிரதான வீதி நீண்டகாலமாக குண்டும் குழியுமாக காணப்படுவதால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வுருவதாக தெரிவித்துள்ளனர்.

இந்த வீதியூடாக பயணம் செய்யும் வாகனங்கள் சேதமடைவதாகவும், மக்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாவதாகவும் கவலை தெரிவித்தனர்.

எனவே மேற்படி வீதியினை திருத்த ஆவன செய்யுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## முரசின் இன்றைய பலன்



(02.03.2014 ஞாயிற்றுக்கிழமை)

விஜய வருஷம் மாசி மாதம் 18 ஆம் திகதி.
பிரதமை / சித்தாமிர்தம்.
பூரட்டாதி நட்சத்திரம் மு.இ. 7.18 வரை. பின் உத்தரட்டாதி.
இராகு காலம் 04.57 - 06.27 வரை. சுபநேரம் 09.27 -10.57 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | தடைப்பட்ட விடயம் கைகூடும், வீடு மாற்றம் ஏற்படும். |
| ரிஷபம் | பேச்சு வன்மையால் எதிரியை முறியடிப்பீர்கள், சக ஊழியர்களின் ஒத்துழைப்பு கிட்டும். |
| மிதுனம் | மனதில் சஞ்சலம், மனக்குறை ஏற்படும், பிரச்சினைகள் தீரும். |
| கடகம் | முரண்பாடுகள் விலகும், எதிரிகளிடம் பாதுகாப்பாக இருத்தல் அவசியம். |
| சிம்மம் | பிரயாணத்தில் தடங்கல், பிள்ளைகளுக்கு ஏற்பட்ட துயர் நீங்குதல். |
| கன்னி | உறவினரால் மனக்கசப்பு அதிகரிக்கும், நண்பர்களால் தொல்லை, பணக் கஷ்ரம் நீடிக்கும். |
| துலாம் | திருமணம் தாமதிப்பதால் கவலை, வெளியூர் பிரயாணம் கிட்டும், பணச் செலவு அதிகரிக்கும். |
| விருச்சிகம் | அலைச்சல் அதிகரிக்கும், கடன் தொல்லை மீளப்பெறல், நன்மை கிட்டும். |
| தனுசு | எதிரிகள் பற்றிய கவனம் அவசியம், விவாகம் தாமதமடையும், பெற்றோரின் கவலை அதிகரிக்கும். |
| மகரம் | நோய் குணமடைய மருத்துவரை நாடுதல், திருமணம் கைகூடும். |
| கும்பம் | பொறுமை பேணல், மனக்கசப்பு தீரும், பிரச்சினைகள் விலகும். |
| மீனம் | சந்தோசமான நிகழ்வை ஒத்தி வைத்தல், வாகனம் திருட்டுப்போதல். |

# பிராவோ அதிரடி வென்றது தீவுகள்



(ஆண்டிகுவா)

இங்கிலாந்து அணிக்கு எதிரான முதலாவது ஒருநாள் போட்டியில், மேற்கிந்தியத்தீவுகள் அணி 15 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

மேற்கிந்தியத்தீவுகள் சென்றுள்ள இங்கிலாந்து அணி, மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது. இப்போட்டித் தொடரின் முதல் போட்டி ஆன்டிகுவாவில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத் தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி முதல் நான்கு விக்கெட்டுக்களையும் 45 ஓட்டங்களுக்குள் பறிகொடுத்து திணறியது. இந்நிலையில் ஐந்தாவது விக்கெட்டுக்காக இணைந்த டுவைன் பிராவோ, சிமன்ஸ் இணை பொறுமையாக ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தது. ஐந்தாவது விக்கெட்டுக்காக இணைந்த இந்த ஜோடி 108 ஓட்டங்களைப் பெற்ற வேளை பிரிக்கப்பட்டது. தொடர்ந்து களமிறங்கிய டரன் சமி, டுவைன் பிராவோ அதிரடியாக ஆடி ஓட்டங்களை வேகமாகக் குவித்தனர். ஆறாவது விக்கெட்டுக்காக இணைந்த இந்த ஜோடி 116 ஓட்டங்களைப் பெற்றவேளை பிரிக்கப்பட்டது. இறுதியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 50 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 269 ஓட்டங்களைப் பெற்றது. இதில் டுவைன் பிராவோ ஆட்டமிழக்காது 87, சிமன்ஸ் 65, டரன் சமி 61, ஸ்மித் 24, ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ரிம் பிரஸ்ணன் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 270 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இங்கிலாந்து அணி, மேற்கிந்தியத்தீவுகள் அணியின் வேகப் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் நிதானமாக ஆடியது. ஒரு முனையில் சிறப்பாக ஆடிய மைக்கல் லம்ப் சதமடித்தபோதும் அணியின் தோல்வியைத் தவிர்க்க முடியவில்லை.

இறுதி வரை வெற்றிக்காக போராடி இங்கிலாந்து அணி 15 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. இறுதியில் இங்கிலாந்து அணி 50 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 254 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் மைக்கல் லம்ப் 106, மொயின் அலி 44, ரவி போபாரா 23 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சுனில் நரைன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக பிராவோ தெரிவானார். இந்த வெற்றியின் மூலம், மூன்று போட்டிகள் கொண்ட ஒரு நரள் தொடரில் மே.தீவுகள் அணி 1-0 என முன்னிலை வகிக்கிறது. இரண்டாவது போட்டி ஆன்டிகுவாவில் இன்று நடைபெறவுள்ளது.

## ஆசிய கிண்ண கிரிக்கெட் இன்றைய ஆட்டம்



**பாகிஸ்தான் எதிர் இந்தியா**

**நேரம் : பிற்பகல் 1.30**
**இடம் : டாக்கா**


## இறுதியில் பெடரர்

(டுபாய்)

டியூட்டி பிரீ சர்வதேச ரென்னிஸ் போட்டித் தொடரின் இறுதிப் போட்டிக்கு ரோஜர் பெடரர் தகுதிபெற்றுள்ளார்.

டியூட்டி பிரீ சர்வதேச ஏ.டி.பி. ரென்னிஸ் போட்டி டுபாயில் நடைபெற்று வருகிறது. இப்போட்டித் தொடரின் ஆணகள் ஒற்றையர் பிரிவின் அரையிறுதிப் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் சுவிஸின் ரோஜர் பெடரர், சேர்பியாவின் ஜோகோவிச் ஆகியோர் மோதினர்.

1 மணி 45 நிமிடங்கள் நடந்த இந்த ஆட்டத்தில் பெடரர் 3-6, 6-3, 6-2 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்றார். மற்றொரு அரையிறுதியில் செக்குடியரசின் தோமஸ் பெர்டிச் 7-5, 7-5 என்ற நேர் செட்டில் ஜேர்மனியின் கோல்ஸ்ரீபரை சாய்த்தார்.



## கோட்டைவிட்டது ஒன்றல்ல

ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடரில் இலங்கை அணிக்கெதிரான இரண்டாவது ஒரு நாள் போட்டியில் இந்திய அணியின் தோல்விக்கு மோசமான களத்தடுப்பே காரணம் என்பது நிதர்சனமான உண்மை.

* இலங்கை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் குசல் பெரேரா 7 ஓட்டங்களைப் பெற்றவேளை கொடுத்த நல்ல பிடியை ரஹானே, தவான் இருவரும் பிடிக்க முயற்சித்து முட்டி மோதி கோட்டை விட்டனர். ஒருவர் மட்டுமே ஓடி வந்திருந்தால் இந்தப் பிடியை எடுத்திருக்கலாம்.
* திரிமன்ன 5 ஓட்டங்களைப் பெற்ற போது, வலுவாக அடித்த பந்தை அந்தரத்தில் பாய்ந்து ஜடேஜா பிடிக்க முயற்சித்தார். அது தவறியது.
* 38 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது குசல் பெரேராவுக்கு, மறுபடியும் ஜடேஜாவின் உருவத்தில் கருணை கிடைத்தது. ஜடேஜாவின் கையில் பந்து சரியாக விழுந்த போதிலும், கண்ணிமைக்கும் நேரத்தில் நழுவிப் போனது.
* சங்கக்கரா வழங்கிய வாய்ப்பை வீணடித்ததன் விளைவு தான் இந்தியாவுக்கு பேரிடியாக அமைந்தது. அவர் 30 ஓட்டங்களைப் பெற்றபோது ஜடேஜாவின் பந்து வீச்சில் ஸ்டம்பிங் வாப்பை தினேஷ் கார்த்திக் தவறவிட்டார். அவர் கிரீசை விட்டு வெளியே நின்ற போது பந்தை சேகரித்த விக்கெட் காப்பாளர் தினேஷ் கார்த்திக் உடனடியாக ஸ்டம்பை தாக்க முயற்சித்த போது கை ஸ்டம்பில் படவில்லை. பின்னர் 2ஆவது முயற்சி எடுப்பதற்குள் சங்கக்கரா கிரீசுக்குள் வந்து தப்பிவிட்டார்.
* இலங்கை அணி வெற்றியின் விளிம்பில் இருந்த போது கூட கடைசி ஓவரின் முதல் பந்தில் பெரேரா வழங்கிய எளிதான பிடியை மிட்-ஓப் திசையில் நின்ற தவான் வீணடித்தார்.

## பனிப்பொழிவால் தோல்வி
### ஹோலி விளக்கம்

(டாக்கா)

பனிப்பொழிவால் பந்தைச் சரியாகப் பிடித்து (கிரிப்) வீச முடியவில்லை, அது துடுப்பாட்ட வீரர்களுக்கு சுலபமாகி விட்டது. தோல்விக்கு முக்கிய காரணங்களில் இதுவும் ஒன்று என இந்திய அணிக் கப்டன் ஹோலி தெரிவித்துள்ளார்.

எங்களது பந்து வீச்சாளர்கள் தங்கள் பணியை சிறப்பாகச் செய்தனர். ஆனால் இறுதி கட்டத்தில் கடுமையான பனிப்பொழிவு பாதிப்பை ஏற்படுத்திவிட்டது. இந்த அளவுக்கு பனிபெய்யும் என்று நினைக்கவில்லை. ஏனெனில் முதல் நாள் பனியின் தாக்கம் அதிக்மாக இல்லை. மொத்தத்தில் ஆட்டத்தை கடைசி வரை கொண்டு சென்ற பெருமை பந்து வீச்சாளர்களையே சாரும். நாங்கள் 30 முதல் 40 ஓட்டங்கள் குறைவாக எடுத்து விட்டோம். ஜடேஜாவின் பந்து வீச்சு அருமையாக இருந்தது. பாகிஸ்தானுக்கு எதிராக நாங்கள் நேர்த்தியாக விளையாட வேண்டியது அவசியம். விளையாடுவோம் என்ற நம்பிக்கை இருக்கின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஆட்டநாயகன் விருது பெற்ற சங்கக்கரா கூறுகையில், பனிப்பொழிவு, எனது துடுப்பாட்ட வேலையை எளிதாக்கி விட்டது. கடைசி வரை களத்தில் நிற்க வேண்டும் என்பதில் கவனம் செலுத்தி விளையாடினேன். உடல்தகுதியை தக்க வைத்துக் கொள்ள கடினமான உழைத்து வருகிறேன் என்றார்.

## இல்ல மெய்வல்லுநர்

(அச்சுவேலி)

பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் எஸ். மோகனராஜன் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஆ.சு.சற்குணராஜா, சிறப்பு விருந்தினர்களாக வலி.கிழக்குப் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் இ. ஐங்கரன், மதுவரித் திணைக்கள உத்தியோகஸ்தர் பொ.ஸ்ரீபவன், கௌரவ விருந்தினர்களாக வலி.கிழக்கு பிரதேச சபை உறுப்பினர் க.சந்திர போஸ், வித்தியாலய பழைய மாணவர் தா.சிவலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இப்போட்டி நிகழ்விற்கு பெற்றோர், கிராமப் பெரியோரை தவறாது கலந்துகொண்டு வீர,வீராங் கனைகளை உற்சாகப்படுத்துமாறு பாடசாலைச் சமூகம் கேட்டுள்ளது. (85)


## துடுப்பாடுகிறது ஆஸி

(கேப்டவுன்)

தென்னாபிரிக்க அணிக்கெதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்ரேலிய அணி முதலில் ஆடி வருகின்றது. தென்னாபிரிக்க, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இறுதிப் போட்டி தென்னாபிரிக்காவின் கேப்டவுனில் நேற்று ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதல் இனிங்ஸிற்காக ஆடிவரும் அவுஸ்ரேலிய அணி டேவிட் வோர்னரின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் ஓட்டங்களை விரைவாகக் குவித்து வருகின்றது. இறுதியில் நேற்றைய முதல் நாள் ஆட்டம் மதிய போசன இடைவேளைக்காக நிறுத்தப்பட்ட வேளை அவுஸ்ரேலிய அணி ஒரு விக்கெட்டை இழந்து 106ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் டேவிட் வோர்னர் 61 பந்துகளை எதிர்கொண்டு ஏழு பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 66 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். பந்து வீச்சில் ஸ்ரெய்ன் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார். இன்று போட்டியின் இரண்டாம் நாளாகும்.

இதேவேளை, ஏற்கனவே, நடைபெற்ற இரண்டாவது போட்டிகளில் இரு அணிகளும் ஒவ்வொரு வெற்றியைப் பதிவாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# ஞானரூபன் ஹட்ரிக் கோல்

# கிண்ணம் வென்றது இளவாலை யங்ஹென்றீஸ்





(இளவாலை)

வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கினால் நடாத்தப்பட்ட தலைவர் வெற்றிக் கிண்ண கால்பந்தாட்டத் தொடரின் சம்பியன் பட்டத்தை இளவாலை யங்ஹென்றீஸ் அணி கைப்பற்றிக் கொண்டது.

வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கினால் அதன் அங்கத்துவ அணிகளுக்கிடையில் நடாத்தப்பட்ட தலைவர் வெற்றிக் கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் இரவு இளவாலை ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் மின்னொளியில் நடைபெற்றது.

இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் இளவாலை யங்ஹென்றீஸ் அணியும், கல்வளை விநாயகர் அணியும் மோதின.

ஆட்டம் ஆரம்பமாகி மூன்றாவது நிமிடத்தில் இளவாலை யங்கென்றீஸ் அணி வீரர் கலிங்டன் முதல் கோலைப் போட்டு அணியை முன்னிலைப்படுத்தினார். தொடர்ந்து ஆதிக்கம் செலுத்திய இளவாலை யங்ஹென்றீஸ் அணி வீரர் ஞானரூபன் 12, 19, 35, 42 நிமிடங்களில் அடுத்தடுத்து கோல் மழை பொழிந்து அணியை ஸ்திரமான நிலைக்கு இட்டுச் சென்றார். இதற்குப் பதில்டி கொடுக்கும் முனைப்புடன் கல்வளை விநாயகர் அணி செயற்பட்டபோதும், யங்ஹென்றீஸ் அணியின் பிற்கள வீரர்களின் சிறப்பான செயற்பாட்டால் தகர்க்கப்பட்டது. இந்நிலையில் முற்பாதி ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை யங்ஹென்றீஸ் அணி 5-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றவேளை நிறைவுற்றது.

பிற்பாதி ஆட்டத்தில் களவியூகங்களை மாற்றிக் கொண்ட கல்வளை விநாயகர் அணி உத்வேகத்துடன் செயற்பட்டது. பிற்பாதி ஆட்டம் ஆரம்பமாகி ஐந்தாவது நிமிடத்தில் யங்ஹென்றீஸ் வீரர் ஞானரூபன் மேலுமொரு கோலைப் போட்டுக் கொர்ண்டார். தொடர்ந்து சிறப்புடன் செயற்பட்ட யங்ஹென்றீஸ் வீரர் நியூட்டன் 15ஆவது நிமிடத்தில் ஒரு கோலைப் போட்டார். இதன் பின்னர் சோராது போராடிய கல்வளை விநாயகர் அணி 28ஆவது நிமிடத்தில் ஒரு கோலைப் போட்டுக் கொண்டார். இதன் பின் உற்சாகத்துடன் போராடிய கல்வளை விநாயகர் அணியால் மேலதிக கோல்களை பெற்றுக்கொள்ள முடியவில்லை. இருப்பினும் யங்ஹென்றீஸின் கோல் அடிக்கும் முயற்சிகள் அனைத்தையும் முறியடித்தது. இறுதியில் இளவாலை யங்ஹென்றீஸ் அணி 7-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொண்டது.

போட்டியின் ஆட்டநாயகனாக ஹட்ரிக் கோல் அடித்த இளவாலை யங்ஹென்றீஸ் அணி வீரர் ஞானரூப்ன், போட்டித் தொடரின் ஆட்டநாயகனாக அதே அணியைச் சேர்ந்த டிலக்ஷன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இதேவேளை, காட்சிப் போட்டி ஒன்றும் நடாத்தப்பட்டது. இதில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி பெண்கள் அணியும் மாதகல் சென். ஜோசப் மகா வித்தியாலய பெண்கள் அணியும் மோதின. இதில் 1:0 என்னும் கோல் கணக்கில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி பெண்கள் அணி வெற்றி பெற்றது.

தொடர்ந்து பரிசளிப்பு நிகழ்வு நடைபெற்றது. பரிசில்களை இலங்கை கால்பந்தாட்ட சம்மேளன தலைவர் றஞ்சித் றொட்றிகோ, பொதுச்செயலாளர் உபாலி ஹேவகே, நிறைவேற்று பணிப்பாளர் .அனுரா டீ சில்வா உட்பட்ட பலர் கலந்து கொண்டு வழங்கினர்.

இதேவேளை, கால்பந்தாட்டப் போட்டியை சிறப்பாக முன்னெடுத்து வரும் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அதிபர் வண.ஜேசுதாசன் அடிகளார் கௌரவிக்கப்பட்டார். (48,93)

# கந்தன் நல்லதம்பி கிண்ணம் சென்.மேரிஸ் வசம்

(சுன்னாகம்)

நியூவொரியர்ஸ் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்ட கந்தன் நல்லதம்பி நினைவு வெற்றிக் கிண்ணத்தை நாவாந்துறை சென். மேரிஸ் அணி கைப்பற்றிக் கொண்டது.

வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் சுன்னாகம் நியூவொரியர்ஸ் விளையாட்டுக் கழகம் கந்தன் நல்லதம்பி ஞாபகார்த்தமாக நடாத்திய அணிக்கு 5 பேர் கொண்ட கால்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி கடந்த வாரம் நியூவொரியர்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் இளவாலை யங்ஹென்றீஸ் அணியும் நாவாந்துறை சென். மேரிஸ் அணியும் மோதின.

ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய நாவாந்துறை சென். மேரிஸ் அணி 5-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. போட்டியின் சிறந்த வீரராக நாவாந்துறை சென் மேரிஸ் அணியின் வீரன் யூட் தெரிவானார். இப்போட்டி நிகழ்வில் பலர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (48,93)






## விளையாட்டுச் செய்திகள்

# பிரதேச மட்ட மென்பந்து கரவெட்டி ஞானம்ஸ் சம்பியன்



(கரவெட்டி)

கரவெட்டிப் பிரதேச மென்பந்து கிரிக்கெட் போட்டியின் சம்பியன் பட்டத்தை ஞானம்ஸ் அணி கைப்பற்றிக் கொண்டது.

கரவெட்டிப் பிரதேச பதிவு செய்யப்பட்ட அணிகளுக்கிடையிலான பெரு விளையாட்டுப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இதில் ஆண்களுக்கான மென்பந்து கிரிக்கெட் போட்டி கடந்த 27ஆம் திகதி மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் கரவெட்டி ஞானம்ஸ் அணியும் கொம்மாந்தறை அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய ஞானம்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 10 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 56 ஓட்டங்களைப் பெற்றது. இதில் நவநீதன் 17, அனுசயந்தன் 13 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் கிருசாந் மூன்று, விதுலன், யோசப் மயூரன், தயாபரன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 57 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கொம்மாந்தறை அணி9.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 47 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் விதுலன் 18, தயாபரன் 8 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அனுசேந்திரன் மூன்று, அனுசயந்தன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இதன் மூலம் பிரதேச மட்ட சம்பியன் பட்டத்தை ஞானம்ஸ் அணி கைப்பற்றிக் கொண்டது. (116)

# அதிகாரப் பரவலாக்கலுக்கான அழுத்தங்களைத் தாண்டி இந்தியாவிடம் எதையும் தமிழ் மக்கள் எதிர்பார்க்க முடியாது

– இந்து பத்திரிகை ஆசிரியர் ராம் –



இந்தியா ஒரு காலத்தில் இலங்கை விடயத்தில் ஆழமாக ஈடுபட்டுவந்தது. எனினும் 1991 ஆம் ஆண்டு முன்னாள் இந்திய பிரதமர் ராஜிவ் காந்தி கொலையுடன் இந்தியா சிறந்த பாடங்களை கற்றுக்கொண்டது.

அதன் பின்னர் இலங்கை விடயத்தில் இந்தியாவானது நட்பு நாடு என்ற அடிப்படையிலேயே செயற்பட்டு வருகின்றது. எனினும் அதிகாரப் பரவலாக்கல் , குறித்து அழுத்தங்களை முன்னெடுப்பதில் இந்தியா ஈடுபட்டுள்ளது. அதாவது 1991 ஆம் ஆண்டின் பின்னர் இலங்கை குறித்த இந்திய வெளிவிவகாரக் கொள்கையில் மாற்றங்கள் ஏற்படவில்லை.

அந்தவகையில் தற்போதைய தேர்தலில் யார் வெற்றிபெற்றாலும் இலங்கை தொடர்பான வெளிவிவகார கொள்கையில் மாற்றங்கள் வரப்போவதில்லை. நரேந்திர மோடி பிரதமராக வந்தாலும் வெளிவிவகாரக் கொள்கையில் மாற்றம் ஏற்படாது. நட்பு நாடு என்ற வகையில் அதிகாரப் பரவலாக்கலுக்காக அழுத்தங்களை இந்தியா முன்னெடுக்கும்.

இவற்றைத் தாண்டி இந்தியா எதனையும் செய்யும் என்று தமிழ் மக்கள் எதிர்பார்க்கவும் முடியாது.

மேலும் சீனாவுடன் இந்தியா தற்போது பாரிய பொருளாதார செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. இரண்டு நாடுகளுக்கும் இடையில் பொருளாதார வர்த்தக பெறுமதி அதிகரித்துவருகின்றது. எனவே இந்தியாவின் எந்த அரசாங்கமாக இருந்தாலும் சீனாவை புறக்கணித்து செயற்பட முடியாது. தேர்தல் காலத்தில் வேட்பாளர்கள் சீனாவுடனான உறவு குறித்து விமர்சித்தாலும் பதவிக்கு வந்த பின்னர் சீனா தவிர்க்கப்பட முடியாத நாடாகவே உள்ளது.

அத்துடன் இலங்கையில் சீனாவின் பிரசன்னம் தொடர்பில் யாரும் கவலைகொள்ள வேண்டியதில்லை. குறிப்பாக இந்தியா இந்த விடயத்தில் கவலைகொள்ள வேண்டியதில்லை. சீனா இலங்கைக்கு உதவிகளை வழங்குவது போன்று இந்தியாவும் இலங்கைக்கு உதவிகளை வழங்க முடியும்.

உலகில் மிகப்பெரிய வர்த்தக சந்தையாக சீனா உருவெடுத்துவிட்டது. எனவே இலங்கையில் அதிகளவில் சீனா முதலீடு செய்வதும் பொருளாதாரத்தை மேம்படுத்த உதவுவதும் சிறப்பான விடயமாகும். அதனை வரவேற்கவேண்டும். இலங்கை இரண்டு பெரிய நாடுகளுடன் சிறந்த முறையில் உறவுகளை பேணுகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். இலங்கையின் உட்கட்டமைப்பு மற்றும் முதலீட்டு விடயங்களில் சீனா பாரிய உதவிகளை வழங்கிவருகின்றது. மேலும் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவும் மிகவும் முக்கியமானதாகும்.

இதேவேளை இலங்கையில் தற்போது யுத்தம் முடிவடைந்து உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால் அதிகாரப் பரவலாக்கல் விடயத்தில் மேலும் முன்னோக்கிய செயற்பாடுகள் அவசியமாகும்.

குறிப்பாக வடக்கில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டமை பாராட்டத்தக்க விடயம். சுதந்திரமான முறையில் தேர்தல் நடத்தப்பட்டு அங்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிர்வாகமும் உள்ளது.

வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனை நான் கொழும்பில் சந்தித்துப் பேச்சு நடத்தினேன். அத்துடன் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் மற்றும் சுமந்திரன் எம்.பி. ஆகியோரையும் சந்தித்துக் கலந்துரையாடினேன்.

வட மாகாண சபைக்கு சிவில் ஆளுநர் ஒருவரை நியமிக்கவேண்டும் என்பதுடன் வட மாகாண பிரதம செயலாளரையும் மாற்றவேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கைகளை நான் இங்கு முன்வைக்கவில்லை. மாறாக நடைபெற வேண்டியவற்றை குறிப்பிடுகின்றேன். இந்தியாவானது இலங்கையின் தமிழ் மக்களின் நலனில் மட்டும் அக்கறை கொண்ட நாடாக இருக்காது. மாறாக முழு நாட்டின் அனைத்து இன மக்களினதும் நலனுக்காக இந்தியா முன்னிற்கும்.

அந்தவகையில் அதிகாரப் பரவலாக்கலை முன்னெடுத்து சிறந்த எதிர்காலத்தை நோக்கிப் பயணிப்பதற்கு இலங்கைக்கு அருமையான வாய்ப்பு கிடைத்துள்ளது. அதனை பயன்படுத்தி முன்னோக்கிப் பயணிக்கவேண்டும்.

இந்தியாவில் தனிக்கட்சி ஆட்சி நடத்துவது என்ற யுகம் மாறிவிட்டது. பல கட்சிகளின் இணைந்த கூட்டணி அரசாங்கமே இந்தியாவில் அண்மைய வரலாற்றில் சாத்தியமாகியுள்ளது.

தேர்தலில் 543 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக 815 மில்லியன் மக்கள் வாக்களிக்கவுள்ளனர். இந்தியாவில் இறுதியாக 1984 ஆண்டுதான் தனிக்கட்சி ஆட்சி இடம்பெற்றது. அதன் பின்னர் கூட்டணி ஆட்சிகளே இடம்பெற்றுள்ளன.


பாரதிய ஜனதாக் கட்சி 200 ஆசனங்களை பெறும் எனக் கருத்துக் கணிப்புக்கள் கூறுகின்றன. அதாவது பா.ஜ.க கூட்டணி ஆட்சி அமைக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. காங்கிரஸ் கட்சி 100 ஆசனங்களை பெறும் என எதிர்பார்க்கப்படுவதுடன் ராகுல் காந்தி எதிர்க்கட்சித் தலைவராக வருவதற்கு தயாராகின்றார் என்று கூறலாம்.

தமிழக முதல்வர் ஜெயலலிதா மற்றும் திருணாமூல் காங்கிரஸ் கட்சியின் மம்தா பானர்ஜி முலாயம் சிங் உள்ளிட்டவர்கள் தேர்தலில் முக்கிய வகிபாகம் ஒன்றை வகிப்பார்கள். காங்கிரஸ் கட்சி இந்தத் தேர்தலில் மக்களினால் முழுமையாக புறக்கணிக்கப்பட்டுவிடும் என்று கூற முடியாது.

ஆனால் பாரதிய ஜனதாக் கட்சிக்கு கூட்டணி ஆட்சி அமைப்பதற்கான சாத்தியம் அதிகம் காணப்படுகின்றது. நரேந்திர மோடி மீது 2002 ஆம் ஆண்டு குஜராத் கலவரம் தொடர்பில் குற்றச்சாட்டு உள்ளது. 2002 ஆம் ஆண்டு குஜராத் கலவரத்தை இலங்கையில் 1983 ஆம் ஆண்டு நடைபெற்ற கலவரத்துடன் ஒப்பிடலாம். 2002 ஆம் ஆண்டு குஜராத் கலவரம் நடைபெறும்போது மாநில அரசாங்கம் உரிய முறையில் செயற்படவில்லை. பொலிஸ் நிலையங்களுக்கு அறிவிக்கப்பட்டும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இவ்வகையான குற்றச்சாட்டு உள்ளது.

இதேவேளை புதிதாக உருவெடுத்த ஆம் ஆத்மி கட்சி புதுடில்லியில் பாரதிய ஜனதாக் கட்சியை தோற்கடிக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. காங்கிரஸ் கட்சியின் ஆதரவுடன் செயற்பட வேண்டியதில்லை என்பதற்காகவே டில்லி முதலமைச்சர் அர்விந் கெஜ்ரிவால் இராஜினாமா செய்துள்ளார். அவர் தான் அதிகாரத்தை பெற அரசியலுக்கு வரவில்லை என்றும் அரசியல் செயற்பாட்டை மாற்றவே அரசியலுக்கு வந்ததாகவும் கூறியுள்ளார்.

# காலம் விதித்திருக்கும் கட்டாய பணி



– சாலையூரான் –

பருவமழை பொய்த்துவிட்டதன் விளைவாக நெற்செய்கையை தமது பிழைப்பாகக் கொண்ட வன்னி விவசாயிகளின் வாழ்வாதாரம் இந்த வருடத்தில் பெரும் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டிருக்கிறது.

தொடர்ந்து நான்கு ஆண்டுகளாக பருவம் தப்பிய மழையால் முறையான அறுவடையை பெறுவதில் சிரமங்களை எதிர்கொண்டுவந்த விவசாயிகளுக்கு இம்முறை குறைந்த பட்சம் சில மாதங்களுக்கான தமது உணவுத் தேவையைக் கூட சமாளிப்பதென்பது பெரும் சவாலான தொன்றாக மாறியிருக்கிறது.

நெற்செய்கையை முழுநேரமாக கொண்ட விவசாயிகளுக்கு அவர்களின் உணவுத் தேவையை பூர்த்தி செய்வதுடன் ஏனைய அவசிய செலவினங்களையும் இந்த நெற் செய்கையின் மூலமே சமாளித்துக்கொள்ள வேண்டுமென்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

இந்த நிலையில் இம்முறை நெற்செய்கை மழையின்மையால் முற்றாக எரியுண்டு இருப்பது அவர்களின் இருப்பையும் வாழ்வையும் முற்றாக மறுதலிக்கும் இயற்கையின் ஒரு செயற்பாடாகவே அமைந்திருக்கிறது.

கடந்த ஆண்டுகளில் போதிய விளைச்சலின்மையால் தமக்கான வங்கிக்கடன்கள்ள முறையாக செலுத்த முடியாத நிலையில் கடனை அடைப்பதற்காக மேலும் கடனை பெறும் சூழலுக்குள் தள்ளப்பட்டிருந்த விவசாயிகளுக்கு இந்தத்தடவை தமது கடன் நெருக்கடிகளை தீர்ப்பதென்பது மேலும் சிக்கலானதொன்றாக மாறிவிட்டிருக்கிறது.

மரக்கறிச் செய்கைக்கான அதிகரித்த உற்பத்தி செலவினங்களால் தமது உப உணவுத் தேவைக்கான வீட்டுத்தோட்ட முயற்சிகளையும் இந்த விவசாயிகள் கைவிட்டிருக்கும் நிலையில் முழு மக்களுமே இதற்காக தென்னிலங்கை உற்பத்திகளை எதிர்பார்த்திருக்கும் இன்றைய சூழலும் இவ்விடத்தில் கவனத்துக்குரியது.

வன்னி பெருநிலப்பரப்பில் மானாவாரியாக செய்கை பண்ணப்படும் ஏனைய தானியவகை உற்பத்திகள் கவனத்துக்குரியவை. இறுதிப் போர் இடம்பெயர்வில் அனைத்து உற்பத்தி உபகரணங்களையும் தொலைத்துவிட்ட நிலையில் இந்த வகை தானிய உற்பத்திகளை மீளவும் செய்கை பண்ண முடியாத நிலையில் இம்முறை வறட்சியை விவசாயிகள் எதிர்கொண்டிருப்பதும் கவனத்துக்குரியது.

வடக்கு மக்களைப் பொறுத்தவரை மொத்தத்தில் சுயதேவைக்கான உணவுற்பத்தியென்பதே நிலைகுலைந்துவிட்ட நிலையில் அனைத்துக்கும் வெளிமாவட்டங்களை எதிர்பார்த்திருக்கும் புதிய நிலைமை வந்திருப்பது கவலைதரும் செய்தியாகும்.

தமிழ் மக்கள் தமது சொந்தக்காலில் நிற்பதற்கு தனியான ஆட்சி நிர்வாகமொன்று வேண்டும். அதனை நிறுவிக்கொள்வதற்கு எமது மக்கள் ஆணை வழங்க வேண்டுமென வலியுறுத்தி நின்ற வடக்கு மாகாண சபை ஆளும்தரப்பு பெரும் அவலத்துள் தள்ளப்பட்டிருக்கும் இந்த விவசாயிகளுக்காக அடுத்து என்ன நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதென்பதையும்

# மார்ச் மாதத்தில்...

**பிரபலங்களின் பிறந்த தினங்கள்**

3, 1847 அலெக்சாண்டர் கிரஹாம்பெல் - தொலைபேசி கண்டுபிடித்த விஞ்ஞானி.

6, 1475 மைக்கேல் ஏஞ்சலோ - உலகப் புகழ்பெற்ற இத்தாலிய ஓவியர்.

9, 1454 அமெரிக்கோ வெஸ்புகி - அமெரிக்காவைக் கண்டறிந்தவர். அவர் பெயரிலேயே அது வழக்கத்தில் உள்ளது.

9, 1934 யூரி ககாரின் - ரஷ்யர் - முதன்முதலாக விண்வெளியில் பயணம் செய்தவர்.

13, 1733 ஜோசப் பிரிஸ்ட்லி ஒட்சிசனைக் கண்டறிந்த விஞ்ஞானி.

14, 1879 அல்பேர்ட் ஐன்ஸ்டீன். நோபல் பரிசு பெற்ற உலகம் போற்றும் விஞ்ஞானி.

17, 1920 முஜிபுர் ரஹ்மான் - கிழக்கு பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி.

24, 1923 ரி.எம். சௌந்தரராஜன், பாடகர்.

**நினைவு தினங்கள்**

9, 1994 தேவிகாராணி ரோரிச் - ஹிந்தி திரைப்பட முதல் நடிகை.

14, 1883 கார்ல் மார்க்ஸ் - கம்யூனிஸ்ட் கொள்கை உருவாக்கியவர்.

**சுதந்திரம் கொண்டாடும் நாடுகள்**

1 - பொஸ்னியா
6 - கானா
11 - லிதுவேனியா
12 - மொரீஷியஸ்
20 - துனிஷியா
21 - நமீபியா
25 - கிரீஸ்
26 - பங்களாதேஷ்

**முக்கிய நிகழ்வுகள்:**

3, 1876 அமெரிக்காவில் அலெக்சாண்டர் கிரஹாம்பெல் - தொலைபேசிக்குக் காப்புரிமை பெற்றார்.

4, 1997 அமெரிக்க ஜனாதிபதி கிளிண்டன், குளோனிங் முறையில் மனிதனைப் பிறப்பிக்கச் செய்யும் ஆராய்ச்சிக்கு அரசு நிதி உதவி செய்யாது என்றார்.

- 5, 1979 வியாழனின் துணைக் கிரகமான "சுயோ"வில் எரிமலை இருப்பதை அமெரிக்காவின் வொயேஜர்-1 கண்டுபிடித்தது.

5, 2012 ரஷ்யாவில் 3 ஆவது முறையாக புடின் ஜனாதிபதி ஆனார்.

8, 1848 பிரான்ஸ் - புருஸ்ஸியனில் அரசன் லுயிஸ்பிளாங்க். பெண்களுக்கு அரசவைக் குழுவில் இடம் அளித்தான். வாக்குரிமை அளிக்கவும் ஒப்புதல் கொடுத்த நாளே மகளிர் தினம் அனுசரிக்கப்படுகிறது.

9, 1790 உலகில் முதன்முதலாக, பிரான்ஸில் பொது மக்களின் பார்வைக்காக பாரிஸ் நகரில் மிருகக் காட்சி சாலை திறந்து வைக்கப்பட்டது.

11, 1889 பிரான்ஸில் பாரிஸ் ஈகிள் டவர், காஸ்டவ் ஈ.்.பிளில் என்பவரால் கட்டப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டது.

12, 1918 ரஷ்யாவில் மொஸ்கோ தலை நகரமானது. முன்னர் சென் பீட்டர்ஸ்பேர்க் தலைநகராயிருந்தது.

13, 1781 "யுரேனஸ்" கோள் "வில்லியம் ஷர்க் செல்" என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.

13, 2012 ஸ்பெயினில் கருவிலுள்ள குழந்தைக்கு நுரையீரல் சத்திரசிகிச்சை வெற்றிகரமாகச் செய்தார்கள்.

17, 1958 கப்பல் போக்குவரத்தை சீர்செய்யும் விதமாக "சர்வதேச கப்பல் கழகம்" ஏற்படுத்தப்பட்டது.

19, 2003 அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் ஈராக் மீது போர் நடத்த உத்தரவிட்டார்.

30, 1870 அமெரிக்க அரசியல் சட்டத்தில் கறுப்பு - வெள்ளை பாகுபாடு இன்றி "குடியுரிமை" பெற்றுள்ள எல்லோருக்கும் "வாக்குரிமை" அளிக்கச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.




முக்கிய தினங்கள்

3 உலகவன உயிரின நாள்.
8 சர்வதேச எழுத்தறிவு தினம்.
8 உலக மகளிர் தினம்.
13 உலக சிறுநீரக விழிப்புணர்வு தினம்.
15 உலக நுகர்வோர் தினம்.
15 உலக ஊனமுற்றோர் தினம்.
20 உலக கதை சொல்லும் நாள்.
20 உலக குருவிகள் தினம்.
21 உலக காடுகள் தினம்.
21 உலக வனவிலங்குகள் தினம்.
21 நிறவெறி ஒழிப்பு தினம்.
21 இரவும் பகலும் சரி சமமாக உள்ள நாள்.
22 உலக தண்ணீர் தினம்.
23 உலக வானிலை தினம்.
24 உலக காசநோய் எதிர்ப்பு தினம்.
31 ஆண்டு கணக்கு முடிக்கும் நாள்.

**மார்ச் மாத விவரம்**

ரோமானியர்களின் கடவுள் "மார்ஸ்" ஆவார். அதன் அடிப்படையில் அமைந்த பெயர் "மார்ச்" மாதமாகும்.

ரோமானியர்களின் தலைவர், ரோமுலஸ் என்பவர். மார்ச் மாதத்தை முதல் மாதமாகச் செய்தார். ஆனால், கிரிகோரியன் கலண்டர் நடைமுறைப்படுத்தப்பட்டபோது, மூன்றாவது மாதமாகக் கணக்கிட்டு இம்மாதத்திற்கு 31 நாட்களாக்கினார்கள்.

---

இவ்விடத்தில் கேட்டுக்கொள்ள வேண்டியிருக்கிறது.

உலகின் கவனத்திற்காக எனக் கூறிக்கொண்டு சபையில் பல பிரேரணைகளை முன்மொழிந்துள்ள தமிழ் கூட்டமைப்பினர் இந்த விவசாயிகளுக்கென குறைந்த பட்சம் சாத்தியமான நிவாரணமொன்றையாவது அரசிடமிருந்து பெற்றுக்கொடுப்பதற்கான தீர்மானமொன்றை சமர்ப்பித்திருக்கலாம்.

வேளாண் செய்கைக்கான நீரேந்து பகுதிகளும் வரட்சி கண்டிருக்கும் நிலையில் இம்முறை சிறுபோக நெற்செய்கையும் சாத்தியமில்லையென்பதால் அடுத்த காலபோக அறுவடை வரை இந்த விவசாயிகளுக்கு வழியை காண்பிப்பது வடக்கு மாகாண நிர்வாகத்தினது தார்மீகக் கடமையென்பதையும் இவ்விடத்தில் சுட்டிக்காட்ட வேண்டி இருக்கிறது.

இம்முறை வரட்சியால் வன்னி மாவட்டங்களில் உள்ள நெற்களஞ்சியங்கள் சிறிதளவு நெல்லையேனும் களஞ்சியப்படுத்தும் வாய்ப்புக்களை இழந்த நிலையில் இதற்கென ஒதுக்கப்பட்டிருந்த கட்டடத் தொகுதிகள் யாவும் காலியாக உள்ளன.

இது ஒருபுறமிருக்க பெரும்பாலான விவசாயிகள் தாம் உற்பத்தி செய்த நெல்லில் தமது உணவுக்கென ஒதுக்கீடு செய்யும் நெல்லையும் இம்முறை இழந்து நிற்கின்றனர்.

இந்த நிலையில் இவர்களுக்கான குறைந்த பட்ச உணவுத் தேவைப் பூர்த்திக்கான வாய்ப்புக்களை உறுதிப்படுத்தி உரிய வரட்சி நிவாரணத்தை பெற்றுக் கொடுப்பதுடன் எதிர்வரும் கால போக நெற்செய்கைக்கான விதை நெல் உட்பட்ட அனைத்து ஏற்பாடுகளையும் உறுதிப்படுத்த வேண்டியது வடக்கு விவசாய அமைச்சரின் தலையாய கடமையாகும்.

இது தமிழ்க் கூட்டமைப்பினருக்கு காலம் விதித்திருக்கும் கட்டாய பணி என்பதையும் அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

---




## நமது பிரச்சினையும், வெளியாரும்!

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு; நம்மில் ஒற்றுமை நீங்கிடில் அனைவருக்கும் தாழ்வு; நன்று இதைத் தேர்ந்திடல் வேண்டும்; இந்த ஞானம் வந்த பின், நமக்கு எது வேண்டும்..." என்பது, பாரதியின் வாக்கு.

நம்மிடையே ஒற்றுமை இருந்தால், உலகையே நம் வசம் வளைக்கலாம். எத்தகைய இடர்பாடுகளையும், ஒற்றுமையினால் ஒன்றுமில்லாமல் செய்து விடலாம் என்பதற்கு, மகாபாரதத்தில் ஒரு காட்சி:

பாண்டவர்கள், வனவாசத்தின் போது, காட்டில் அல்லல் பட்டுக் கொண்டிருந்தனர். அவர்களுக்கு, மேலும் மன வருத்தத்தை உண்டாக்குவதற்காக, துரியோதனன் தன் பட்டாளத்தோடு காட்டிற்கு போனான். அங்கே அவன், மிகுந்த ஆர்பாட்டத்தோடு கத்திக் கூச்சலிட்டு பொழுதைக் கழித்துக் கொண்டிருந்த போது, கௌரவர்களுக்கும், சித்ரசேனன் என்ற கந்தர்வனுக்கும் போர் மூண்டது.

கந்தர்வனிடம், துரியோதன-னின் வாய் வீரமும், கை வீரமும் பலிக்கவில்லை.

கௌரவர்களை அடித்துக் கட்டி, இழுத்துக் கொண்டு போனான் கந்தர்வன்.

அப்போது, துரியோதனன், அங்கே காட்டிலிருந்த தர்மரின் காதுகளில் விழுமாறு, "காப்பாற்றுங்கள்... காப்பாற்றுங்கள்..." எனக் கத்தி கூச்சலிட்டான்.


துரியோதனனின் அபயக் குரலைக் கேட்ட தர்மர், உடனே பீமனிடம், "தம்பி... கௌரவர்கள் ஏதோ ஆபத்தில் சிக்கிக் கொண்டனர் என நினைக்கிறேன். நீ போய் அவர்களை மீட்டு வா..." என்று சொன்னார்.

பீமன் மறுத்து, துரியோதனன் செய்த தீமைகளை எல்லாம் வரிசையாக எடுத்துச் சொல்லி, "நமக்குப் பதிலாக கந்தர்வன், துரியோதனாதிகளுக்குத் தண்டனை கொடுத்துக் கொண்டிருக்கிறான். வேடிக்கை பார்ப்பதை விட்டு, காப்பாற்றச் சொல்கிறீர்களே; என்னால் முடியாது..." என்றான்.

அதைக் கேட்டதும், தர்மர் மிகுந்த விவேகத்தோடு, "நீ சொல்வது தவறு. கௌரவர்களும், நாமும் ஒரே குடும்பத்தினர். நமக்கும், அவர்களுக்கும் உள்ள பிரச்சினை என்பது, நம் குடும்பத்தோடு சம்பந்தப்பட்டது. ஆனால், வெளியாள் ஒருவனால், நம் குடும்பத்தை சேர்ந்தோருக்கு பிரச்சினை வந்தால், அது நமக்கு வந்ததாக கருத வேண்டுமே தவிர, அவ்விடத்தில் பிரிவினை பேதம் பேசக் கூடாது. அதனால், அந்தப் பகைவனுக்கு எதிராக, நாம் நூற்றி ஐந்து பேர்களாகி, நமக்குள் இருக்கும் வேற்றுமைகளை மறந்து, ஒற்றுமையாக இருந்து, நம் சகோதரர்களைக் காப்பாற்ற வேண்டும். நீ அவர்களை காப்பாற்ற மறுத்தால், நான் போய் காப்பாற்றுவேன்..." என்றார்.

பிறகென்ன, துரியோதனன் காப்பாற்றப்பட்டான்.





யாழ்ப்பாணம் ஜே.87 கிராம அலுவலர் பிரிவின் கிராமிய சிவில் பாதுகாப்பு குழுவின் பொதுக்கூட்டம் யாழ். அராலி வீதி 4ஆம் குறுக்கில் அமைந்துள்ள இணையும் கரங் கள் சனசமூக நிலையத்தில் நேற்று முன்தினம் மாலை 4 மணிக்கு எம்.எல்.லாபீர் தலைமையில் இடம் பெற்றபோது வருகை தந்த மக்கள், ஜே.87 கிராம அலுவலர் க.சேந்தன், யாழ். பொலிஸ் நிலையத்தைச்சேர்ந்த ஐ.பி.பொன்சேகா, புவனேந்திரன், சமந்தா ஆகியோர் அமர்ந்து இருப்பதைக் காணலாம். (105)

# வீட்டுத் திட்ட வசதிகள் இன்றி இத்திமடு கிராம மக்கள் அவலம்



முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவில் பெரிய இத்திமடு கிராமத்தில் வீட்டுத் திட்ட வசதிகள் வழங் கப்படவில்லை என அக் கிரர்ம மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இக்கிராமத்தில் 65 குடும்பங்கள உள்ள போதிலும் இக் கிராமத் திற்கு 05 குடும்பங்களுக்கு மட் டுமே நிரந்தர வீடமைப்பதற் கான வீட்டுத்திட்ட உதவிகள் வழங்கபபட்டுள்ளது.

இக் கிராமத்தில் உள்ள மக்கள நாளாந்தம் கூலி வேலை செய்தே வருகின்றனர். இந்நிலையில் இம்மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு 3வருடங்கள் முடி வடைந்தும் அடிப்படை தேவை களையோ நிரந்தர வீடுக ளையோ நிறுவனங்களோ அரச திணைக்களங்களோ இக் கிராம மக்களுக்கு செய்து கொடுக்க வில்லை என இக்கிராம மக் கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதி காரிகள் கவனத்தில் கொண்டு இம் மக்களின் பிரச்சினைக்கு தீர்வினைப் பெற்றுத் தரும்படி மக்கள் கோரிக்கை விடுக்கின்ற னர். (40)

# சீன அரசின் புலமைப்பரிசில் விண்ணப்பங்கோரல்

உயர்கல்வி அமைச்சினால் சீன அரசாங்கத்தின் புலமைப்பரிசில் கள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள இளமாணி மற்றும் பட்டப்பின்படிப்பு புலமைப்பரிசில்கள் 2014,15 திட்டத்திற்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

பட்டப்பின்படிப்பு புலமைப்பரிசில்கள், அரசதுறை, அரசதுறை கூட்டுத்தாபனங்கள், சபைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் தனியார் துறையிலிருக்கின்ற நிரந்தரமான உறுதிசெய்யப்பட் டுள்ள பணியாளர்களுக்கான இப்புலமைப்பரிசில் திட்டத்திற்கு தகுதியான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இளமாணி வெற்றிடம் 10, பட்டப்பின்படிப்பு 16 புலமைப்பரி சில்கள் வழங்கப்படவுள்ளதுடன் விண்ணப்பதாரிகள் எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை www.mohergov.lk என்ற அமைச்சின் இணையத்தளத்திலிருந்து தரவிறக்கம் செய்ய முடியும் என உயர் கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

# துணுக்காய் வலய பாடசாலைகளில் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுப்பு

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேசத்தில் உள்ள பாடசா லைகளில் இவ்வாண்டு பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங் கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

முல்லைத்தீவு துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாட சாலைகளின் பல்வேறு தேவை கள் பூர்த்தி செய்யப்பட்டு வரு கின்றன.

அந்த அடிப்படையில் 2014ஆம் ஆண்டில் ஏழு வேலைத்திட் டங்கள் மேற்கொள்ளப்பட வுள்ளதாக துணுக்காய் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட் டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதாவது ஏழு பாடசாலைகளில் 120x25 வகுப்பறைக்கட்டடத் தொகுதிகள் 63 மில்லியன் ரூபாவிலும் இரண்டு மாடிக்கட்ட டங்கள் ஐந்து பாடசாலைகளில் 100 மில்லியன் ரூபாவிலும் ஆறு பாடசாலைகளில் 60 மில்லியன் ரூபாவில் ஆசிரியர் விடுதிகளும் நான்கு பாடசா லைகளில் 14 மில்லியன் ரூபாய் செலவில் அதிபர் விடுதிகளும் அமைக்கப்படவுள்ளன.

அத்துடன் 18 பாடசாலைக ளில் 0.5மில்லியன் ரூபாய் செலவில் வேலிகள் அமைத்தல் 4 மில்லியன் ரூபா செலவில் 4 பாடசாலைகளில் ஆசிரிய மல சலகூடம் அமைத்தல் 2 மில்லி யன் ரூபா செலவில் 10 பாட சாலைகளில் சிறுசிறு திருத்த வேலைகள் மேற்கொள்ளப்ப டவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட் டுள்ளது. (கே)

# பூர்த்தியாகும் நிலையில் சந்தைக் கட்டடப் பணிகள்

முல்லைத்தீவு மல்லாவி பொதுச்சந்தையில் “நெல்சிப்” திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுவரும் கட்டுமானப்பணிகளில் 65 வீதமான வேலைகள் நிறைவுபெற்றிருப்பதாக துணுக்காய் பிரதேச சபையின் செயலாளர் நவரத்தினராஜா தெரிவித்துள்ளார்.

துணுக்காய் பிரதேச சபையின் கீழ் உள்ள மல்லாவி பொதுச்சந்தையின் நெல்சிப் திட்டத்தின் கீழ் 20 மில்லியன் ரூபா செலவில் புதிய சந்தைக் கடைத்தொகுதி ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது. இதில் 7.4 மில்லியன் ரூபாவில் 65 வீதமான வேலைகள் பூர்த்தியடைந்திருப்பதாகவும் ஏனைய வேலைகள் மிக விரைவாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனத் தெரிவித்துள்ளார்.(கே)

# மடத்துக்கரை ஸ்ரீமுத்துமாரி கும்பாபிஷேக பெருவிழா

(யாழ்.நிருபர்)

காரைநகர் மடத்துக்கரை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய திருப்பணி வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இவ்வாலயத்தின் கும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் 9ஆம் திகதி காலை 8.20 மணிக்கு நடைபெறவுள்ளது.

கொழும்பு ஜிந்துப்பிட்டி சிவசுப்பிரமணியசுவாமி ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ வை.சுப்பிரமணியக்குருக்கள் பிரதிஷ்டாகுருவாக இருந்து கும்பாபிஷேக கிரியைகளை நடாத்திவைப்பார். (10)

# தான்தோன்றீஸ்வர ஆலய சிவராத்திரி விழா சிறப்பு

ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வர ஆலயத்தின் சிவராத்திரி விழா வெகுசிறப்பாக இடம்பெற்றது.

ஒட்டுசுட்டான் ஆலயம் சிவராத்திரி பூஜைகள் திருஞான பஞ்சச் சரக் குருக்களினால் 04 சாம பூஜைகளும் இடம்பெற்று பிரார்த் தனைகள் செய்யப்பட்டதோடு சிறுவர்களின் நடன இசையும் இடம் பெற்றது. பெரும் திரளான மக்கள் பல்வேறு பிரதேசங்களில் இருந்து சிவராத்திரி விரதத்தினை அனுஸ்டிப்பதற்காக கலந்து சிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (40)

# சமூக நலன் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

கைதடி சரஸ்வதி சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் சமூக நலன் தொடர்பான கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கலை வாணி பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிலையத்தலைவர் தலை மையில் நடைபெறும் இந்நிகழ் வில் கலாநிதி சிவசங்கர் கருத் துரை வழங்கவுள்ளார்.

இக்கருத்தரங்கில் நிலைய மற்றும் விளையாட்டுக் கழக அங்கத்தவர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு நிலையச் செயலாளர் அறிவித்துள்ளார். (51)

# ‘உள்ளும் வெளியும்’ நூல் வெளியீட்டு விழா




உயில் கலை இலக்கிய சங் கத்தின் ஏற்பாட்டில் சு.குணேஸ் வரனின் “உள்ளும் வெளியும்” என்ற ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு நூல் வெளியீட்டு நிகழ்வு இன்று காலை 9.00 மணிக்கு தேவரையாளி இந் துக்கல்லூரி மண்டபத்தில் குப் பிழான் ஐ. சண்முகன தலைமை யில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் வடமராட்சி வலய பிரதிக்கல்விப்பணிப்பாளர் அ. சிறீ கரன் வாழ்த்துரையையும், கருணாகரன், இ.இராஜேஸ் கண்ணன் ஆகியோர் மதிப்பீட் டுரைகளையும் நிகழ்த்துவர்.

நிகழ்வில் சி.விமலன் வர வேற்புரையையும், வீ. வீரகுமார் நன்றியுரையையும் நிகழ்த்துவர். நிகழ்வில் அதிபர் இரா.ஸ்ரீநட ராசா, புத்தகக்கூடம் தெ.ரவீந்தி ரன் ஆகியோர் நூலின் பிரதி களை வழங்கிக் கௌரவிப்பர். நூலாசிரியர் சு. குணேஸ்வரன் ஏற்புரையை நிகழ்த்துவார். (90)

# பண்புள்ள பிரஜைகளை உருவாக்க அறநெறிப்பாடம் வழிவகுக்கும்

## இந்துகலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்

எமது எதிர்கால சந்ததியினருக்கு சமய விழுமியங்கள், அறநெறி கருத்துக்களை புகட்ட வேண்டும்அவ்வாறு அறநெறியைக் கற்கின்ற போது அவர்கள் ஒரு சீரிய பண்புள்ள பிரஜைகளாக எதிர்காலத்தில் திகழ்வார்கள் அதனால் அவர்களது வாழ்க்கை சிறப்பாக அமையும் என இந்து கலாசார திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி மகிந்தினி விஜயகுமார் தெரிவித்துள்ளார்.

ஆனைப்பந்தியில் உள்ள திசைகாட்டி வீசா ஆலோசகர் நிலையத்தில் இடம்பெற்ற இலவச அறநெறிப்பாடசாலை அமைபபது தொடர்பான ஆலோசனை நிகழ்வு அண்மையில் நடைபெற்ற போது அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்

அவர் மேலும் உரையாற்றுகையில்,

அறநெறிக்கருத்துக்கள் அனைவரும் கற்றுக் கொள்ள வேண்டியவை. அவற்றினை கற்பிப்பதற்கு அரசின் கற்பித்தல் செயற்பாட்டை மட்டும் நம்பி இருக்கக்குடாது பாடசாலைகளில் கற்பிக்கப்படுகின்ற சமயக் கல்வி பரீட்சையை மையமாகக் கொண்டது. இந்த சமய பாடபோதனைகள் மாணவர்களுக்கு போதாது என்பதனாலேயே அறநெறி பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. எனவே பாடசாலைகளிலே கற்கத் தவறியவற்றினை அறநெறி பாடசாலைகளில் பெற்றுக்கொளளக் கூடியதாக அமையவேண்டும் சமயம் என்பது வெறுமனே ஏட்டுக்கல்வி மட்டுமல்ல அது வாழ் வியலோடு ஒன்றியது.

சமயத்தினை நவீனத்துவத்துடன் வாழ்வியல் யதார்த்தத்துடன் இணைத்து போதிக்கின்ற போது சிறுவர்களுக்கு சமயத்தின் மீது ஓர் ஆர்வம் ஏற்படும்.

மேலும் திசைகாட்டி தனியார் நிறுவனம் தனது சொந்த நிதியினால் அறநெறிப்பாடசாலையை ஆரம்பித்து நடாத்த உள்ளது. பாராட்டுதற்குரியது என்றார். (54)

## சிரேஷ்ட நூலகராக சுகந்தினி நியமனம்

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி திணைக்களத்தினால் யாழ்ப்பாணம் பொதுநூலகத்தின் சிரேஷ்ட நூலகராக சுகந்தினி சதா சிவமூர்த்தி நியமனம் பெற்றுள்ளார் என மாநகர சபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்தார்.

யாழ். மாநகர சபையின் 2014 ஆம் ஆண்டுக்கான 2ஆவது மாதாந்த பொதுக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன் போது அவா இத்தகவலைத் தெரிவித்தார். உள்ளூராட்சி திணைக்களத்தினால் பொது நூலகத்திற்கு சுகந்தினி சதாசிவமூர்த்தி நியமிக்கப்பட்டுள்ளார். அதன்படி அவர் தனது பொறுப்புக்களை செவ்வனே செய்ய வேண்டும் என்றும் நூலகத்தில் சிறந்த அபிவிருத்தியை கொண்டுவர வேண்டும் என்றும் வாழ்த்துகின்றேன் என்றார். (48)

## இலங்கை வங்கியின் பதவிகள் வெற்றிடம்

இலங்கை வங்கியில் கணக்காய்வு உதவியாளர், பயிலுநருக்கான வெற்றிடங்கள் காணப்படுவதால் இந்தப்பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

க.பொ.த. (சா/த) மூன்று திறமைச்சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்தவர்கள்,க.பொ.த (உ/த) பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்தவர்கள், கணக்காய்வு நிறுவனத்தில் இரண்டு வருட அனுபவத்துடன் CAB II சித்தியடைந்திருத்தல், 28 வயதுக்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

மேலதிக தகைமைகளாக ஆங்கிலம், கணனிஅறிவு, தகவல் தொழில்நுட்பம், குழுவாகவும், அவசர நிலைமைகளில் பயனளிக்கக்கூடியவேலை ஆற்றல் எதிர்பார்க்கப்படுகின்றன. அத்துடன் நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

போட்டிப் பரீட்சையின் பின்னர் நேர் முகப்பரீட்சை இடம்பெறும் சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பங்களை எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு முன்னர் மனித வளப்பிரிவு இலங்கை வங்கி, தலைமையகம், கொழும்பு 01 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (105)

## ஏ.ரி.எம். அட்டையின்றி பணம் பெறும் வசதி

### அறிமுகப்படுத்துகிறது சம்பத் வங்கி

சம்பத் வங்கியில் கணக்குகளை பேணுவோர் தானியங்கி பணப்பரிமாற்ற அட்டை இன்றி பணத்தினைப்பெற்றுக்கொள்ளக்கூடிய புதிய முறை ஒன்றினை அண்மையில் அறிமுகப்படுத்திஉள்ளது.

இதன்மூலம் வாடிக்கையாளர்கள் தானியங்கி பரிமாற்ற அட்டை இல்லாத சந்தர்ப்பங்களிலும் தேசிய அடையாள அட்டை இலக்கம், இரகசிய இலக்கம் என்பவற்றைப் பதிவு செய்து பணத்தினை மீளப் பெற்றுக்கொள்ளமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சேவைக்கு மேலதிக கட்டணங்கள் எதுவும் அறவிடப்படமாட்டாது என்பதுடன் முதலில் ஒரு தடவை ஏ.ரி.எம் அட்டையைப்பயன்படுத்தி இதனை செயற்படுத்திக்கொள்ளவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (54)

## “யாழ்தேவி” கனவு நனவாகும் விரைவில்



(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நகர் வரையான புகையிரதப்பாதை அமைப்புப் பணிகள் நிறைவடைந்துள்ளன. ஆயினும் சாவகச்சேரி நகரிலிருந்து யாழ்.புகையிரத நிலையம் வரையான புகையிரத பாதை அமைக்கும் பணி துரித கதியில் மேற்கொள்ளப்படுகின்றன. அத்துடன் புகையிரத நிலையங்களின் கட்டடப்பணிகளும் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சாவகச்சேரி நகரில் புகையிரதப் பாதைக்கு கற்கள் இடும் பணியில் புகையிரதம் ஒன்று ஈடுபடுவதைக் காண பெருமளவான மக்கள் திரள்கின்றனர். (இ)

## பதிவிறக்கப் பெட்டகம்

மரண தண்டனை என்பதே முற்றாக ஒழிக்கப்படவேண்டியதாகும். இதை ஏற்காதவர்கள் வைக்கும் வாதம் என்ன? கொடூரமான கொலைகள் செய்தவர்கள், குற்றங்கள் செய்தவர்கள் ஏன் அதற்காகக் கொல்லப்படக் கூடாது என்பதாகும். அப்படிப்பட்ட கொடூரர்களுக்கு மரண தண்டனை விதித்தால்தான் இனி அப்படிப்பட்ட குற்றங்கள் பெருகாமலும் நடக்காமலும் தடுக்கமுடியும் என்பதே இந்தத் தரப்பின் வாதம் நம்பிக்கை.

இதைப் பற்றி கருத்துத் தெரிவித்த முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி வி.ஆர்.கிருஷ்ணய்யர், கொலைக் குற்றவாளிகளை மூன்று விதமாக வகைப்படுத்துகிறார். ஒரு நொடியில் உணர்ச்சி வசப்பட்டு கொல்லுகிறவர்கள். இவர்கள் நிச்சயம் தூக்குக் கயிற்றைப் பற்றி முன்கூட்டியே யோசிக்கக்கூடப் போவதில்லை. இரண்டாவது வகையினர் இறுகிய மனம் உடைய கிரிமினல்கள். இவர்களும் மரண தண்டனைக்கு பயப்படப் போவதில்லை. மூன்றாவது வகையினர் கொள்கை அடிப்படையிலோ, தங்களுடைய ஆழ்ந்த நம்பிக்கை அடிபப்டையிலோ, அரசியல அடிப்படையிலோ கொலையில் ஈடுபட்டவர்கள். இவர்களும் மரணத்துக்கு அஞ்சுவதில்லை. எனவே மரண தண்டனை அச்சத்தை ஏற்படுத்தி கொலைக் குற்றங்களைக் குறைக்கும் என்று நம்புவது அர்த்தமற்றது.

– ஞாநி

தண்டனைகளுக்கும் குற்றங்களுக்கும் எங்குமே நேரடியான உறவு இல்லை. தண்டனைகள் குற்றங்களைக் குறைக்கும் வழிமுறைகளும் அல்ல. குற்றங்கள் வெவ்வேறு சமூக, பண்பாட்டு, உளவியல் காரணங்களால் நிகழ்கின்றன. குறறங்களை தடுக்க முதன்மையான வழி அக்குற்றங்களுக்குக் காரணமான சமூக, பண்பாட்டு, உளவியல் காரணங்களைக் கண்டறிந்து மாற்றியமைப்பதே.

ஓர் உதாரணம். இந்தியாவில் கேரளாவில் கூட குடிப்பகை என்ற குற்றத்தொடர் நிகழ்ந்துவந்தது. குடும்பங்கள் மாறிமாறி தலைமுறைகளாக பழிவாங்கிக்கொண்டே இருக்கும். கொலைகளுக்கு கணக்குப்பட்டியல் போட்டு வைப்பார்கள். கொலைகள் கௌரவப்பிரச்சினையாகக் கருதப்பட்டன.

நூறாண்டுகளுக்கு முன் நாராயணகுரு, மன்னத்துபத்மநாபன் போன்ற பல சமூகசீர்திருத்தவாதிகள் அந்தக் குற்றங்களை உருவாக்கும் சமூக, பண்பாட்டு, மனநிலைளுக்கு எதிராக போராடினர். அவர்கள் செய்த ஒரு விஷயம் கொல்லப்பட்டவர்களை தெய்வமாக்கி வழிபடும் முறையை ஒழித்தது. உயிர்ப்பலி கொடுத்து வணங்கப்படும் சிறுதெய்வ வழிபாட்டை தடுத்தது. போர்த்தெய்வங்களை வழிபடுவதை குறைத்து அந்தத் தெய்வங்களை அகிம்சை தெய்வங்களாக மாற்றியது.

அதன் விளைவாக உளவியல் மாற்றம் உருவானது. காலப்போக்கில் குடிப்பகை என்பதே மறைந்தது. ஒரு தலைமுறைக்குள் கேரளத்தின் குடும்பக்கொலைகள் முழுமையாகவே நின்றன என்பது புள்ளிவிவரக் கணக்கு.

இன்று ஆண் பெண் உறவின் சிடுக்குகள் குற்றங்களுக்குக் காரணமாக அமைகின்றன. ஆண்களில் உறையும் ஆணாதிக்கத் திமிரை குடும்பச்சூழலில் இருந்து விலக்குவது மட்டுமே அக்குற்றங்களைக் குறைக்கும். பெண்ணின் இடத்தையும் அவளுடைய உரிமையையும் ஆண்களை உணரச்செய்யவேண்டும். அதைச்செய்பவை மதச்சீர்திருத்தங்கள், சமூக இயக்கங்கள், அரசியலியக்கங்கள், இலக்கியங்கள் முதலியவை.

தண்டனை என்பது தற்காலிகமான ஒரு தடை மட்டுமே. அது சமூகம் தன் மக்களுக்கு அளிக்கும் அறிவுறுத்தல். இது பிழை, இது பெரும்பிழை, இது ஒத்துக்கொள்ளவே முடியாத மாபெரும் பிழை என அது சொல்கிறது. தண்டனையின் வேறுபாடுகள், இந்த அளவுகோலாலேயே தீர்மானமாகின்றன. குற்றங்கள் நிகழ்த்தப்படும் மனநிலையும் சரி பாதிப்பும் சரி ஒவ்வொருமுறையும் ஒன்று. தண்டனை சமூகம் அதை எப்படிப் பார்க்கிறது என்பதை ஒட்டி வரையறை செய்யப்படுகிறது.

தண்டனை என்பது சமூகத்துக்கு அச்சமூகத்தின் கூட்டு அறம் விடுக்கும் அறிவிப்பு. மரணதண்டனை என்பது அவ்வகையில் ஒரு பெரும் அறிவிப்பு. இது அணுவிடைகூட ஏற்றுக்கொள்ள முடியாத மாபெரும் பிழை என்ற பிரகடனம் அது. ஒவ்வொரு மரணதண்டனையும் அத்தகைய ஓர் ஆழ்ந்த மனப்பதிவை சமூகத்தில் உருவாக்குவதை கொஞ்சமேனும் நுண்ணுணர்வுள்ள எவரும் உணரலாம்.


அப்படி சிலவற்றை உச்சகட்டமாக ஒரு சமூகம் விலக்குவதென்பது அச்சமூகத்தின் அறத்தின் கூர்மையையே காட்டுகிறது. நான் பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் எதிராகச் செய்யப்படும் திட்டமிட்ட பெருங்குற்றங்களை, ஆண்திமிர்கொண்ட குற்றங்களை ஓங்கிய குரலில் ஒறுக்கவேண்டும், அதற்கு இன்னும் பலமடங்கு மரணதண்டனைகள் இங்கே தேவை என்றே நினைக்கிறேன்.

குற்றத்துக்கும் தண்டனைக்குமான உறவு மகாபாரதம் முதல் தஸ்தயேவ்ஸ்கி முதல் இலக்கியத்தில் மிகமிக விரிவாக பேசப்பட்டுக்கொண்டிருக்கிறது. எதையும் பெரிய பிழையாக எடுத்துக் கொள்ளாத சமூகம் கருணை கொண்டது அல்ல. போலியானது, மொண்ணையானது.

– ஜெயமோகன்

# நீர்வரி இடாப்பு புதுப்பிக்கப்பட்டு விவசாய முன்னெடுப்பு

## சந்திரகுமார் எம்.பி.கோரிக்கை



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு அமைவாக மிக நீண்ட காலத்திற்கு முன் தயாரிக்கப்பட்ட நீர் வரி இடாப்பு புதுப்பிக்கப்பட்டு விவசாய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படல் வேண்டும் என ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சியில் திணைக்களங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள காணிகள், மற்றும் கழிவு வாய்க்கால்கள், குளங்களின் காணிகள் என வேகமாக ஆக்கிரமிக்கப்பட்டு வருகிறது இந்த இடங்களில் நிலங்களை அத்து மீறி பிடிப்பவர்கள் உண்மையிலேயே இந்த மாவட்டத்தில் ஒரு துண்டு காணி அற்றவர்கள் அல்ல மாறாக வசதி படைத்த, பல இடங்களில் காணிகள் வைத்திருக்கின்றவர்களே, இவ்வாறு சட்டத்திற்கு புறம்பாக நிலங்களை அத்து மீறிப் பிடித்து வருகின்றனர். குறிப்பாக கிளிநொச்சி குளத்தின் பின் பகுதி இவ்வாறு அத்து மீறி பிடிக்கப்பட்டு வருகிறது. இந்த நிலைமைகள் எதிர்காலத்தில் வெள்ளபெருக்கு, சீரான கழிவு நீர் அகற்றல், குளம் புனரமைத்தல் உள்ளிட்ட பல விடயங்களில் பாரிய பிரச்சினைகளை தோற்றுவிக்கும் எனவே இதில் உரிய சட்ட ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

அத்தோடு இன்றைய இக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்களும் மேற்கொள்ளப்பட்டன.

• நீர் வரி இடாப்பினை புதுப்பித்தலுக்காக காணிகளின் உரிமையை உறுதிப்படுத்தும் வகையில் பதிவுகளை மேற்கொள்வதற்காக பத்திரிகை மூலம் பொது அறிவித்தல் விடுதல்.

• கமநலசேவை நிலையங்களில் விண்ணப்பங்களைப் பெற்றுக் காணியின் உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணத்துடன் படிவங்களைப் பூர்த்திசெய்து கையளித்தல்.

• பின்னர் பெறுப்பேற்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களுக்கு அமைவாக பிணக் குகள் அற்ற காணிகளை முதலில் நில அளவை செய்யப்பட்டு புதிய பதிவுகளுக்கு உட்படுத்துதல்.

• பிணக்குகள் உள்ள காணிகள் தொடர்பில் பிரதேச செயலாளர் மட்டத்தில் ஆராயப்பட்டு தீர்வு காணப்படுதல்.

• மேற்படி நடவடிக்கைகளுக்கு ஏதுவாக மாவட்ட செயலக பிரதிநிதி, கிராம அலுவலர், அபிவிருத்தி உத்தியோகத்தர், பெரும்பாக உத்தியோகத்தர்கள், பிரதேச கமக்கார அமைப்பு தலைவர், நீர்ப்பாசனத்திணைக்கள உத்தியோகத்தர், கமநல சேவைகள் நிலைய அலுவலர், காணி அலுவலர். அந்தந்தப் பிரதேசங்களிலுள்ள மூத்த விவசாயி ஒருவர் ஆகியோரை உள்ளடக்கிய உப குழு ஒன்றை அமைத்தல்.

• இதன் பின்னர் நீர் பங்கு, உரமானிய விநியோகம், உள்ளிட்ட விவசாய நடவடிக்கைகளை புதிய பதிவுக்கு அமைவாக மேற்கொள்ளல்.

போன்ற திர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டதோடு ஏற்கெனவே விண்ணப்பங்கள் பெறப்பட்ட 06,07 ஆம் வாய்க்கால், பெரிய பரந்தன் பிரதேசங்களில் வரும் மார்ச் மாதம் 07 ஆம் திகதி நடவடிக்கைகளை ஆரம்பித்தல் எனவும் தீர்மானிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், மேலதிக அரச அதிபர் சீர்ணிவாசன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை. தவநாதன், கரைச்சி பிரதேச செயலாளர் கோ.நாகேஸ்வரன், கண்டாவளை பிரதேச செயலாளர் முகுந்தன், கிளிநொச்சி உதவி பொலிஸ் அத்தியட்சகர் எட்மன் மகேந்திரா, கிளிநொச்சி நீர்ப்பாசனத்திணைக்களப் பிரதி பணிப்பாளர் சுதாகரன், அதன் பொறியிலாளர் விகிர்தன், கமநல சேவைகள் நிலைய உதவி ஆணையாளர் தயாரூபன், நிலஅளவைத் திணைக்கள உத்தியோகத்தர், மாவட்டசெயலக பிரதித்திட்டப்பணிப்பாளர் கௌரிதாசன், காணி உத்தியோகத்தர்கள், பெரும்பாக உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# இலங்கை - வியட்நாம் இணைந்து கட்டுரைப் போட்டிக்கு ஏற்பாடு

வியட்நாம் தலைவர் ஹோசிமினின் 124ஆவது பிறந்த தினத்தை நினைவு கூறும் வகையில் கட்டுரைப்போட்டி நடைபெறவுள்ளது.

இதனை இங்கை வியட்நாம் தூதுவராலயமும், வியட்நாம் நட்புறவுச்சங்கமும் கொழும்பு நூலகமும் இணைந்து நடாத்துகின்றன.

15 வயதுக்கு மேற்பட்ட இலங்கைப் பிரஜைகள் இருபாலாரும் போட்டியில் கலந்து கொள்ளலாம். போட்டிகள் மும்மொழியிலும் இடம்பெறும். கட்டுரைகள் 2000 - 3000 சொற்களில் எழுதப்படல் வேண்டும்.

மறைந்த உன்னத தலைவர் ஹோசிமினின் வழிகாட்டுதலில் நடைபெற்ற விடுதலைப் போராட்டம், அதற்கேற்பட்ட சர்வதேச அழுத்தம் அல்லது இலங்கைக்கும் வியட்நாமுக்கும் இடையில் இருந்து வரும் சகோதரத்துவ உறவு, இன்று வியட்நாம் அடைந்துவரும் அபிவிருத்தி முன்னேற்றம் முதலிய விடயங்கள் அடங்கியதாக கட்டுரைகள் அமையவேண்டும்.

கட்டுரைகள் எப்ரல் 30ஆம் திகதிக்கு முன்னதாக பொது நூலகம், 15 சேர் மார்கஸ் பெர்னாண்டோ மாவத்தை கொழும்பு 07 என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். தொலைபேசி இல, 011 2695156, 011 2696530, இணையத்தளம் www.viernamempassy.srilanka.v.n. என்ற முகவரிகளில் தொடர்பு கொள்ளலாம்.

பரிசுக்குரியவர்கள் இருவா வியட்நாம் நாட்டிற்கு இலவசமாகச் செல்லும் வாய்ப்புள்ளது. அத்துடன் ஆறுதல் பரிசும் கிடைக்கவுள்ளது. (105)

# சமாதானப் பேரவையின் கோரிக்கையை அடியோடு நிராகரித்தது அரசு

தேசிய சமாதான சபையின் கோரிக்கையை அரசாங்கம் நிராகரித்துள்ளது. சர்வதேச சமூகத்துடன் இணைந்து இலங்கைப் படையினருக்கு எதிரான போர்க் குற்ற விசாரணைகளை நடாத்துமாறு தேசிய சமாதான சபை கோரியிருந்தது. எனினும், இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது என உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த நிறுவனததிற்கு நோர்வே அரசாங்கம் நிதி உதவி வழங்கி வருகின்றது என. அரசாங்க உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

படைவீரர்களுக்கு எதிராக வழக்குத் தொடர எவருக்கும் அனுமதியளிக்கப் போவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த முயற்சி அமெரிக்காவின் மற்றுமொரு சதித் திட்டமாக கருதப்படவேண்டும் எனவும், படையினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க அரசாங்கம் இடமளிக்காது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## இலவச மருத்துவ முகாம்

யாழ்.மாவட்ட மருத்துவ அதிகாரிகள் சங்கத்தில் நெடுங்கேணியில் கடந்த 23ஆம் திகதி காலையிலிருந்து நண்பகல் வரை இலவச மருத்துவ சேவையினை வழங்கியுள்ளனர்.

நெடுங்கேணி பிரதேசத்துக்குட்பட்ட கரடிப்புலவு, தண்டுவான், பழம் பாசி, இத்திமடு, தட்டையன்மலை, ஒதியமலை, நெடுங்கேணி நகரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் கலந்து கொண்டு பயனடைந்துள்ளனர்.

# தனங்கிளப்பு வீதியில் மீன்சந்தை அமைக்கும்பணி நிறைவடையும் நிலையை எட்டியுள்ளது

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையினால் 7 மில்லியன் ரூபா செலவில் தனங்கிளப்பு வீதியில் மீன் சந்தை அமைக்கும் பணி நடைபெற்றுவருகின்றது.

இதுவரை காலமும் சாவகச்சேரி பேருந்து தரிப்பிடத்திற்கு தெற்குப் பக்கத்தில் இயங்கி வந்தது. தற்போது நவீன வசதிகளுடன் இம் மீன் சந்தை அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் புதிய மீன் சந்தை அருகிலே இறைச்சிக்கடைகளும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (130)

# வீட்டு வாசல்வரை வந்த முதலைக்கு விழுந்தது கோடாரிக் கொத்து

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகரை அண்டிய பகுதியில் உள்ள கிராமம் ஒன்றில் வீட்டு வாசல்படி வரை முதலை வந்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில்,

கிளிநொச்சி ஜெயந்திநகர் பகுதியில் உள்ள தற்காலிக வீடு ஒன்றின் வாசல் வரை அருகில் உள்ள வாய்க்காலில் இருந்த முதலை இரவு வேளை வந்துள்ளது.

வீட்டில் இருந்த குடும்பப் பெண் வீட்டு வாசலில் வித்தியாசமான மூச்சுவிடும் ஓசை கேட்டதால் சுதாகரித்துக் கொண்டு வாசலை எட்டிப் பார்த்துள்ளார்.

அப்போது வீட்டிற்குள் ஏறு அதற்கு தயாராக அந்த முதலை வீட்டு வாசலில் நின்றுள்ளது. அவர் வெளியில் வர முடியாத நிலையில் கைத்தொலைபேசி மூலம் அயலவர்களுக்கு அறிவித்துள்ளார். உடனடியாக அங்கு திரண்ட அயலவர்கள் முதலையை பிடித்து அப்புறப்படுத்த முயற்சித்துள்ளனர்.

ஆயினும் அது பயனற்றுப் போக அயலவர் ஒருவர் அதனை கோடாரியால் தாக்கி வீட்டாரை காப்பாற்றியுள்ளார்.

கனகபுரம் வயல் வெளிப் பகுதியை அடுத்துள்ள வாய்க்காலில் இருந்தே இந்த முதலை வெளியேறி அயலிலுள்ள வீட்டினுள் சென்றுள்ளது.

# கணனிமயப்படுத்தப்பட்ட வருமானப்பகுதி மன்னாரில் திறப்பு



மன்னார் நகரசபையில் கணனி மயப்படுத்தப்பட்ட வருமானப் பகுதி நகரசபைத் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம் தலைமையில் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

இதில் உள்ளூராட்சி, கூட்டுறவு அபிவிருத்தி, தொழிற்றுறை, சமூக நலன் மற்றும் காணிகள் அமைச்சின் வடமாகாண செயலாளர் சி.திருவாகரன், ஆசிய மன்றத்தின் பொருளாதார ஆளுகைத்திட்டப் பணிப்பாளர் கலாநிதி கோபாலகுமார் தம்பி, உள்ளூராட்சி பெருளாதார ஆளுகைத்திட்ட பிரதிக் குழுத் தலைவர் ஏ.சுபாகரன், மன்னார் பிரதி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எம்.ஏ.ஜே.துரம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சின் கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபையில் காணப்படும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பிரதிப் பொது முகாமையாளர், உள்ளக கணக்காய்வாளர், உதவிப் பொது முகாமையாளர், முகாமைத்துவ உதவியாளர் பதவிகளுக்கு வயது 18 இற்கும் 45 இற்கும் இடைப்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம்.

பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குட்டதுமாகும். கல்வித் தகைமைகள் பதவிகளுக்கு ஏற்பமாறுப்பட்டதாகும் கல்வித்தகைமைகளுடன் அனுபவமும் எதிர்பார்க்கப்படுகின்றன.

விண்ணப்பங்கள் 14.03.2014 இற்கு முன்னர் பதிவுத்தபாலில் தவிசாளர், கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபை 1ஆம் மாடி, தேசிய வீடமைப்புத்திணைக்கள கட்டடம், சேர் சிற்றப்பலம் ஏ.கார்ட்டினர் மாவத்தை, கொழும்பு 02 என்ற முகவரிக்கு அனுப்பப்படவேண்டும்.

கடிதத உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்படல் வேண்டும். (105)

4. 1) வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.

( books, pencils, stamps, bags)


2) வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொற்களை ஆங்கிலத்தில் எழுதுக.



5. கருத்தினைத் தமிழில் எழுதுக.

1) Good Mirning : ......................................
2) Please come here : ......................................
3) What is this? : ......................................

6. பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தைப் புள்ளிக் கோட்டின் மீது தமிழில் எழுதுக.





◆ 7 தொடக்கம் 28 வரையுள்ள வினாக்களின் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

7. ஆண்டுக்கு ஒரு தடவை மட்டும் காய்க்கும் பழம் எது?
1) பப்பாசி 2) மரமுந்திரிகை 3) வாழை 4) கொய்யா

8. காற்றின் உதவியுடன் பரவும் தாவரம் எது?
1) புன்னை 2) இருவேரி 3) சீதேவியார் செங்கழுநீர் 4) திப்பிலி

9. தண்டுகோதிப் புழுவினால் தாக்கப்படும் தாவரம் எது?
1) கத்தரி 2) புலோல் 3) குரக்கன் 4) நெல்

10. உருவில் காட்டப்பட்டுள்ள திருகாணியைப் பொருத்தப் பயன்படுத் தக்கூடிய மிகப் பொருத்தமான கருவி பின்வருவனவற்றில் யாது?




**எதிர்வரும் சனிக்கிழமை இவ் வினாத்தாளுக்குரிய விடைகள் பிரசுரமாகும்.**



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2014

பகுதி - II
1 மணி 15 நிமி

# கல்வி முரசு



**பின்வரும் வினாக்களுக்கு உரிய விடைகளைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

1. அடைப்பினுள் தரப்பட்டுள்ள சொற்கள் கீழே தரப்பட்டுள்ளவாறு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. அக்கோலத்தை இனங்கண்டு வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொற்களைப் புள்ளிக் கோடுகளின் மீது எழுதுக.


| | | |
|---|---|---|
| வித்து | திகதி | பதவி |
| தும்பு | தந்தி | புனித |

பதவி வித்து தும்பு .................... .................... ....................


2. பின்வரும் குறுக்கெழுத்துப் புதிரில் இடமிருந்து வலமாகவும், மேலிருந்து கீழாகவும் கருத்துள்ள சொற்களை அமைத்து இப் புதிரை நிரப்புக. தரப்பட்டுள்ள உதவிக் கூற்றுக்களைப் பயன்படுத்துக.

இடமிருந்து வலம் : 1. வெள்ளை நிறப்பறவை.
: 3. அகத்திற்கு எதிரானது.

மேலிருந்து கீழ் : 1. மிருகங்களுக்கு உண்டு.
: 2. நீரை அள்ளலாம்.




3. 1 ஆம் 2 ஆம் தராசுகளில் வைக்கப்பட்டுள்ள பொருட்களின் நிறைகளின் மொத்தத்தை அவதானிக்க. மூன்றாம் தராசில் உள்ள பொருள்களின் நிறை எத்தனை கிலோகிராம்?



| 1 ஆம் தராசு | 2 ஆம் தராசு | 3 ஆம் தராசு |
|---|---|---|
| கிலோ கிராம் 6 | கிலோகிராம் 8 | கிலோகிராம் ............ |

................

4. பின்வரும் பொருட்களின் விலைகளின் கூட்டுத்தொகையைப் பார்த்து புத்தகத்தின் விலையைக் காண்க.





புத்தகத்தின் விலை ............

............


5. இங்கு அதிக தடவைகள் குறிக்கப்பட்டுள்ள இலக்கம் யாது?

6. சதுரமுகியின் பல்வேறு பக்கங்கள் இங்கே காட்டப்பட்டுள்ளன.





எழுத்து W இற்கு எதிரே இருக்கும் பக்கத்தில் உள்ள எழுத்து யாது? ....................

7. ஒரே சதுரமுகியின் பல்வேறு பக்கங்கள் இங்கே காட்டப்பட்டுள்ளன.




இலக்கம் 6 இற்கு எதிரே இருக்கும் பக்கத்தில் உள்ள இலக்கம் யாது? ....................

நிமல், விமல், அமல் என்னும் மூவர் உடற்பயிற்சிக்காக நடந்து செல்லும் மூன்று பாதைகள் கீழே தரப்பட்டுள்ளன. இவர்கள் மூவரும் பயணத்தை ஆரம்பிக்கும் இடங்கள் A,B,C என்ற எழுத்துக்களாலும், முடிவிடங்கள் X,Y,Z என்ற எழுத்துக்களாலும் குறிக்கப்படுகின்றன.




8. இம்மூவரிடையே எவர் மிக நீளமான பாதையில் பயணம் செய்கிறார்?

..........................................................................

9. இம்மூவரும் தத்தம் பயணப் பாதைகளில் நடந்து செல்லும்போது அதிக தடவைகள் தமது இடப்பக்கமாகத் திரும்பியவர் யார்? ....................



## வினாத்தாள் II

1. கீழே தரப்பட்டுள்ள பாடலை வாசிக்க.

இந்த உலகில் நீங்கள் கன்றை நினைந்தே உள்ளம் பருவம் பார்த்து நாங்கள்
இயற்றும் தொண்டில் எல்லாம் கசியும் பசுவைப் போல பயிரைச் செய்தல் போலக்
தந்தை தாயைப் பேணும் நன்றி புரிந்தோர் தம்மை கருமந் தொடங்கும்போது
தருமம் ஒன்றே பெரிது நாமும் நினைக்க வேண்டும். காலம் பார்க்க வேண்டும்.

பாடல் அடிகளைக்கொண்டு (1) தொடக்கம் (10) வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

1) 'அறம்' என்ற கருத்தைத் தரும் சொல் ஒன்று எழுதுக. ....................
2) தொண்டுகளில் பெரியது எனக் கவிஞர் கருதுவது எதனை? ....................
3) 'உள்ளம் கசிதல்' என்பதன் பொருள் யாது? ....................
4) 'நாம் நினைத்தோம்' என்பதனை ஒருமையில் மாற்றி எழுதுக ....................
5) தந்தை, தாயைக் குறிக்கும் ஒரு சொல் எழுதுக. ....................
6) பசுவின் இளமைப் பெயர் யாது? ....................

8) இங்கு இடம்பெறும் முன்னிலை, பன்மைப் பெயர்ச்சொல்லை எழுதுக. ....................
9) கவிஞர் 'கன்றை' யாருக்கு ஒப்பிடுகின்றார்? ....................
10) பருவம் பார்த்துப் பயிர்செய்தல் என்ற கருத்தைத் தரும் பழமொழி ஒன்றை எழுதுக.

....................

2. சொற்களைப் பொருத்தமாக ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.

1) கதைகள் / பற்றிய / பலவற்றை / குளங்கள் / சேகரித்தான் / மோகன்

..........................................................................

2) கடக்க / மஞ்சள் / பயன்படுத்துவோம் / கோட்டையே / எப்போதும் / பாதையை

..........................................................................

3. வெற்றிடத்துக்குப் பொருத்தமான எழுத்துப் பிழையற்ற சொல்லை அடைப்புக்குள்ளிருந்து தெரிவு செய்து எழுதுக.

1) இந்த ஆண்டு எங்கள் பாடசாலையின் .................................... விழா எமது அதிபரின் தலைமையில் நடைபெற்றது.
( பறிசழிப்பு, பரிசளிப்பு, பரிசலிப்பு, பரிசழிப்பு)

2) வாழ்க்கையில் நாம் முன்னேற .................................... செய்ய வேண்டும்.
(முயற்சி, முயர்ச்சி, ஆராய்ச்சி, முயட்ச்சி)

3) ஹூயி பாஸ்டர் .................................... யில் ஈடுபட்டார்.
( ஆராச்சி, ஆராட்சி, ஆராய்ச்சி, ஆராட்ச்சி)

# காசோலை மோசடிகளுக்கு குடாநாட்டில் குறைவில்லை

## யாழ். உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் கடந்த வாரம் மூன்று காசோலை மோசடி சம்பவங்களும் ஒரு பண மோசடிச் சம்பவமும் இடம்பெற்றிருப்பதாக யாழ் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நிகால் பெரேரா தெரிவித்துள்ளார்.

இதில் கடந்த 20 ஆம் திகதி நாவலர் வீதியில் உள்ள ஒருவருக்கு வியாபார நோக்குடன் 48 ஆயிரம் ரூபா காசோலையை புத்தளத்தைச் சேர்ந்த ஒருவர் கொடுத்து மோசடி செய்துள்ளதாக யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

எனினும், இது குறித்த சந்தேக நபர் பொலிஸாரினால் கைது செய்யப்படவில்லை எனவும் நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை உரும்பிராயைச சேர்ந்த ஒருவர் வேறு நபர் ஒருவருக்கு நான்கு இலட்சத்து நான்காயிரத்து பத்து ரூபா காசோலை கொடுத்து மோசடி செய்துள்ளதாகவும் பொலிஸாருக்கு முறைபாடு கிடைத்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் சில்லாலை, பண்டத்தரிப்பு பகுதியில் நடைபெற்ற பிறிதொரு மோசடிச் சம்பவத்தில் இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா காசோலை மோசடிச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

அத்துடன் நல்லூர், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பணம் கொடுத்து நபர் ஒருவரால் ஏமாற்றப்பட்டுள்ளதாகவும் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுளளது.

இவ்வாறு சீட்டுக்கும், வட்டிக்கும் காசோலை கொடுத்து மோசடி செய்யப்படும் சம்பவங்களும் நடைபெறுவதாகவும் தெரிவிக்கும் பொலிஸார் இது குறித்து அவதானமாக இருக்குமாறு பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளார்.

பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களுக்கும் மற்றும் அமைப்புகளுக்கும் இவ்வாறு சீட்டுக்கும், வட்டிக்கும் காசோலையை வழங்குமாறு அறிவுறுத்தியுள்ளனர்.(பா)

# இளைஞர்கள் அட்டகாசம் பெற்றோர்கள் தக்க பதிலடி

(கரணவாய்)

கரவெட்டி பகுதியில் உள்ள தனியார் கல்வி நிலையத்திற்கு முன்பாக நிற்கும் இளைஞர்களின் அநாகரிகமான செயற்பாட்டிற்கு பெற்றோர்கள் தக்க பதிலடி கொடுத்துள்ளனர்.

குறித்த கல்வி நிலையத்திற்கு மாலை வேளைகளில் செல்லும் பெண் பிள்ளைகளுக்கு இளைஞர்கள் இடையூறை ஏற்படுத்தியதுடன் சேட்டைகளிலும் ஈடுபட்டு வந்தனர்.

இதனால் பெண் பிள்ளைகள் சிரமத்தின் மத்தியில் கல்வி நிலையத்திற்குச் சென்று வந்ததுடன் இது தொடர்பாக பெற்றோருக்கும் தெரியப்படுத்தியுள்ளனர்.

இதனையடுத்து இச்செயற்பாட்டை அவதானித்த பெற்றோர்கள் ஒன்றிணைந்து அங்கு நினற ஒரு இளைஞனைப் பிடிக்க மற்றையவர்கள் ஓடித்தப்பியுள்ளனர்.

பிடிபட்ட இளைஞனை நெல்லியடிப் பொலிஸாரிடம் பெற்றோர் ஒப்படைத்ததுடன், ஏனைய இளைஞர்கள் பற்றியும் விசாரணை செய்யுமாறு பெற்றோர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

எனினும், பொலிஸார் இவ்விடயம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டதாகவும் பெற்றோர்களின் இவ்வாறான செயற்பாடு முன் உதாரணமாக அமைந்துள்ளதாகவும், இது பாராட்டப்பட வேண்டிய விடயம் எனவும் கூறப்படுகிறது. (18)

# புதிய நிர்வாகசபை தெரிவு

(நெல்லியடி)

நெல்லியடி ஆட்டோச் சங்கத்தின் 2014 ஆண்டுக்கான புதிய நிர்வாக சபை தெரிவும் கூட்டமும் அண்மையில் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் நடைபெற்றது.

நெல்லியடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கஙகார தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் 2013 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுக் கணக்கு பொதுச சபையினால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

புதிய நிர்வாக சபைத் தெரிவில் தலைவராக கிட்டிணன் கிருஸ்ணராசா, செயலாளராக சிவராசா புஸ்பராசா, பொருளாளராக தவராசா ஜெயக்குமார், உபதலைவராக புஸ்பகாந்தன் புஸ்பகரன், உபசெயலாளராக ந.பிரசன்ன ஆகியோருடன் நிர்வாகசபை உறுப்பினர்களாக 7 பேர் தெரிவானார்கள். (18)

# மரக்கன்று வழங்கல்

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் மீள்குடியேறிய மக்களின் பொருளாதார வ்ளர்ச்சியைக் கருத்திற்கொண்டு டெல்மா நிறுவனத்தினால் பயனாளிகளுக்கென 3 ஆயிரம் மரமுந்திரிகைக் கன்றுகள் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ளது.

மரக்கன்றுகள் பயனாளிகளுக்கு கடந்த வியாழக்கிழமை சபை மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் 153 ஆவது படையணியைச் சேர்ந்த கேணல் சுபசிங்க 100 பயனாளிகளுக்கு முதற்கட்டமாக மரக்கன்றுகளை வழங்கி வைத்தார்.

மேலும் மரமுந்திரிகைச் செய்கையில் ஈடுபடும் பயனாளிகளை தொடர்பு கொள்ளுமாறு சபை செயலாளர் அறிவித்துள்ளார்.

# சிவாலய தரிசன யாத்திரை

(கொழும்பு)

அகில இலங்கை ரீதியாக உள்ள சிவாலயங்களை தரிசிப்பதற்காக துவிச்சக்கரவண்டி போட்டிகளில் பங்குபற்றிய சாதனை வீரர்களான சு.குணசேனரா, வை.கைலைநாதன் ஆகியோர் சித்தன்கேணி சிறி சிவசிதம்பரேஸ்வரர் ஆலயத்திலிருந்து நேற்று முன்தினம் காலை துவிச்சக்கரவண்டி யாத்திரையை ஆரம்பித்துள்ளனர்.

சிவசிதம்பரேஸ்வரர் ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து ஆலய குரு சிவஸ்ரீ சபா வாசுதேவக் குருக்களினால் இந்த துவிச்சக்கர யாத்திரை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இலங்கை மக்களின் சுபீட்சமான வாழ்வுக்காக இந்த துவிச்சக்கரவண்டி யாத்திரியை ஆரம்பித்துள்ளதாக அவ் வீரர்கள் தெரிவித்தனர்.

# விரிவாக்கல் உத்தியோகத்தர் போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

ஏற்றுமதி விவசாய திணைக்களத்தின் தொழில்நுட்பவியல் சேவையின் III ஆம் வகுப்பின் விரிவாக்கல் உத்தியோகத்தர் பதவிக்கு இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கல்வித்தகைமை க.பொ.த. (சா/த) பரீட்சையிலும், க.பொ.த (உ/த) பரீட்சையிலும் திறமைச் சித்தியுடன் வயது 18 இற்கும் 45 இற்கும இடைப்பட்டவராகவும் தொழிற் தகைமையும் கவனத்தில் கொள்ளப்படும்.

நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றக்கூடியவராகவும் இருத்தல் அவசியமாகும்.

இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியத்திற்குட்பட்டதுமாகும். பரீட்சை யூன் மாதம் கொழும்பில் மும்மொழியிலும் இடம்பெறும். விண்ணப்பதாரர் ஏதாவது ஒரு மொழியில் மட்டும் பரீட்சைக்கு தோற்ற முடியும்.

தொழில்நுட்ப வினாப் பத்திரத்தின் பாடத்திட்டததின் அமைவாக வினாப்பத்திரம் காணப்படும்.

விண்ணப்பங்களை பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைத் திணைக்களம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக்கிளை, பெலவத்தை, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புதல் வேண்டும்.

கடித உறையின் இடதுபக்க மேல மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடல் வேண்டும்.

பரீட்சைக் கட்டணமாக 600 ரூபா செலுத்தவேண்டும். அரச சேவையில் உள்ளவர்கள் தமது நிறுவனத் தலைவர் ஊடாக விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும். (105)




# பாடசாலையின் ஆரம்ப நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வீசா ஆலோசனை நிறுவனமான திசைகாட்டி நிறுவனத்தின் துன்னாலைப் பிரதேச இலவச அறநெறிப் பாடசாலையின் ஆரம்ப விழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு துன்னாலை வடக்கு மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிறேம் சங்கர் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக திசைகாட்டி கலை இலக்கிய மன்ற தலைவர் டாக்டர் ரி.கலாமணி கலந்துகொள்ளவுள்ளார். ஆசியுரையை யாழ். நல்லை ஆதீன முதல்வர் வழங்குவார்.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..............................................

முகவரி :- ..............................................

பிறந்த ஆண்டு :- ..............................................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்



யாழ். மாவட்டத்தில் பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்து மற்றும் சிற்றூர்தி உரிமையாளர்கள் முச்சக்கரவண்டி சங்கத்தினர் ஆகியோருக்கு போக்குவரத்து ஒழுங்கு விதிகள் சம்பந்தமாக தெளிவுபடுத்தும் யாழ். போக்குவரத்துப் பொலிஸாரின் ஏற்பாட்டிலான நிகழ்வு நேற்று யாழ். நூல்நிலைய கேட்போர்கூடத்தில் நடைபெற்றபோது... (படங்கள் : ஆர்.இராஜகுமார்)

# குறுந்தூர ஏவுகணை பரிசோதனை வெற்றிகரமாக நடாத்தியது வடகொரியா




வடகொரியா நேற்று முன்தினம் குறுகிய தூர ஏவுகணை சோதனையை வெற்றிகரமாக நடாத்தியது. இந்நாட்டின் கிழக்கு கடற்கரைப்பகுதியில் நான்கு ஸ்கட் ரக ஏவுகணைகள் இச்சோதனைக்கு பயன்படுத்தப்பட்டதாக நிபுணர்கள் தெரிவித்தனர். அமெரிக்கா, தென்கொரியா இராணுவம் இணைந்து போர் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றன. இதனை வன்மையாகக் கண்டித்த வடகொரியா, தங்கள் நாட்டின் மீது போர் ஒத்திகை நடப்பதாக குற்றஞ்சாட்டியிருந்தது. இந்த சூழ்நிலையில், வடகொரியா ஏவுகணைகளை தங்கள் கடற்பகுதியில் செலுத்தி சோதனை செய்திருப்பது, அமெரிக்கா-தென்கொரியா கூட்டுப் பயிற்சிக்கு சவால் விடும் வகையில் அமைந்துள்ளது

இதுகுறித்து யோன்சி பல்கலைக்கழக பேராசிரியர் ஜங் ஹன் கூறுகையில், 'இது ஒரு சாதாரண சோதனை ஓட்ட முறைதான்' என்று தெரிவித்தார். வடகொரியா-தென்கொரியா போர் முடிவடைந்து 60 ஆண்டுகள் நிறைவுபெற்றதையடுத்து சமீபத்தில் இருநாட்டு குடும்பங்களும் சந்திக்கும் நிகழ்ச்சிக்கு வடகொரியா அனுமதி அளித்தது. ஆனால் கிம் ஜாங்கின் ஆட்சி மனப்பான்மையானது போர்க் குணத்தை அடிப்படையாக கொண்டதாகும். இந்த மாதத் தொடக்கத்தில், கொரிய தீபகற்பத்தில் அமெரிக்காவின் பி-52 ரக போர் விமானம் பயிற்சியில் ஈடுபட்டதால் ஆத்திரமடைந்த வடகொரியா, பதில் நடவடிக்கையின் ஒரு பகுதியாக அமெரிக்க மதபோதகர் கென்னத் பே என்பவரை சிறையில் அடைத்தது.

கடந்த 2010ஆம் ஆண்டு வடகொரியா, தென்கொரியா மீது வெடிகுண்டு வீசி தாக்குதலில் 2 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர். இத்தாக்குதலில் 60 வீடுகள் எரிந்து நாசமாயின என்பது குறிப்பிடத்தக்கது.

# ஸ்தெரஸ்கோப்பிலும் பக்றீரியா - ஆய்வில் தகவல்



(லண்டன்)

மருத்துவமனைகளில் பணிபுரியும் சுகாதார ஊழியர்களின் கைகளின் மூலம் பக்றீரியாக்கள் பரவுகின்றன என்ற போதிலும் மருதத்துவர்கள் உபயோகிக்கும் ஸ்தெரஸகோப்புகளும் பக்றீரியாக்களை பரப்புவது தற்போது ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

ஒரு நோயாளியின் பரிசோதனை நிறைவு செய்யப்பட்டபின் ஸ்தெரஸ்கோப்பின் குழாய் மற்றும் அடிப்பகுதி, மருத்துவரின் கைகளின் நான்கு பகுதிகள் போன்றவற்றில் சேரும் பக்றீரியாக்களின் அளவு தனித்தனியே கணக்கிடப்பட்டது. மருத்துவர்களின் விரல்நுனியும், ஸ்தெரஸ்கோப்பின் அடிப்பகுதியும் பக்றீரியாக்கள் அதிகம் சேரும் இடங்களாக இந்த ஆய்வில் கண்டறியப்பட்டது.

இதனால் எம்.ஆர்.எஸ்.ஏ போன்ற கடுமையான தொற்றுவிளைவுகளை ஏற்படுத்தக்கூடிய பக்றீரியாக்கள் இந்தக் கருவியில் சேர வாய்ப்புண்டு. அதுமட்டுமின்றி மருந்து எதிர்ப்பு தன்மை உடைய பக்றீரியாக்களும் நோயாளி பரிசோதனையின்போது இந்தக் கருவியில் படிய வாய்ப்புள்ளது என்பதால் பக்றீரியாக்களைப் பரப்புவதில் ஸ்தெரஸ்கோப்புகளும் முக்கியப் பங்கு வகிக்கின்றன என்று தலைமை ஆராய்ச்சியாளரான டிடியர் பிட்டெட் தெரிவித்தார்.

தொற்றுநோய் எதிர்ப்பு, நோயாளி பாதுகாப்பு போன்றவை கருத்தில் கொள்ளப்பட்டு மருத்துவர்களின் கைகளும், ஸ்தெரஸ்கோப்புகளும் ஒவ்வொரு பரிசோதனைக்குப் பின்னரும் முறையாக சுத்தம் செய்யப்படவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# வித்தியாசமான விழிப்புணர்வு



அகில பாரதீய வித்யார்த்தி பரிஷித் தேசிய மாணவர் அமைப்பின சார்பில் சென்னையில் மது ஒளிப்பு விழிப்புணர்வு பிரசாரம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.


சென்னை திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோவில் அருகே உள்ள மதுபானக் கடையில், மதுபானம் வாங்க வந்தவர்களின் காலில் விழுந்து மாணவிகள் மது அருந்த வேண்டாம் என்று கேட்டுக்கொண்டனர். இதனால் சிலர் வெட்கப்பட்டு கடைக்கு வராமல் தூரத்தில் இருந்து வேடிக்கை பார்த்தனர். பின்னர் மாணவ மாணவிகள் அந்த இடத்தை விட்டுச் சென்றதும் கடைக்கு கூட்டம் வர ஆரம்பித்தது.

மது ஒழிப்பு விழிப்புணர்வு பிரசாரத்தில் ஈடுபட்ட மாணவ மாணவிகள் கூறியதாவது, இன்று பள்ளி மாணவர்கள் முதல் முதியவர்கள் வரை மதுபானத்திற்கு அடிமையாகியுள்ளனர். இதனால் இந்தியாவின் முதுகெலும்பாகிய இளைஞர் சக்தி அழிந்து விடும் போலிருக்கிறது. மாணவர்களின் நிகழ்காலத்தையே கேள்விக்குறியாக்கும் டாஸ்மாக் மதுபானக் கடைகளை தமிழக அரசு இழுத்து மூட வேண்டும் என்றனர்.

# உணவுத்திட்டத்திற்கு நிதி திரட்ட சொகுசு விடுதியில் விருந்து

ஐ.நா.வின் உலக உணவுத் திட்டத்துக்காக நிதி வசூலிக்கும் நோக்கில், டுபாயில் மிக உயரமான சொகுசு ஹோட்டலில் அமைந்துள்ள ஹெலிகொப்டர் தளத்தில் எதிர்வரும் 13ஆம் திகதி 12 பேருக்கு சிறப்பு விருந்து அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த விருந்து நிகழ்ச்சியின் வாயிலாக கிடைக்கப்பெறும் நிதியின் மூலம் 1 இலட்சத்து 20 ஆயிரத்துக்கும் அதிகமான குழந்தைகளுக்கு ஒரு நாள் உணவு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

நிதி வசூலிப்பது மட்டுமின்றி இந்த நிகழ்ச்சியின் மூலம் ஐ.நா. உணவுத் திட்டத்தின் மூலம் மேற்கொண்டு வரும் சேவைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த இயலும் என்று நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். மேலும் இந்த விருந்து நிகழ்ச்சியின் மூலம் தனிநபர் ஒவ்வொருவரும் ஐ.நா.வின் உணவுத் திட்டத்துக்காக 2,722 அமெரிக்க டொலர் (இந்திய மதிப்பில் சுமார் ரூ.1.6 இலட்சம்) நிதி திரட்டவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.



"புர்ஜ் அல் அரப்" எனப்படும் அந்தச் சொகுசு ஹோட்டலின் ஹெலிகொப்டர் தளம், தரையில் இருந்து 212 மீற்றர் உயரத்தில் உள்ளது. துபாய் உணவுத் திருவிழாவின் இறுதி நிகழ்ச்சியாக இந்தச் சிறப்பு விருந்து நடத்தப்படுகிறது. ஹெலிகொப்டர் தளத்துக்கு கீழ் உள்ள அறையில் வரவேற்பு நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

உலகச் செய்திகள்

# மனைவியை ஏமாற்றுவதில் பிரான்ஸ் ஆண்கள் முதலிடம்

## கருத்துக் கணிப்பில் தகவல்

(பாரிஸ்)

மனைவிக்கு துரோகம் செய்வதில் பிரான்ஸ், இத்தாலி நாட்டு ஆண்கள் முதலிடத்தில் இருப்பது கருத்துக் கணிப்பில் தெரியவந்துள்ளது. பிரான்ஸ் இன்ஸ்டிடியூட் ஆப் ஒப்பீனியன் என்ற நிறுவனம், மனைவிக்கு துரோகம் செய்யும் ஆண்கள் குறித்த கருத்துக்கணிப்பை பிரான்ஸ், இத்தாலி, இங்கிலாந்து, பெல்ஜியம், ஜேர்மனி உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளில் நடாத்தியது. 4500 ஆண்களிடம் நடத்தப்பட்ட ஆய்வில் தெரியவந்த தகவல்கள் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டன. அதன்படி, வேறு பெண்களுடன் தொடர்பு வைத்து மனைவிக்கு துரோகம் செய்வதில் முதலிடத்தில் இருப்பவர்கள் பிரான்ஸ், இத்தாலி ஆண்கள்தான்.

இரு நாடுகளிலும் 55 சதவீதம் பேர், மனைவிக்கு துரோகம் செய்திருப்பதை ஒப்புக் கொண்டுள்ளனர். கடந்த சில தினங்களுக்கு முனபுதான் பிரான்ஸ் அதிபர் ஹோலண்டே, நடிகையும் காதலியுமான ஜுலி கயாத்துடன் இருப்பது போன்ற படங்கள் வெளியாயின. இந்தப் படங்களால் ஹோலண்டேவுக்கும் அவரது மனைவி



வலாரிக்கும் இடையிலான உறவு முறிந்தது. இந்த சூழ்நிலையில் வெளியாகியுள்ள கருத்து கணிப்பு முடிவு அதிபரும் விதிவிலக்கு அல்ல என்பதையே காட்டுகிறது.

பெண்களை காதலிப்பது, உண்மையாக நடந்து கொள்வதில் இங்கிலாந்து ஆண்கள் முதலிடத்தில் உள்ளதாக கருத்துக் கணிப்பில் கூறப்பட்டுள்ளது. எனினும் 42 சதவீதம் பேர் மனைவியை ஏமாற்றுவதாக ஒப்புக் கொண்டுள்ளனர். ஜேர்மனியில் 46 சதவீதம் பேர் மனைவியை ஏமாற்றுகின்றனர் எனக்தெரியவந்துள்ளது.

# ராகுலுக்கு முத்தமிட்ட பெண் கணவரால் எரித்துக்கொலை

## அசாமில் பரபரப்பு

மகளிர் அமைப்பினரிடையே உரையாற்றிய ராகுல் காந்திக்கு ஒரு பெண் முத்தம் கொடுத்து வரவேற்றார். அந்தப் பெண் எரித்துக் கொல்லப்பட்டுள்ளது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த பெப்ரவரி 27ஆம் திகதி காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தி அசாமில் சுற்றுப் பயணம் செய்தார். அப்போது, அசாமில் மகளிர் அமைப்பினரிடையே உரையாற்ற வந்த ராகுலை, போன்டி என்ற காங்கிரஸ் பெண் கவுன்சிலர் நெற்றியில் முத்தமிட்டு வரவேற்பு அளித்தார்.

ராகுலுக்கு முத்தம் கொடுத்து வரவேற்றதை விரும்பாத அவரது கணவர் இவரின் செயலால் பெரும் அதிர்ச்சி அடைந்தாராம். இதை அடுத்து இருவருக்கும் இடையே பெரும் வாக்குவாதம் மூண்டுள்ளது. கைகலப்பில் ஈடுபட்ட நிலையில் அவர் தனது மனைவியை தீவைத்து எரித்துள்ளார். தானும் தீவைத்துக் கொண்டு தற்கொலைக்கு முயன்றுள்ளார்.

அக்கம் பக்கத்தில் உள்ளவர்களால் மீட்கப்பட்ட இருவரும் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். இதில் அந்தப் பெண் உயிரிழந்ததாகவும், கணவர் தீக்காயங்களுடன் போராடுவதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

இருவரும் தற்கொலைக்கு முயன்றனரா அல்லது போன்டிக்கு தீவைத்த அவரது கணவர் தானும் தீவைத்துக்கொண்டாரா என்பது குறித்து குழப்பமான நிலை நிலவுவதாகவும் இது குறித்து விசாரித்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# சிவில் பாதுகாப்பு குழுக்களுக்கு வவுனியாவில் வலுவூட்டும் நிகழ்வு



வவுனியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சிவில் பாதுகாப்பு குழுக்களை வலுவூட்டும் நிகழ்வு நேற்று வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் இடம் பெற்றது.

வட மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர அதிதியாகக் கலந்து கொண்டிருந்த இந் நிகழ்வில் வவுனியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வவுனியா மற்றும் செட்டிகுளம் பிரதேச செயலகங்களுக்குட்பட்ட 70. கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த சிவில் பாதுகாப்புக் குழுப் பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது குற்றச் செயல்களை கட்டுப்படுத்தல், ஊழலை இல்லாதொழிக்கும் செயற்பாடுகளை முன்னெடுக்கும் நோக்கோடு சிவில் பாதுகாப்பு குழுக்களுக்கு வலுவூட்டும் வகையில் இந் நிகழ்வு ஏற்படுத்தப்பட்டுள்ளதாக வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்திருந்தார்.

இதேவேளை, சிவில் பாதுகாப்புக் குழுக்களிடமிருந்து சமூகப் பிரச்சினைகள் தொடர்பிலான கருத்துக்கள் கோரப்பட்டதுடன் அவற்றுக்கான தீர்வுகள் விரைவில் வழங்குவதாகவும் வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்திருந்தார்.

இந்நிகழ்வில் வவுனியா அரசாங்க அதிபர் பந்துல ஹரிச்சந்திர, வவுனியா பிரதேச செயலர் கா.உதயராசா, கிராம அலுவலர்கள் சிவில் பாதுகாப்பு குழு பிரதிநிதிகள், வவுனியா, கிளிநொச்சி பிராந்தியப் பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் உட்பட பொலிஸ் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

# சம்புக்குளத்தை திருத்துமாறு மண்டைதீவு மக்கள் கோரிக்கை

மண்டைதீவு சம்புக்குளத்தை துப்புரவு செய்து ஆழமாக்கி நீரைத் தேக்குவதற்கான நடவடிக்கைகளை, உரியவர்கள் மேற்கொள்ள வேண்டும் எனவும் அதற்கான நிதி ஒதுக்கீட்டை உரிய வேளையில் பயன்படுத்தி இக் குளப்பணிகளை மேற்கொள்ள வேண்டும் என கமநல அமைப்பினரும், மக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மண்டைதீவின் முக்கிய குளங்களில் ஒன்றான சம்புக்குளம் ஊரியவயல், வாகையடி, உப்புக்காரி, தில்லைக்குடா பகுதி வயல்களின் நீரைத்தேக்கி வைக்கும் பிரதானமாக இடமாகும்.

இதன் வறட்சியினால் அருகிலுள்ள கிணறுகளும் வற்றிப் போகும் அபாயம் உள்ளது. இக்குளம் தூர்வாரப்படாமையால் அதிக நீர் தேக்கும் சாத்தியம் காணப்படவில்லை.

இதனால் விவசாயிகள் பெரும் கஷ்டங்களை அனுபவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே இக்குளத்தின் திருத்த வேலைக்காக ஒதுக்கப்பட்ட நிதியை திரும்பவிடாது அதன் புனரமைப்பை மேற்கொள்ள உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (23)

# எம்.ஜி.ஆரின் உருவச்சிலை கல்வியங்காட்டில் அமைக்க ஏற்பாடு

(யாழ்ப்பாபணம்)

எம்.ஜி.ஆர்.நற்பணிக் கழகத்தின் தலைவர் இ.சுந்தரலிங்கத்தின் தனி முயற்சியினால் அமரர் எம்.ஜி.ஆரின் உருவச்சிலை ஒன்று நிறுவப்படவுள்ளது. கல்வியங்காடு சந்தியில் இச்சிலை விரைவில் அமைக்கப்படவுள்ளது.

புரட்சி நடிகரும், தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சருமான அமரர் எம்.ஜி.ஆரின் மீது அதீத பற்றுக் கொண்ட யாழ். எம்.ஜி.ஆர் என அழைக்கப்படும் கோப்பாய் தெற்கை சேர்ந்த இ.சுந்தரலிங்கம், எம்.ஜி.ஆர் வாழ்ந்த காலத்தில் பல தடவைகள் தமிழகம் சென்று அவரைச் சந்தித்து அவருடன் பல புகைப்படங்களை எடுத்துக் கொண்டவர்.

தற்போது கூட எம்.ஜி.ஆரின் பிறந்த தினமான ஜனவரி 17 ஆம் திகதி ஏழைகளுக்கு இலவசமாக உடுபிடவைகள் வழங்குவதை இவர் வழக்கமாகக் கொண்டுள்ளார்.

எம்.ஜி.ஆருக்கான உருவச்சிலை ஆறு அடி உயரத்தில் நிறுவப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இச் சிலையை நிறுவுவதற்கு ஆதரவு தெரிவித்த யாழ்.மாநகர சபை முதல்வர் மற்றும் ஆளும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு எம்.ஜி.ஆர். நற்பணிக் கழகத்தின் சார்பில் யாழ். எம்.ஜி.ஆர்.இசுந்தரலிங்கம் தனது மனம் திறந்த நிறைந்த நன்றியைத் தெரிவித்துள்ளார். (137)

## அரசியல்....

பாரியூருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்விடுதியின் முழுமையான தேவைகள் தொடர்பில் வடமாகாண முதலமைச்சரிடமும், வடமாகாண ஆளுநரிடமும் கிருபாகரன் கோரிக்கை விடுத் துள்ளதைச் சுட்டிக்காட்டிய அமைச்சர் கோரிக்கைகள் தொடர்பில் முழுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியமானது என்று தெரி வித்ததுடன், இது விடயத்தில் தாம் கூடிய கவனம் எடுப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

இந்நாட்டின் ஏனைய மாகாணங்களை விடவும் வடமாகாணத்திற்கே அ[illegible]ளவான நிதி அரசினால் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், அந்த வகையில் மாகாணக் கல்வி அமைச்சரும், அமைச்சின் செயலாளரும் மேற்படி கோரிக்கையைக் கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தார்.

அத்துடன், இன்றிருக்கும் இச்சூழலைப் புறந்தள்ளிவிட்டு, இருப்பதைப் பாதுகாத்துக் கொண்டு நடைமுறைச்சாத்தியமான வழியில் தீர்வுகாண வேண்டியது அவசியமாகும்.

குறிப்பாக, அதிகாரப் பகிர்வு எம்மிடம் இருக்கிறது. எனவே, சமகாலத்தில் எமக்குத் தேவை யானவற்றைப் பெற்றுக் கொள்வதற்காக இருப்பதைப் பாதுகாத்துக் கொண்டே நாம் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் முன்னாள் தலைவர் யோகேந்திரநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கல்லூரியின் பழைய மாணவரும், விடுதியை நிர்மாணித்தவருமான கரன் என்று அழைக்கப்படும் லயன் கரன், ஜேர்மன் நாட்டின் தூதுவர் டொக்டர் ஜோகன் மோர் ஹார்ட், வடமாகாண ஆளுநர் சந்திரசிறி, வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

முன்னதாக, அதிதிகள் அழைத்து வரப்பட்டதைத் தொடர்ந்து மாணவர் விடுதி யினை திரு.திருமதி லயன் கரன் தம்பதிகள் திறந்து வைத்தனர்.

இக்கல்லூரியில் முன்னர் இருந்து வந்த மாணவர் விடுதி நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக அழிவடைந்ததன் பின்னர், பழைய ப[illegible]வரான லயன் கரன், புலம்பெயர்ந்து ஜேர்மனியில் வசித்து வரும் நிலையில், 6 கோடி ரூபா செலவில் மாணவர் விடுதிக்கென இரண்டு கட்டடத் தொகுதிகளை அமைத்துக் கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கையில்...

யாளர் நவநீதம்பிள்ளை இலங்கைக்கு மேற்கொண்ட விஜயத்தின் போது செய்யப்பட்ட பரிந்துரைகள் எதனையும் இலங்கை அரசாங்கம் இது வரையில் கவனத்திற் கொள்ளாமை வருத்தமளிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல் தொடர்பிலான சகல விதமான உதவிகளையும் இலங்கை அரசாங்கம் நிராகரித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக மனித உரிமை மீறல்கள் மற்றும் குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல் தொடர்பிலான பொறிமுறைமை ஒன்றை உருவாக்க தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதாக ஐக்கிய நாடுகள் அமைப்பு வழங்கிய பரிந்துரைகளை இலங்கை அரசாங்கம் உதாசீனம் செய்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை விவகாரத்தில் காத்திரமான நடவடிக்கை எடுக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பு சர்வதேச சமூகத்திற்கு காணப்படுகின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உள்நாட்டு ரீதியில் நம்பகமான விசாரணைகள் நடத்தப்படாவிட்டால் சர்வதேச விசாரணைகளை வலியுறுத்த வேண்டியது அவசியமானது என தெரிவித்துள்ளார்.

நிலக்கண்ணி வெடி அகற்றுதல், சிறுவர் போராளிகளை சமூகத்துடன் மீள இணைத்தல், யுத்த வலய பிரதேசங்களை மீளக் கட்டியெழுப்புதல் உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுள்ள பணிகள் வரவேற்கப்பட வேண்டியது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## நவிப்பிள்ளையின்...

அதேவேளை, தெற்கு, மத்திய ஆசியப் பிராந்தியத்துக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் நிஷா தேசாய் பிஸ்வால் தமது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள செய்தியில், நல்லிணக்கம் அல்லது போர்க்குற்றங்கள், மனிதஉரிமை மீறல்கள் தொடர்பாக பொறுப்புக்கூறுவது அல்லது நீதி வழங்குவதில் இலங்கையில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

## 'ஆவா' குழுத்...

வந்ததாக கூறப்படும் 'ஆவா' (அதன் தலைவர் ஆவா வினோ தன் உட்பட) குழுவைச் சேர்ந்த 13 பேர் கடந்த ஜனவரி மாதம் 6ஆம் திகதி கைது செய்யப் பட்டனர். கோப்பாய் பொலி ஸாரினால் கைது செய்யப்பட்ட 11 பேர் யாழ். நீதிமன்றத்தினாலும், அச்சுவேலிப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட 2 பேர் மல்லாகம் நீதிமன்றத்தினாலும் விளக்கமறியலில் வைக் கப்பட்டனர்.

இந்நிலையில் கடந்த ஜன வரி 31ஆம் திகதி மேற்படி வழக்கு யாழ்ப்பாணம் நீதிமன்றத்தினால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, மேற்படி குழுவிற்கு பிணை வழங்கும்படி அந்தக் குழு சார்பாக மன்றில் ஆஜராகியி ருந்த சட்டத்தரணிகள், நீதிபதியிடம் கோரியிருந்தனர்.

இதுதொடர்பாக கோப்பாய் பொலிஸார் எதுவித எதிர்ப்பும் தெரிவிக்காத நிலையில் அந்தக்குழுவின் 8 பேரை நிபந்தனையின் அடிப்படையில் நீதிபதி பிணையில் விடுவித்ததுடன், மிகுதி 3 பேரும் கைக்குண்டு வைத்திருந்த குற்றச்சாட் டில் பெப்ரவரி 13 வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

மேற்படி வழக்கு கடந்த 13ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, மூவரில் இருவர் தலா 5 இலட்சம் பெறுமதியான மூன்று சரீரப்பிணையில் செல்ல நீதிபதி அனுமதியளித்ததுடன், குழுவின் தலைவரினை எதிர் வரும் 28ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டிருந்தார்.

இந்நிலையில் மேற்படி வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, ஆவா குழுவின் தலைவரை எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

அச்சுவேலிப் பொலிஸாரினால் ஜனவரி 6ஆம் திகதி கைது செய்யப்பட்ட இருவரும் ஜனவரி 22ஆம் திகதி கைது செய்யப்பட்ட மேலும் மூவருமாக மொத்தம் ஐந்து பேரும், மல்லாகம் நீதவான் நீதிமன்ற நீதிபதி பஷிர் மொஹமட் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்டு தொடர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## இலங்கையின்...

இந்தத் தீர்மான வரைவில், அமெரிக்காவுக்கும், ஏனைய முக்கியமான சக்திகளுக்கும் இலங்கை ஒரு மிகப்பெரிய மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த நாடு என்றும், தீவிரவாதம் மற்றும் கடற்கொள்ளைக்கு எதிரான போரில், அமெரிக்காவின் முக்கியமான பங்காளி என்றும், குறிப்பிடப்பட்டுள்ளது.

புதிதாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள தீர்மான வரைவில், போரின் போது இருதரப்பினாலும் இழைக்கப்பட்டதாக எழும் குறைகளைக் களைய, இலங் கையின் இறைமை, உறுதிப்பாடு, ஆகியவற்றை கவனத்தில் கொண்டு உள்நாட்டு பொறி முறைக்கு ஆதரவு வழங்குவது குறித்து அமெரிக்காவும், அனைத்துலக சமூகமும் கவனம் செலுத்த வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

குறிப்பாக, தென்னாபிரிக்க பாணியிலான உண்மை நல்லிணக்க ஆணைக்குழு ஒன்றை அமைத்து காயங்களை ஆற்றலாம் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேவேளை, இலங்கை அரசாங்கம், மத, ஊடக சுதந்திரத்தை முன்னேற்ற வேண்டும் என்றும், ஊடகவியலாளர்கள், ஊடக நிறுவனங்கள், மத வழிபாட்டு இடங்கள், மீதான தாக்குதலுக்குப் பொறுப்பாளர்களை நீதியின் முன் நிறுத்த வேண்டும் என்றும், வலியுறுத்தப்பட்டுள்ளது.

## மாங்குளத்தில்...

28 ஆம் திகதி அன்று பெற்றோர்கள் தொழிலுக்கு சென்ற பின்னர் முற்பகல் 11.30 மணியளவில் வீட்டிலிருந்து ஏ9 வீதிக்கு குறித்த சிறுவன் சென்றுள்ளதனை அயலவர்கள் கண்டுள்ளனர். இதன் பின்னர் குறித்த சிறுவன் வீடு திரும்பவில்லை. இதனையடுத்து பெற்றோர்கள் கனகராயன்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

காணமற்போன சிறுவன் மாங்குளம் மகா வித்தியாலயத் தில் தரம் 6 இல் கல்வி கற்கும் மாணவன் என்பது குறிப்பிடத்தக்கது. சிறுவன் தொடர்பில் எவருக்கேனும் தகவல் தெரிந்தால் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் அல்லது அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திலோ தகவல் வழங்குமாறு பெற்றோர்கள் உருக்கமாக வேண்டுகின்றனர் தொலைபேசி இலக்கம் 0775907281 (29, 40)

## இலங்கையில் ஊடக...

தலைமையகத்திற்கு அறிவித்த போதும் அவர்கள் ஊடக தணிக்கை மற்றும் தடை பற்றி குறிப்பிட்டிருக்கவில்லை என் ஐ.நா. பேச்சாளர் மார்டின் நெசர்கி கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொழும்பில் உள்ள ஐ.நா குழுவுடன் எனக்கு தற்போது நேரடியான தொடர்புகள் இல்லை. இதனால் என்னால் அவர்களுக்கு பதிலளிக்க முடியாது.

கருத்து சுதந்திரம் மிகவும் முக்கியமானது என்று கருதுகிறேன். குறித்த விடயம் தொடர்பில் செயலாளர் நாயகம் தனது தனிப்பட்ட கருத்துக்களை வெளியிடுவதில்லை என தெரிவித்துள்ளார்.

## மூங்கிலாறு...

முன்தினம் மீட்கப்பட்டன.

இந்த நிலையில் படையினர் தரப்பினர் மேற்கொண்ட தாக்குதலில் கொல்லபட்டவர்களின் எலும்பு கூடுகளே இவ்வாறு மீட்கப்பட்டிருப்பதாக சில தரப்பினர் குற்றச் சாட்டுகளை முன்வைப்பதாகவும், ஆனால் அவை உண்மைக்குப் புறம்பான செய்தி என்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிறையிலுள்ள பிரிட்டன் பிரதிநிதிகளின் விடுதலையில் தலையிட முடியாது

## ஆலோசனைப் பகுதி தூதுவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் சட்ட திட்டங்களுக்கு அமைய கைது செய்யப்பட்டு சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பிரித்தானிய கைதிகளின் விடுதலை தொடர் பில் எமது அரசாங்கம் எதுவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாது என பிரித்தானியத் தூதரகத்தின் ஆலோசனைப்பகுதி தூதுவர் ஜோன்நீல் தெரிவித்தார்.

சிறைக்கைதிகளின் விடுதலைக்கு அந்த நாட்டு அரசாங்கம் தான் நடவடிக்கை எடுக்க முடியும் அதேபோன்று இலங்கை அரசாங்கமும் சிறைக் கைதிகளின் விடுதலைக்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர எம்மால் எதுவும் செய்ய முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள பிரித்தானிய பிரஜைகளின் நலன்சார் பிரச்சினைகளுக்கு உதவிகளை வழங்கும் முகமாக பிரித்தானிய தூதரகத்தின் ஆலோசனைப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட சந்திப்பு ஒன்று நேற்றுக் காலை யாழ்ப்பாணத்தில் எக்ஸ்போ நெற் விடுதியில் நடைபெற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சிறைக்கைதிகளின் விடுதலைக்கு அந்த நாட்டு அரசாங்கம் தான் நடவடிக்கை எடுக்க முடியும் அதேபோன்று தான் இலங்கை அரசாங்கமும் சிறைக்கைதிகளின் விடுதலைக்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர எம்மால் எதுவும் செய்ய முடியாது.

இலங்கையின் சட்டதிட்டங்களுக்கு அமைய கைது செய்யப்பட்டு சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பிரித்தானியக் கைதிகளின் விடுதலை தொடர்பில் எமது அரசாங்கம் எதுவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாது.

எனினும் அவர்களுக்கான மருத்துவம் உள்ளிட்ட நலன்சார் செயற்பாடுகளிலும் நாம் ஈடுபட்டு வருகின்றோம். அந்த வகையில் மரணமான கோபிதாஸ் சிறையில் இருக்கும் காலத்தில் அவருக்கு வேண்டிய உதவிகளை மேற்கொண்டு வந்தோம்.

அத்துடன் அவரது நிலை குறித்தும் அவருடைய உறவினர்களுக்கும் தெரிவித்திருக்கிறோம். இவ்வாறான செயற்பாடுகளையே எம்மால் மேற்கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வாகனம் மீது கடும் தாக்குதல்

## ஒருவர் படுகாயம்

யாழ்.ஏழாலை வடக்கில் வைத்து வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வாகனத்தின் மீது இனந்தெரியாத நபர்கள் கடந்த வெள்ளிக்கிழமை இரவு தாக்குதலை மேற்கொண்டனர் இதனால் வாகனத்தில் பயணித்த ஒருவர் படுகாயமடைந்த நிலையில் தெல்லிப்பளை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஊழியர்களை அவர்களின் இருப்பிடங்களுக்கு கொண்டு சென்று விடும் வாகனம் மீதே தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

8 பேர் கொண்ட கொண்ட குழுவொன்று கற்கள் மற்றும் பொல்லுகளால் தாக்கி வாகனத்தினை, சேதமாக்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருவ்தாகவும், எவரும் கைது செய்யப்படவில்லையெனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# ராஜீவ் கொலை வழக்குத் தீர்ப்பு; மறு சீராய்வு செய்யக் கோரி மனு

(புதுடில்லி)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி கொலை வழக்கில் விதிக்கப்பட்ட மரணதண்டனையை இரத்துச் செய்யும் தீர்ப்பை மறு சீராய்வு செய்யுமாறு கோரி இந்திய மத்திய அரசு உயர்நீதிமன்றத்தில் நேற்று மனு தாக்கல் செய்துள்ளது.

இந்த வழக்கில் குற்றவாளிகளாக காணப்பட்ட முருகன், சாந்தன் மற்றும் பேரறிவாளன் ஆகியோருக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை கடந்த மாதம 18 ஆம் திகதி இந்திய உயர்நீதிமன்றம் ஆயுள் தண்டனையாக குறைத்து தீர்ப்பளித்திருந்தது.

இவர்கள் ஏற்கனவே தாக்கல் செய்திருந்த கருணை மனுக்களை நிராகரிப்பதற்கு காலம் தாழ்த்தப்பட்டதையே உயர்நீதிமன்றம் இந்த தீர்ப்பிற்கான காரணமாக விளக்கியிருந்தது.

இந்த நிலையிலேயே மத்திய அரசாங்கத்தின் சார்பில் இந்த தீர்ப்பினை ஆட்சேபித்து நேற்று மறு சீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக த இந்து செய்தி வெளியிட்டுள்ளது.

ராஜ்வ் காந்தி கொலை வழக்கின் குற்றவாளிகளாக காணப்பட்ட மூவருக்குமான மரண தண்டனையை இரத்துச் செய்து வழங்கப்பட்ட தீர்ப்பை மறு சீராய்வு செய்யுமாறு இந்த மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மரண தண்டனையை இரத்துச் செய்யுமாறு கோரி பிரதிவாதிகள் தாக்கல் செய்த மனு இந்திய உயர்நீதி மன்றத்தின் அரசியல் சாசன அமர் விலேயே விசாரணை செய்திருக்க வேண்டும் எனவும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய குறித்த வழக்கின் தீர்ப்பினை உயர்நீதிமன்றத்தின் மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் வழங்கியுள்ளமை சட்ட ஆளுமைக்கு புறம்பானது என இந்திய மத்திய அரசாங்கம் உயர்நீதிமன்றத்தில் அறிவித்துள்ளது.

# விரிவுரையாளர்களுக்கும் தலைமைத்துவப் பயிற்சி

(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கும் தலைமைத்துவப் பயிற்சிகளில் விரிவுரையாளர்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்ற யோசனையை உபவேந்தர்களின் ஒன்றியம் முன் வைத்துள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்கள் சிலர் உபவேந்தர்களின் ஒன்றியத்திடம் இந்த யோசனையை முன்வைத்திருந்தனர். இதனை ஆராய்ந்த ஒன்றியம் குறித்த யோசனையை உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்கவிடம் முன்வைத்துள்ளார்.

மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள தலைமைத்துவப் பயிற்சி காரணமாக அவர்களிடம் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் அப்படியான மாணவர்களுடன் இணைந்து பணியாற்றும் போது விரிவுரையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியத்தை போக்க விரிவுரையாளர்களையும் பயிற்சிகளில் சேர்த்து கொள்ள வேண்டும் என தாம் கோரிக்கை விடுத்துள்ளதாக பேராதனை பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் ஒருவர் தெரிவித்தார்.

# ஆசிய கிண்ணத் தொடர்

## கற்றுக்குட்டி ஆப்கானிடம் வீழ்ந்தது பங்களாதேஷ்



(படுல்லா)

ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடரில் நேற்று நடந்த பங்களாதேஷிடனான ஆட்டத்தில் ஆப்கானிஸ்தான் 32 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் அணி ஆப்கானை முதலில் துடுப்பெடுத்தாட அழைத்தது. இதன்படி முதலில் ஆடிய ஆப்கான் அணி 50 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 254 ஓட்டங்களை எடுத்தது. அவ்வணி சார்பாக அஷார் ரணிக்சாய் 90 சமுல்லா சென்வாரி 81 ஓட்டங்களை எடுத்தனர். பந்துவீச்சில் அரபாத் அனி 2 விக்கெட்டை கைப்பற்றினார்.

பதிலளித்து ஆடிய பங்களாதேஷ் 47.5 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 222 ஓட்டங்களைப் பெற்றது. மொபினுள் ஹக் 50, நசீர்ஹுசைன் 41 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் சபுர் சத்ரன், ஹமீட் ஷசன், தலா 2, மொகமட் நபி 3 விக்கெட்டைக் கைப்பற்றினர். போட்டியின் ஆட்ட ந…க னாக சமுல்ல சென்வாரி தேர்வா னார்.

# மேற்குலக ஆக்கிரமிப்பிற்கு காரணம் தேவையில்லை

## அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தெரிவிப்பு

சில மேற்குலக நாடுகள் தாம் நினைக்கும் நாடுகளை ஆக்கிரமிக்க ஏதுவான காரணங்கள் அவசியமில்லை என மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

கம்பஹா நகரில் நடைபெற்ற ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் சில மேற்குலக நாடுகள் வேறு நாடுகளை கைப்பற்ற மேற்கொண்ட முயற்சிகளின் போது அதற்கு ஏதுவான காரணங்கள் இருக்கவில்லை என்பதற்கு தெளிவான சாட்சியங்கள் இருக்கின்றன.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான சர்வதேச சக்திகளுக்கு, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையும் படையினரையும் சர்வதேச நீதிமன்றத்திற்கு முன் கொண்டு செல்லும் …வ இருக்கின்றது.

ஆனால் நாட்டில் வாழும் பெரும்பாலான மக்கள் ஜனாதிபதியுடன் உள்ளனர். எதிர்வரும் தேர்தலில் இதனை வெளிகாட்டுவதன் மூலம் வெளிநாட்டு சக்திகளின் அந்த முயற்சிகளை மேலும் வலுவற்றதாக முடியும் என்றார்.

# மஞ்சள் கடவையில் மோ.சைக்கிள்; உரிமையாளர்கள் மீது வழக்கு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள மஞ்சள் கடவையில் மோட்டார் சைக்கிள்களை நிறுத்தி வைத்தவர்கள் யாழ்ப்பாணப் போக்குவரத்துப் பொலிஸாரினால் நேற்றைய தினம் பிடிக்கப்பட்டதுடன் அவர்களுக்கெதிராக நேற்யை தினம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாக யாழ். பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்தனர்.

மஞ்சள் கடவையில் மோட்டார சைக்கிள்களை நிறுத்தி வைத்த 4 மோட்டார் சைக்கிள் உரிமையாளர்களுக்கு எதிராகவே வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் இது தொடர்பான விழிப்புணர்வு இல்லாத காரணத்தினால் அநேகமான மஞ்சள் கடவைகளில் வாகனங்களை நிறுத்திவிட்டுச் செல்லும் நிலைமை காணப்படுகின்றது.

இனிவரும் காலங்களில் அவ்வாறு மஞ்சள் கடவையில் வாகனங்களை நிறுத்திச் செல்வோர் பிடிக்கப்பட்டு நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்படுவார்கள் என போக்குவரத்துப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

கடந்த இரு மாதங்களுக்கு முன்னர், வைத்தியசாலைக்கு நோயாளர்களைக் கொண்டு வரும் அம்புலன்ஸ் வண்டிகள் உள் நுழைவதற்கு சிரமப்படும் விதத்தில் வைத்தியசாலை வாயிலுக்கு எதிரே மோட்டார் சைக்கிள்கள்ள நிறுத்திவிட்டுச் சென்றவர்களுக்கு எதிராகவும் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(25)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 மார்ச் 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.